# இயேசுவின் வல்லமையான நாமம்



ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது, இந்தியா, பெங்களூர்.

தற்போதைய பதிப்பு: 2025

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd floor, 7th main, HRBR layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043,
Karnataka, INDIA.

**தொலைபேசி:** +91-80-25452617
**மின்னஞ்சல்: bookrequest@apcwo.org**
**இணையதளம்: apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து (BSI), தமிழ் பழைய பதிப்பு - நியூ ஆர்த்தோ) எடுக்கப்பட்டு, பைபிள் சொசைட்டி ஆப் இந்தியா மூலமாக வெளியிடப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து **apcwo.org/give** என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள “ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்” என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**

**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil — The Mighty Name of Jesus)

# இயேசுவின் வல்லமையான நாமம்

*வார்த்தையினாலாவது கிரியையினாலாவது,*
*நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம்*
*கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து,*
*அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை*
*ஸ்தோத்திரியுங்கள்.*

*கொலோசெயர் 3:17*

# பொருளடக்கம்

அறிமுகம்

1. எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் 1
2. நாமத்திற்குப் பின்னால் உள்ள நபர் 9
3. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய நாமங்களின் வெளிப்பாடு 22
4. என் பிதாவின் நாமத்தினால் 42
5. இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை 54
6. பரிசுத்த ஆவியானவரான தேவன் இயேசுவின் நாமத்திலே இங்கே இருக்கிறார் 63
7. இயேசுவின் நாமத்தை நாம் பயன்படுத்தும்போது என்ன நடக்கிறது 68
8. இயேசுவின் நாமத்தை விசுவாசியுங்கள் 76
9. இயேசுவின் நாமத்தில் 82
10. இயேசுவின் நாமத்தில் மன்னிப்பு 88
11. இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பு 91
12. இயேசுவின் நாமத்தில் நித்திய ஜீவன் 93
13. இயேசுவின் நாமத்தினால் கழுவப்பட்டோம், பரிசுத்தமாக்கப்பட்டோம், மற்றும் நீதிமான்களாக்கப்பட்டோம் 95
14. இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் 98
15. இயேசுவின் நாமத்தில் ஜெபியுங்கள் 102
16. இயேசுவின் நாமத்தில் ஸ்தோத்திரியுங்கள் மற்றும் தொழுதுகொள்ளுங்கள் 105

17. எல்லா காரியங்களையும் இயேசுவின் நாமத்தில் செய்யுங்கள் 108
18. நாம் இயேசுவின் நாமத்தில் கூடிவருகிறோம் 112
19. இயேசுவின் நாமத்தில் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள், கனம்பண்ணுங்கள், மற்றும் ஆசீர்வதியுங்கள் 115
20. இயேசுவின் நாமத்தில் பிரசங்கியுங்கள், போதகம் பண்ணுங்கள் மற்றும் ஊழியம் செய்யுங்கள் 119
21. இயேசுவின் நாமத்தில் குணப்படுத்துங்கள் 123
22. இயேசுவின் நாமத்தில் அற்புதங்களைச் செய்யுங்கள் 126
23. இயேசுவின் நாமத்தில் பிசாசுகளை துரத்துங்கள் 128
24. இயேசுவின் நாமத்தில் பெரிய கிரியைகளைச் செய்யுங்கள் 132
25. இயேசுவின் நாமத்தை தவறாகப் பயன்படுத்துதல் 135
26. இயேசுவின் நாமத்திற்காக துன்புறுத்தப்படுகிறோம் 138
27. இயேசுவின் நாமத்திற்காக தியாகம் செய்வது 141
28. நாம் இயேசுவின் நாமத்தைத் தரித்துக்கொண்டுள்ளோம் 143
29. இயேசுவின் நாமத்தில் அறிவுரை கூறுங்கள் 145
30. இயேசுவின் நாமம் சதாகாலங்களிலும் உள்ளது 148

# அறிமுகம்

ஒவ்வொரு விசுவாசியும் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தை அழைக்கவும், சொல்லவும், பயன்படுத்தவும் கூடிய அற்புதமான பாக்கியத்தைப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டுள்ளார்கள். இயேசுவின் சீஷர்களும், ஆரம்பகால திருச்சபையின் விசுவாசிகளும் இயேசுவின் நாமத்தை பயன்படுத்துவதன் மூலம் தங்கள் வசம் இருந்த அதிகாரத்தைப் புரிந்துகொண்டு அதன்படி செயல்பட்டார்கள்.

இயேசுவின் நாமத்தின் வல்லமையை மீண்டும் கண்டறிய விசுவாசிகளுக்கு உதவ இந்த புத்தகம் முயற்சிக்கிறது மற்றும் அன்றாட வாழ்க்கையில் அந்த நாமத்தின் வல்லமையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் கற்பிக்கிறது. இயேசுவின் நாமத்தின் வல்லமையில் நடக்க நாம் கற்றுக் கொள்ளும்போது, நாம் அதிகாரத்திலும், ஆதிக்கத்திலும், பரிபூரண சமாதானத்திலும், தேவன் அருளும் அனைத்து ஏற்பாடுகளிலும் செயல்பட முடியும்.

*இயேசுவே! பாவிக்கு உந்தன் நாமமோ*

*ஆரோக்கியம் ஜீவனாம்!*

*பயமோ துக்க துன்பமோ*

*ஓட்டும் இன்கீதமாம்.*

(1739ஆம் ஆண்டு சார்லஸ் வெஸ்லி எழுதிய *“எத்தனை நாவால் பாடுவேன்”* என்ற பாடலில் இருந்து)

விசுவாசிகளாகிய நாம், வாழ்க்கையில் தனிப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அது வாழ்க்கை

சூழ்நிலைகள், வெளிப்படையான தேவைகள், எழும் புயல்கள், நம் வழியில் மலைகள், நம்மை நோக்கி வரும் நோய் மற்றும் வியாதி , அல்லது எதிரி நமக்கு எதிராக முயற்சிக்கும் செயல்களாக இருக்கலாம், ஆனால், நமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் நாம் எழலாம் மற்றும் இந்த சூழ்நிலைகள் மீது ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இயேசுவின் நாமத்தை பயன்படுத்துவதன் மூலம் இந்த அதிகாரம் நம்முடையது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நாம் ஊழியம் செய்யும்போது, இயேசுவின் நாமத்தில் தைரியமாக ஊழியம் செய்யவேண்டும். கர்த்தராகிய இயேசு தம்முடைய கிரியைகளை நாம் செய்வதற்கும், அவரை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் அவருடைய நாமத்தைப் பயன்படுத்த நமக்கு அதிகாரம் அளித்திருக்கிறார்.

சபை இந்த முக்கியமான உண்மையைப் பற்றிய அடிப்படை புரிதலை மட்டுமே கொண்டிருப்பதாகத் தெரிகிறது. முன்னெப்போதும் இல்லாத வகையில், இயேசுவின் நாமத்தில் நம்முடைய சிலாக்கியங்களையும் அதிகாரத்தையும் கண்டறிந்து, அன்றாட வாழ்வில் அதன்படி செயல்படும் விசுவாசிகளின் தலைமுறையாக நாம் இருப்போம். நமக்கு முந்திய தலைமுறையினரை விட இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் நமக்குக் கிடைக்கும் அனைத்தையும் வெளிப்படுத்துவதில் நாம் மேலும் முன்னேறுவோமாக.

**இயேசுவின் வல்லமையான நாமத்தினால் நடத்தப்படும் இந்த கல்வியானது உங்களுடைய வாழ்வினை வளப்படுத்துவதால், உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் அவருடைய நாமத்தின் வல்லமையால் நீங்கள் வாழ**

**முடியும்! இதனால், எண்ணற்ற நபர்கள் இயேசுவை அறிந்து கொள்ள நீங்கள் அவர்களை ஆசீர்வதிப்பதற்கான காரணமாக அமையும்!**

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆசிஷ் ராய்ச்சூர்

# 1

# எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்

அரச குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தையை கற்பனை செய்து பாருங்கள். இந்தக் குழந்தைக்கு ஒரு பெயர் வைக்கப்படுகிறது. இதே பெயரில் அங்கே இன்னும் பலர் இருந்தாலும், இந்தப் பெயர் குழந்தையின் தனித்துவத்தை குறிக்கிறது. இது மாத்திரமல்ல, அரச குடும்பத்தில் பிறந்த இந்தக் குழந்தை ராஜபதவியைப் பெறுகிறது மற்றும் அரச சிம்மாசனமும் அரச குடும்பமும் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்தையும். ராஜபதவி பெற்ற குழந்தையின் பெயருடன் ஒரு அரச பட்டம் இணைக்கபடுகிறது. ராஜ்யத்தின் அனைத்து வளங்களும், செல்வாக்கும், சக்தியும் இப்போது அந்தப் பட்டப் பெயருக்குப் பின்னால் உள்ளன. காலப்போக்கில், குழந்தை பெரியவராக வளர்கிறது. இந்த நபர் குறிப்பிடத்தக்க வகையில் நல்ல வாழ்க்கையை வாழ்கிறார், பெரிய விஷயங்களைச் சாதிக்கிறார் மற்றும் அவரது அனைத்து சாதனைகளுக்கும் பெரும் மரியாதை மற்றும் புகழைப் பெறுகிறார் என்று கருதலாம். இப்போது இந்தப் பெயருக்கு இன்னொரு மகத்துவம் இருக்கிறது. மக்கள் இந்த பெயரை அங்கீகரித்து மதிக்கிறதற்கான காரணம், அது யாரை தனித்துவமாக அடையாளம் காட்டுகிறது அல்லது அந்த பெயருடன் இணைக்கப்பட்ட இராஜ்யம் மற்றும் ராஜபதவி காரணமாக மட்டுமல்லாமல் அந்த பெயரின் பின்னணியில் உள்ள நபரின் மகத்துவம், மற்றும் சாதனைகளின் காரணமாகவும் இருக்கலாம்.

இயேசுவின் நாமத்தைப் பற்றிய இந்த மூன்று அம்சங்களையும் வேதத்தில் நாம் பார்க்கலாம்.

## அவர் பிறக்கும்போது பிதா கொடுத்த பெயர்

**மத்தேயு 1:21**

**அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.**

"இயேசு" என்ற நாமம் தேவனின் ஒரே அவதார குமாரனை அடையாளம் காண தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டது மற்றும் வழங்கப்பட்டது. நித்திய வார்த்தையாகிய தேவன் மனித வடிவத்தை எடுத்து, அவதார வார்த்தையாக மாறினார், பிதா அவருக்கு ஒரு பெயரை வைத்தார்—"இயேசு" என்று பெயர். இதை யோசேப்புக்கு அறிவிக்க அவர் ஒரு தேவதூதனை அனுப்பினார். இது அவர் பிறந்தபோது தந்தையால் அவருக்கு வைக்கப்பட்ட பெயர் ஆகும்.

'யெஹோஷுவா' என்ற எபிரேயப் பெயரின் கிரேக்க வடிவமான இயேசு என்ற பெயருக்கு அர்த்தம், "இரட்சகர்" அல்லது "இரட்சிப்பின் தேவன்" என்பதாகும். எனவே, நாம் "இயேசு" என்ற நாமத்தைக் குறிப்பிடும்போது, இரட்சிப்பைக் கொண்டுவரும் நாமத்தை அறிவிக்கிறோம்.

மத்தேயு 1:21ல் உள்ள "இரட்சிப்பார்" என்ற வார்த்தை கிரேக்க வினைச்சொல் *'சோஸோ,'* இது (*சொடீரியா*, "இரட்சிப்பு" என்ற பெயர்ச்சொல்லைப் போல) ஒரு விரிவான சொல், இதில் பின்வருவன அடங்கும்: நித்திய இரட்சிப்பு, பாவ மன்னிப்பு, பாவத்தின் மீதான வெற்றி, நோயிலிருந்து குணமடைதல், போராட்டத்தில் வெற்றி, எதிரியின் ஒவ்வரு செயல்களில் இருந்து விடுதலை, தீங்கிலிருந்து மீட்பு, ஆபத்திலிருந்து பாதுகாத்தல், மற்றும் முழுமை. இதன் பொருள் என்னவென்றால், "இரட்சிக்கப்படுதல், குணமாக்கப்படுதல், விடுவிக்கப்படுதல், வெற்றி பெறுதல், மீட்கப்படுதல், பாதுகாக்கப்படுதல் மற்றும் முழுமையாக்கப்படுதல்" என்பவைகள் ஆகும்.

புதிய ஏற்பாட்டில் *'சோஸோ'* பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது.

இங்கே சில குறிப்புகள் உள்ளன.

- பாவத்திலிருந்து **இரட்சிப்பு** (மத்தேயு 1:21; எபிரெயர் 7:25)
- **நித்திய இரட்சிப்பு** (யோவான் 3:16-18; மாற்கு 16:16; அப்போஸ்தலர் 4:12; ரோமர் 10:9,10; எபேசியர் 2:8)
- **குணப்படுத்துதல்** (மத்தேயு 9:22; மாற்கு 6:56; மாற்கு 10:52; யாக்கோபு 5:15)
- பிசாசின் சக்திகளிலிருந்து **விடுதலை** (லூக்கா 8:36; யூதா 1:5, "விடுவிக்கப்பட்டது" என்ற வார்த்தை *'சோஸோ'*)
- ஆபத்தில் இருந்து **மீட்பு / பாதுகாத்தல்** (மத்தேயு 8:25; மத்தேயு 14:30; மத்தேயு 27:42; 2 தீமோத்தேயு 4:18, "*மீட்பு*" என்ற வார்த்தை *'சோஸோ'*)
- ஆன்மீக போராட்டம் / ஆபத்திலிருந்து **பாதுகாப்பு** (யோவான் 12:27; 1 தீமோத்தேயு 4:16)
- அடிமைத்தனத்திலிருந்து **சுதந்திரம்** (யூதா 1:5)

நாம் "இயேசு" என்ற நாமத்தை குறிப்பிட்டு அவரை இரட்சகராக அறிவிக்கும்போது, அவர் பாவத்திலிருந்து இரட்சிப்பது மட்டுமல்லாமல், அந்த நாமத்தில் இரட்சிப்பு, பாதுகாப்பு, காவல், குணப்படுத்துதல், விடுதலை, வெற்றி, சுதந்திரம் மற்றும் முழுமையும் உள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அந்த நாமத்தில் முழு இரட்சிப்பும் உள்ளது. இயேசுவின் நாமம் இரட்சிக்கிறது, காப்பாற்றுகிறது, பாதுகாக்கிறது, குணப்படுத்துகிறது, விடுவிக்கிறது, வெற்றியைக் கொண்டு வருகிறது, சுதந்திரத்தை அளிக்கிறது, மற்றும் முழுமைப்படுத்துகிறது!

## நாமத்தை அவர் சுதந்தரித்துக்கொண்டார்

**எபிரெயர் 1:1-4**

**1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன்,**
**2 இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.**
**3 இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.**
**4 இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.**

தேவன் நித்திய வார்த்தையாக இருக்கிறார். அவர் மூலமாகவே உலகங்கள் உண்டாக்கப்பட்டன மற்றும் அவருடைய வல்லமையுள்ள வார்த்தையினால் அனைத்துக் காரியங்களையும் நிலை நிறுத்துகிறார். வார்த்தை மனித உருவாக மாறுவதை தெரிவு செய்து தேவனுடைய குமாரனாக நடந்து கொண்டார். தேவனுடைய குமாரன் என்ற முறையில், நம்மிடம் பேசுகிற தேவனாயிருந்தார். அவர் அவருடைய பிதாவின் மகிமையின் பிரகாசமும், பிதாவின் தன்மையின் சொரூபமுமாயிருந்தார். தேவகுமாரனாக நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார், மற்றும் தேவதூதரைப்பார்க்கிலும் அவ்வளவு அதிகம் மேன்மையுள்ளவரானார். சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமிக்கப்பட்ட தேவகுமாரன் மிகப் பெரிய, அற்புதமான, எல்லையற்ற மேன்மையான, மற்றவற்றை விட மிக மேன்மையான பெயரை சுதந்தரித்துக்கொண்டார். நியாயாதிபதிகள் 13:18ன்படி தூதர்களுக்கும் அதிசயமான பெயர்கள் உண்டு. ஆனால் இந்த நாமமான, இயேசுவின்

நாமம் இவைகள் அனைத்தையும் விட உயர்ந்ததாக இருக்கிறது.

நாம் முன்பே குறிப்பிட்டது போல, ஒரு இராஜ்ஜியத்தில் உள்ள, சுதந்தரவாளி அரசுரிமையை சுதந்தரித்துக்கொள்கிறான். தேவனுடைய இராஜ்யம் அனைத்தும் இயேசுவின் நாமத்தில் நிலைத்திருக்கிறது. தேவனின் இயல்பின் முழுமையும், அவருடைய மகிமையும், மாட்சிமையும், அதிகாரமும், வல்லமையும் இயேசுவின் நாமத்தில் உள்ளது. இந்த நாமம் மிகவும் உயர்ந்த அரசுரிமையை வெளிப்படுத்துகிறது. இந்த நாமத்தை விட உயர்ந்த அதிகாரம், ஆட்சியாளர் அல்லது ராஜா இல்லை. எல்லாவற்றிற்கும் வாரிசாக இருப்பவரின் பெயர் இதுவே, *“அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிறார்”*(1 தீமோத்தேயு 6:15). *“இதுவே “மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டவருடைய”* நாமம் (எபிரெயர் 2:9). மிக உயர்ந்த சிம்மாசனமும் மற்ற அனைவரையும் ஆளும் ராஜ்யமும் இந்த பெயருக்குப் பின்னால் உள்ளது. *“கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்; அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது”* (சங்கீதம் 103:19).

## அவர் செய்த செயலின் காரணமாக அவருக்கு வழங்கப்பட்ட நாமம்

**பிலிப்பியர் 2:5-11**

**5 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;**

**6 அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,**

**7 தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.**

**8 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.**

**9 ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,**
**10 இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,**
**11 பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.**

இது மிகவும் ஆழமானது, *"ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி...எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்"* (வச.9). இயேசு தம்முடைய அவதாரம், பூமியில் வாழ்ந்த வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக சாதித்த காரியங்களின் நிமித்தமாக *"எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்திருக்கிறார்."* அவர் முழு உலகத்தின் பாவங்களுக்கான கிரயத்தை செலுத்தினார். அவர் வீழ்ச்சியை மாற்றினார், சாத்தானை நிராயுதபாணியாக்கி அவனையும், அவனுடைய பிசாசுகளுடைய சேனைகளையும் நிர்மூலமாக்கி நசுக்கினார் மற்றும் கல்லறையிலிருந்து வெற்றிபெற்று எழுந்தார். மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை (அதிகாரம், ஆதிக்கம்) உடையவராயிருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:18).

*"எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டார்"* (கிரேக்க *'ஹூப்பெரூப்சோஓ'*) என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்னவென்றால்: "மற்றவர்களை விட உயர்த்த, மேலான நிலைக்கு உயர்த்தப்பட, உயர்ந்த பதவி மற்றும் அதிகாரத்திற்கு உயர்த்தப்பட, மிகவும் உயர்வான மாட்சிமைக்கு உயர்த்தப்பட." பிதாவானவர் *"கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய*

*பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்"* (எபேசியர் 1:19-22). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் இயேசுவினுடையது (மத்தேயு 28:18). அத்தகைய ஒருவருக்கே இயேசுவின் நாமம் உரியது. இந்த நாமம் மற்ற எல்லா நாமத்திற்கும் மிகவும் மேலானது, ஏனென்றால் அவர் எல்லாவற்றிலும் மேலானவர்.

## அனைத்து நாமத்திலும் மகா பெரியது

**பிலிப்பியர் 2:9-11**

**9 ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,**
**10இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,**
**11பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.**

இயேசுவின் நாமத்தை குறிப்பிடும்போது, வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கவேண்டுமென்று பிதாவாகிய தேவன் தீர்மானித்தார், ஆணையிட்டார் மற்றும் அறிவித்துள்ளார். பரலோகம், பூமி மற்றும் நரகத்தில் உள்ள ஒவ்வொரு சிருஷ்டியும் அவருக்கு அடிபணிந்து, அவரை வணங்கும், மேலும் ஒவ்வொரு நாவும் அவரை ராஜாவாக அங்கீகரிக்கும் மற்றும் அவரது கர்த்தத்துவத்தை ஏற்றுக் கொள்ளும். இயேசுவின் நாமம் எல்லா நாமங்களுக்கும் மேலானது.

அவருடைய நாமம் *"அனைத்து நாமத்திலும் மகா பெரியது"* (வச.9, தி பாஷன் ட்ரான்ஸ்லேஷன்).

## சிந்தனைக்கு

1) அவதார வார்த்தையாகிய தேவகுமாரனுக்கு "இயேசு" என்ற நாமம் வழங்கப்பட்டது...

- பிறந்தபோதே
- அவர் அந்த நாமத்தை சுதந்தரித்துக்கொண்டார்
- அவர் செய்த செயலின் காரணமாக அவருக்கு அந்த நாமம் கொடுக்கப்பட்டது

இந்த மூன்று அம்சங்களில் ஒவ்வொன்றின் முக்கியத்துவத்தைப் பற்றியும், இந்தப் பெயரை அனைத்துப் பெயர்களிலும் அவைகள் எவ்வாறு சிறந்ததாக மாற்றுகின்றன என்பதைப் பற்றியும் விவாதிக்கவும்.

# 2

# நாமத்திற்குப் பின்னால் உள்ள நபர்

ஒரு பெயரின் மகத்துவம் என்பது அந்தப் பெயரை வைத்திருக்கும் நபரின் மகத்துவத்திலிருந்து பெறப்பட்டது என்பதை நாம் அறிகிறோம். பெயருக்குப் பின்னால் உள்ள நபரைப் போலவே பெயரும் சிறந்தது. பெயருக்குப் பின்னால் உள்ள நபரின் மகத்துவத்தை நாம் அறிந்துகொள்ளும் வேளையில், அவர்களுடைய பெயரின் மகத்துவத்தையும் நம்மால் அறியமுடியும். இயேசு கிறிஸ்து என்ற நபரை நீங்கள் அறிந்துகொள்ளும்போது, அவருடைய நாமத்தில் உங்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்படும்.

இந்த அத்தியாயத்தில், பெயருக்குப் பின்னால் உள்ள நபரான இயேசு கிறிஸ்துவின் மகத்துவத்தைப் பற்றி சிந்திக்கிறோம். இது இயேசு யார் என்பது பற்றிய முழுமையான தொகுப்பு அல்ல, ஆனால் யாருடைய பெயரைப் பற்றி படிக்கிறோமோ அந்த நபரை நினைவூட்டுவதற்கான ஒரு சிறிய சுருக்கம் ஆகும். "இயேசு" என்ற பெயருக்குப் பின்னால் உள்ள நபரின் மகத்துவத்தைப் பற்றி சிந்திக்க உங்கள் எண்ணங்களை இதில் சேர்ப்பதற்காக உங்களை வரவேற்கிறேன்.

இயேசுவின் நாமம் யாரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதாலேயே அது பெரியது—இயேசு என்ற நபர், அவர் யார், அவர் என்ன செய்திருக்கிறார், வரவிருக்கும் காலத்தில் அவர் என்ன செய்யப்போகிறார்.

**யேகோவா**—"இயேசு" என்பது தெய்வத்துவத்தில் இருப்பவரின் நாமம். அவர் "வல்லமையுள்ள தேவன் *(ஏல் கிப்போர்)*" "நித்திய பிதா" (ஏசாயா 9:6) என்றும்

அழைக்கப்படுகிறார். அவர் பிதா மற்றும் ஆவியானவருடன் சரிசமமானவர் (1 யோவான் 5:7). அவர் தெய்வத்துவத்தை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துகிறார் (கொலோசெயர் 1:19; கொலோசெயர் 2:9). பிதாவும் ஆவியும் இருப்பது போல அவர் யேகோவாவே (யோவான் 1:1-3; யோவான் 20:28; ரோமர் 9:5; 1 தீமோத்தேயு 3:16; தீத்து 1:3,4; எபிரெயர் 1:8). அவர் "நான் இருக்கிறேன்" என்பவர் (யோவான் 8:58); அவர் இம்மானுவேல், தேவன் நம்மோடிருக்கிறார் (ஏசாயா 7:14; மத்தேயு 1:23). இயேசுவின் நாமத்தை கூப்பிடுவது, உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கும் நித்தியமான, சுயமாக இருக்கும், மாறாத தேவனான யேகோவா தேவனை அழைப்பதாகும்.

---

இயேசுவின் நாமத்தை அழைப்பது என்பது, உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கும் நித்தியமான, சுயமாக இருக்கும், மாறாத தேவனான யேகோவா தேவனை அழைப்பதாகும்.

---

**நித்திய வார்த்தை**—"இயேசு" என்ற நாமம் தேவனுடன் இருந்த மற்றும் தேவனாக இருந்த நித்திய வார்த்தையின் நாமம் ஆகும் (யோவான் 1:1,2). அவர் என்றென்றும் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம்19:13). காணக்கூடிய மற்றும் கண்ணுக்கு தெரியாத உலகங்களில் உள்ள அனைத்தும் அவரால், அவர் மூலமாகவும், அவருக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டன (யோவான் 1:3; எபேசியர் 3:9; கொலோசெயர் 1:16). ஆதியாயிருக்கிறவர், தோற்றுவிப்பவர், எல்லாவற்றிற்கும் மூலகாரணர், எல்லாமே அவரிடமிருந்து, அவர் மூலமாக, மற்றும் அவரால் வந்தன (வெளிப்படுத்தின விசேஷம் 3:14). அவர் எல்லாவற்றுக்கும் முந்தினவராக இருக்கிறார், அவர் எல்லாவற்றையும் நிலைநிறுத்துபவர், பராமரிப்பவர்,

ஒழுங்குபடுத்துபவர் மற்றும் நிறைவு செய்பவர் (கொலோசெயர் 1:17; எபிரெயர் 1:3). காணக்கூடிய மற்றும் கண்ணுக்கு தெரியாத (இயற்கை மற்றும் ஆன்மீக) உலகங்களில் அனைத்தையும் சிருஷ்டிக்க, நிலைநிறுத்த, பராமரிக்க, ஒழுங்குபடுத்த மற்றும் கட்டுப்படுத்தவும் இயேசுவின் நாமத்திற்கு அதிகாரமுள்ளது.

**தேவனுடைய குமாரன்—**"இயேசு" என்ற நாமம் மனிதனாக மாறி, பூமியில் தேவகுமாரனாக நடந்த தேவனுடைய நாமம். இப்படி ஒரு நபர் இதுவரை இருந்ததில்லை, இனிமேல் இருக்கப்போகிறதுமில்லை. அவர் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட அதரிசனமான தேவனுடைய சாயலாயிருக்கிறவர் (2 கொரிந்தியர் 4:4; கொலோசெயர் 1:15; எபிரெயர் 1:3). அவர் பிதாவின் மகிமையின் வெளிப்பாடாக இருக்கிறார் (யோவான் 1:14; எபிரெயர் 1:3). அவர் பிதாவுடன் ஒன்றாயிருக்கிறார், அதனால் நாம் அவரைப் பார்க்கும்போது, பிதாவைப் பார்க்கிறோம் (யோவான் 10:30; யோவான் 14:7,9). அவர் பிதாவின் வார்த்தைகளைப் பேசினார், பிதாவின் செயல்களைச் செய்தார், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார் (எபிரெயர் 10:7). அவர் பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை அறிமுகப்படுத்தினார் (மத்தேயு 4:17). அவர் அனைத்திற்கும் சுதந்திரர் மற்றும் எல்லாவற்றையும் சுதந்தரித்தவர் (எபிரெயர் 1:2,8). அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும், மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதினாலும் தேவனுடைய குமாரனாகக் காட்டப்பட்டார் (ரோமர் 1:4). அவருடைய நிறைவினால், அவர் நம் மீது அளவற்ற கிருபை பொழிந்துள்ளார் (யோவான் 1:16; ரோமர் 5:17). இயேசுவின் நாமத்தைக் குறிப்பிடுவது பிதாவின் மகிமையை வெளிப்படுத்துகிறது, பிதாவின் சித்தத்தை நிலைநிறுத்துகிறது மற்றும் பூமியில் பரலோகத்தைக் கொண்டுவருகிறது.

**தேவ ஆட்டுக்குட்டி—**"இயேசு" என்ற நாமம் பாவமற்ற,

களங்கமற்ற, பரிபூரணமான தேவ ஆட்டுக்குட்டியின் நாமம், அவரால் மட்டுமே உலகின் பாவங்களை நீக்க முடிந்தது (யோவான் 1:29; வெளிப்படுத்தின விசேஷம் 5:6). அவர் உலகத்தோற்றத்திற்கு முன்பே அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டி (1 பேதுரு 1:18-20; வெளிப்படுத்தின விசேஷம்13:8). அவர் நம்மைப் போலவே எல்லா வகையிலும் சோதிக்கப்பட்டார், ஆனால் அவர் பாவம் செய்யாதவராக இருந்தார் (எபிரெயர் 4:15). அவருடைய இரத்தம் பரிசுத்தமானது, பாவமற்றது மற்றும் தூய்மையானது. பரலோக மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுக்கு முன்பாகச் செலுத்தப்பட்ட அவருடைய இரத்தம் நம்முடைய மீட்பைப் பெற்றது (எபிரெயர் 9:11,12). அவர் தம் இரத்தத்தினாலே நம்மை விலைக்கிரயம் கொடுத்து மீட்டு, தேவனுக்கு ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் ஆக்கினார் (எபேசியர் 1:7; கொலோசெயர் 1:13,14; 1 பேதுரு 1:18; 1 கொரிந்தியர் 6:20; வெளிப்படுத்தின விசேஷம் 1:5,6). அவர் பஸ்கா ஆட்டுக்குட்டி (1 கொரிந்தியர் 5:7). அவருடைய இரத்தம் நம்மை மூடி பாதுகாக்கிறது மற்றும் ஒடுக்குகிறவர்களிடமிருந்து நாம் விடுவிக்கப்பட்டதை அறிவிக்கிறது. தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தம் நமக்காகச் செய்ததை நாம் அறிவிக்கும்போது சாத்தானையும் மற்றும் எல்லாப் பிசாசுகளையும் ஜெயிக்கிறோம் (வெளிப்படுத்தின விசேஷம் 12:11). அவர் என்றென்றும் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவ ஆட்டுக்குட்டியாக இருப்பார் (வெளிப்படுத்தின விசேஷம் 22:3). இயேசுவின் நாமத்தில் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இயேசுவின் நாமத்தினாலே நாம் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு நீதிமான்களாக்கப்படுகிறோம். இயேசுவின் நாமத்தால், நாம் முற்றிலும் மீட்கப்பட்டுள்ளோம், சாத்தானுக்கு நம்மீது உரிமை இல்லை, அவனுக்கு நம்மில் இடமில்லை.

**மேசியா, அபிஷேகம் செய்யப்பட்டவர்**—“இயேசு” என்பது மேசியாவின் நாமம், கிறிஸ்து, பரிசுத்த அபிஷேகம்

செய்யப்பட்டவர் (தானியேல் 9:25; சங்கீதம் 2:2,7; மத்தேயு 16:16,17; யோவான் 4:25,26). ஏசாயா தீர்க்கதரிசனம் சொன்ன தாசன் இவர் தான் (ஏசாயா 42:1; ஏசாயா 49:6; ஏசாயா 52:13; ஏசாயா 53:11; மத்தேயு 12:18). அபிஷேகம் செய்யப்பட்டவர் மற்றும் அவரது அபிஷேகம் பிசாசின் ஒடுக்குதல் உருவாக்கும் ஒவ்வொரு சுமையையும், சாத்தானின் ஒவ்வொரு நுகத்தையும் நீக்குகிறது மற்றும் அழிக்கிறது (ஏசாயா 10:27). இயேசுவின் நாமத்தால், பிசாசின் எல்லா ஒடுக்குதல்களும் அகற்றப்பட்டு, சாத்தானின் ஒவ்வொரு நுகமும் அழிக்கப்படுகிறது.

**உலகத்தின் ஒளி**—“இயேசு” என்ற நாமம் உண்மையான ஒளியாக இருப்பவரின் நாமம் (யோவான் 1:9). அவர் அருணோதயம், விடியற்கால வெளிச்சம் (லூக்கா 1:78), மற்றும் பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறார் (2 பேதுரு 1:19; வெளிப்படுத்தின விசேஷம் 2:28; வெளிப்படுத்தின விசேஷம் 22:16). அவர் உலகத்தின் ஒளியாயிருக்கிறார் (யோவான் 8:12). அவரது ஒளி இருளில் பிரகாசிக்கிறது, அவரது ஒளி மனச்சோர்வு, நம்பிக்கையின்மை மற்றும் மனமுறிவை நீக்குகிறது மேலும் எந்த இருளும் அவருடைய ஒளியின் முன் நிற்கவோ அல்லது அவரது ஒளியைக் குறைக்கவோ முடியாது. இயேசுவின் நாமத்தால் இருளின் ஒவ்வொரு செயலும், இருளால் உருவாக்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட அனைத்தும் அழிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன. அந்த வல்லமையுள்ள நாமத்திற்கு முன் இருள் விலகுகிறது.

**நல்ல மேய்ப்பன்**—“இயேசு” என்பது நல்ல மேய்ப்பனின் நாமம் (யோவான் 10:11), ஆடுகளின் பெரிய மேய்ப்பர் (எபிரெயர் 13:20), ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவர் (1 பேதுரு 2:25), மற்றும் பிரதான மேய்ப்பர் (1 பேதுரு 5:4). அவர் தனது ஆடுகளை மென்மையாக வழிநடத்துகிறார், வளர்க்கிறார்,

ஆறுதலளிக்கிறார், குணப்படுத்துகிறார், மீட்டெடுக்கிறார், பாதுகாக்கிறார், மற்றும் காவல்செய்கிறார். இயேசுவின் நாமத்தால், அவருடைய ஆடுகளாகிய நாம் மறைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, காக்கப்படுகிறோம், அவருடைய கையிலிருந்து நம்மை யாரும் பறிக்க முடியாது.

**வழி, சத்தியம், ஜீவன்**—“இயேசு” என்ற நாமம் பிதாவிடத்திற்குச் செல்லும் வழி (யோவான் 14:6). அவரே வாசல் (யோவான் 10:7)—ராஜ்யத்திற்குள் நுழைவதற்கான ஒரே வாசல். அவர்தான் சத்தியம். பொய்கள், ஏமாற்றுதல்கள், வாதங்கள் மற்றும் பகுத்தறிவுகள் அவருக்கு முன்னால் சக்தியற்றவைகள் ஆகிவிடும். அவர் சத்தியம் மற்றும் அவர் மெய்யாகவே மக்களை விடுவிக்கிறவர் (யோவான் 8:31,32,36). அவர் ஜீவனாயிருக்கிறவர்—ஜீவ அப்பம், நித்திய ஜீவனின் ஊற்று (யோவான் 6:33,35,48-51). அவர் ஜீவத் தண்ணீர் (யோவான் 4:10,14; யோவான் 7:37,38; வெளிப்படுத்தின விசேஷம் 21:6; வெளிப்படுத்தின விசேஷம் 22:17). அவர் ஜீவனையும், பரிபூரண ஜீவனையும் கொடுக்கிறார் (யோவான் 10:10). அவரில், நமது தாகம் தணிக்கப்படுகிறது, நமது ஆழ்ந்த ஏக்கங்கள் திருப்தியடைகின்றன. இயேசுவின் நாமத்தில், வழிதவறிப்போனவர்கள் வழியைக் கண்டுபிடிக்கிறார்கள், சத்தியம் முன்னேறுகிறது, விடுவிக்கிறது மற்றும் ஆட்சி செய்கிறது, பாவத்திற்குள் மரித்தவர்கள் நித்திய வாழ்வின் அனுபவத்தை அடைந்து தெய்வீக வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்.

**இரட்சகர்**—“இயேசு” என்பது உலக இரட்சகரின் நாமம் (மத்தேயு 1:21; லூக்கா 2:11; 1 தீமோத்தேயு 1:15; 1 யோவான் 4:14). அவர் முழு உலகத்தின் பாவங்களைச் சுமந்தார் (ஏசாயா 53:4; 1 யோவான் 2:2), நாம் செலுத்த வேண்டிய விலைக்கிரயத்தைச் செலுத்தினார், நாம் மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காக நம் சார்பாக அவர்

பாதாளத்திற்குச் சென்றார். இயேசுவின் நாமத்தினாலே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது மற்றும் நாம் இரட்சிக்கப்பட்டோம். அவருடைய நாமத்தில் இரட்சிப்பு இருக்கிறது!

**குணப்படுத்துபவர்**—"இயேசு" என்பது பெரிய மருத்துவரின் பெயர், எல்லா நோய்களிலிருந்தும் எல்லா வியாதிகளிலிருந்தும் நம்மைக் குணப்படுத்துபவர் (மத்தேயு 4:23-25). முடவர்களை நடக்கவும், குருடர்களைப் பார்க்கவும், செவிடர்களைக் கேட்கவும், ஊமையர்களைப் பேசவும், ஊனமுற்றோர் மற்றும் முடமாக்கப்பட்டவர்களைச் சுகப்படுத்தவும், மக்கள் எல்லா நோய்களிலிருந்தும் எல்லா வியாதிகளிலுமிருந்து குணமடையவும் செய்தார் (மத்தேயு 15:29-31). நம்முடைய வியாதிகள், நோய்கள், வலிகள் அனைத்தையும் அவர் சிலுவையில் சுமந்தார், அதனால் அவருடைய காயங்களால் நாம் குணமடைந்தோம் (ஏசாயா 53:4,5; 1 பேதுரு 2:24). அவர் நம்மை மறைக்கும் நீதியின் சூரியன், அவருடைய செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கிறது (மல்கியா 4:2). இயேசுவின் நாமத்தில், நோய் மற்றும் வியாதி நீக்கப்படும். வியாதிகள், குறைபாடுகள், அசாதாரணங்கள், தீராத நோய்கள், தீராத வியாதிகள், இயேசுவின் வல்லமையுள்ள நாமத்திற்கு முன்னால் தலைவணங்குகின்றன அதனால் மக்கள் சுகம் பெற்றனர்.

***ஷாலோமின் பிரபு***—"இயேசு" என்பது *ஷாலோமின்* பிரபுவாயிருக்கிறவருடைய நாமம், சமாதானப்பிரபு (ஏசாயா 9:6). தம்மிடம் வரும் அனைவருக்கும் முழுமையைக் கொண்டுவரும் ராஜா அவர். சிலுவையில், *ஷாலோம்*—சமாதானம், முழு நல்வாழ்வு, பூரணமான முழுமை ஆகியவற்றைக் கொண்டுவருவதற்கான தண்டனையை அவர் சுமந்தார் (ஏசாயா 53:5). அவர் பூரண சமாதானத்தை, உலகம் கொடுக்க முடியாத சமாதானத்தைத் தருகிறார் (யோவான் 14:27; யோவான் 16:33). இயேசுவின்

நாமத்தைக் குறிப்பிடுவது பரிபூரண *ஷாலோம்*—சமாதானம், முழு நல்வாழ்வு, பூரணமான முழுமை ஆகியவற்றைக் கொண்டுவருகிறது. அவருடைய நாமம் நம் அச்சங்களை அகற்றி நம்மை அமைதிப்படுத்துகிறது, குழப்பங்களை நீக்குகிறது, வேதனைகளை விரட்டுகிறது, மற்றும் முழுமையை வழங்குகிறது.

**அற்புதம் செய்பவர்**—எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரம். “இயேசு” என்ற நாமம் அற்புதம் செய்பவரின் நாமம். அவர் மரித்தோரை எழுப்பினார், தண்ணீரை திராட்சரசமாக மாற்றினார், உணவை மிகுதிப்படுத்தினார், காற்றையும் அலைகளையும் அமைதிப்படுத்தினார், பெரிய மீன் பிடிப்பை ஏற்படுத்தினார், மேலும் பல அற்புதங்களைச் செய்தார், அந்நாட்களில் செய்தது போலவே இன்றும் அற்புதங்களை செய்கிறார் (எபிரெயர் 13:8). சிலுவையில் நமக்காக சாபமாகி, நம்முடைய கீழ்ப்படியாமைக்கான ஒவ்வொரு சாபத்தையும் அவரே நீக்கினார் (கலாத்தியர் 3:13,14). ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதத்தை அவர் நம்மேல் வரச்செய்தார். கிறிஸ்துவில், தேவனிடமிருந்து வரும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தாலும் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம் (எபேசியர் 1:3). இயேசுவின் பெயரால், அற்புதங்கள் நடக்கும், சூழ்நிலைகள் மாறிவிடும், சாத்தியமற்றது சாத்தியமாகும், ஒவ்வொரு சாபமும் நீங்கி, தேவனின் ஆசீர்வாதங்கள் இலவசமாக வழங்கப்படும்.

**உறவினரான சுதந்தரவாளி, மீட்பர்**—“இயேசு” என்பது நம் உறவினரான சுதந்தரவாளியும், நம் மீட்பருமாக மாறியவரின் நாமம் (ஏசாயா 59:20; ரோமர் 11:26). அவர் நம்மில் ஒருவரைப் போல ஆனார் (எபிரெயர் 2:11,14,15; எபிரெயர் 10:5), அவர் நமது இரத்த உறவான உடன்பிறந்த சகோதரர், நம் குடும்ப உறுப்பினர், இதன் மூலமாக அவர் நம் சூழ்நிலையில் அடியெடுத்து வைத்து நம்மை அதிலிருந்து வெளியே கொண்டு வந்தார். இயேசுவானவர் கடைசி

ஆதாமாகவும், பிந்தின மனுஷனாகவும் இருக்கிறார் (1 கொரிந்தியர் 15:45-47). மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே (1 தீமோத்தேயு 2:5). இந்த மனுஷன் வீழ்ச்சியிலிருந்து நம்மை மீட்டார். ஆதாம் நம்மை கீழ்ப்படுத்திய எல்லாவற்றிலிருந்தும் அவர் நம்மை வெளியே கொண்டு வந்தார். அவர் தன்னை மீட்கும் பொருளாகக் கொடுத்தார், அனைவருக்கும் மீட்பின் கிரயமாக மாறினார் (1 தீமோத்தேயு 2:6). நாம் ஐசுவரியவான்களாவதற்கு அவர் தரித்திரனானார் (2 கொரிந்தியர் 8:9). நாம் இப்போது கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள்—பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் (ரோமர் 6:14; தீத்து 2:14), ஒவ்வொரு சாபத்திலிருந்தும் மீட்கப்பட்டவர்கள் (கலாத்தியர் 3:13), சாத்தானிடமிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் (கொலோசெயர் 1:13,14), மற்றும் தற்போதைய தீமையான காலத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் (கலாத்தியர் 1:4). அவர் இருக்கும் இடத்திற்கு நம்மை உயர்த்தி, நம்மை மகன்களாகவும் மகள்களாகவும், தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரரும் ஆக்குவதற்காக அவர் நாம் எவ்வாறு இருந்தோமோ அவ்வாறே அவர் ஆனார். மேலும் அவரால், நாம் நீதிமான்களாக்கப்பட்டோம், தேவனுடைய கிருபையின் பரிபூரணத்தை பெற்றோம், மற்றும் நாம் ஜீவனை அடைந்து ஆளுகிறோம் (ரோமர் 5:15-19). என் மீட்பர் உயிரோடிருக்கிறார்! (யோபு 19:25,26) இயேசுவின் வல்லமையுள்ள நாமம் மீட்கிறது, விடுவிக்கிறது, அடிமைத்தனங்களை உடைக்கிறது, ஒடுக்கப்பட்டவர்களையும் சிறைப்பட்டவர்களையும் விடுவிக்கிறது, மேலும் வாழ்க்கையில் ஆட்சி செய்வதற்குரிய அதிகாரம் அளிக்கிறது!

**சாத்தானை அழிப்பவர்—**“இயேசு” என்பது சர்ப்பத்தின் தலையை நசுக்க ஸ்திரீயின் வித்தாக வந்தவரின் பெயர் ஆகும் (ஆதியாகமம் 3:15). உலகத்தின் அதிபதியாகிய சாத்தானை புறம்பாக தள்ளினவர் அவரே (யோவான்

12:31). சாத்தான் இயேசுவிடம் வந்தான், இயேசுவை எதிர்த்து நிற்க எந்த இடத்தையும், அணுகுமுறையையும், கால்பதிக்க இடத்தையும், சக்தியையும் அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை (யோவான் 14:30). இந்த இயேசு, சிலுவையில், பிசாசை நியாயந்தீர்த்தார், கண்டனம் செய்தார், மற்றும் தீர்ப்பளித்தார் (யோவான் 16:11). இந்த இயேசு, சாத்தானையும் அவனது பிசாசுகளின் ஆயுதங்களை எடுத்துப்போட்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் (கொலோசெயர் 2:15). ஒரு பலசாலியான மனிதனின் வீட்டிற்குள் நுழையும் அவனை விட பலம் பொருந்திய ஒருவர், அவனுடைய வீட்டிற்குள் சென்று, அவனை ஆயுதமற்றவனாக்கி மற்றும் அவனுடைய பொருள்களை சூறையாடுகிறார் (லூக்கா 11:21,22). இந்த இயேசு, தனது மரணத்தின் மூலம் சாத்தானை அழித்தார் (எபிரெயர் 2:14). அவர் நமக்காகவும், நம்மைப் பிரதிநிதிப்படுத்தியும் நம் சார்பாகவும் இவை அனைத்தையும் செய்தார். இன்று, இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில், சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் விசுவாசிகளுக்கு முன்பாக நடுங்கி ஓடுகின்றன, பிசாசுகள் துரத்தப்படுகின்றன, சாத்தானின் செயல்கள் அழிக்கப்படுகின்றன, மக்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

**ஜெயங்கொள்ளுகிறவன், என்றென்றும் ராஜா—** “இயேசு” என்பது நரகத்தையும் கல்லறையையும் வென்று மரித்தோரிலிருந்து வெற்றிகரமாக எழுந்தவரின் நாமம், முதற்பேறானவர் மற்றும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் ஆவார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5,18; கொலோசெயர் 1:18). அவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் உடையவர் (மத்தேயு 28:18). அவர் எல்லாவற்றிற்கும் தலையானவர், மற்றும் எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினார். அவர் பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார், எல்லாத்

துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாக அவர் உயர்ந்திருக்கிறார் (எபேசியர் 1:20-22). இன்று, அவர் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார் (1 தீமோத்தேயு 2:4,5; எபிரெயர் 7:25; எபிரெயர் 8:6; எபிரெயர் 9:16,17), நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலர் (எபிரெயர் 3:1), முன்னோடியானவர் (எபிரெயர் 6:20), பரிசுத்த ஸ்தலத்தின் ஆசாரிய ஊழியஞ்செய்கிறவன் (எபிரெயர் 8:2), நமது பெரிய பிரதான ஆசாரியர் (எபிரெயர் 3:1; எபிரெயர் 4:14), பரிந்து பேசுபவர் (எபிரெயர் 7:25), மற்றும் நீதிபரர் (1 யோவான் 2:1). அவர் ஆதியும் அந்தமுமானவர், ஆல்பா மற்றும் ஒமேகா, அவரில் எல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது, அவரே முந்தினவரும் பிந்தினவரும் ஆவார். ஆனால் அவருக்கோ ஆரம்பம் மற்றும் முடிவு இல்லை, அவர் ஆரம்பம் முதல் இறுதி வரை உன்னதமான பேரரசராயிருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:8; வெளிப்படுத்தின விசேஷம் 2:8; வெளிப்படுத்தின விசேஷம் 21:6; வெளிப்படுத்தின விசேஷம் 22:13). அவர் ஆமென் (வெளிப்படுத்தின விசேஷம் 3:14), அப்படியே ஆகட்டும் என்பவர் ஆவார், தேவனின் அனைத்து நோக்கங்களின் நிறைவேற்றுதல் (எபேசியர் 1:10; எபேசியர் 3:10,11). அவர் ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து தோன்றிய துளிர் (ஏசாயா 11:1), கிளை (ஏசாயா 11:1; சகரியா 3:8; சகரியா 6:12), வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தாவீதின் சந்ததி (2 தீமோத்தேயு 2:8), தாவீதின் வேர் மற்றும் சந்ததி (வெளிப்படுத்தின விசேஷம் 5:5; வெளிப்படுத்தின விசேஷம் 22:16), யூதா கோத்திரத்தின் சிங்கம் (வெளிப்படுத்தின விசேஷம் 5:5) அனைத்தையும் வென்றவர். அவர் பூமியின் ராஜாக்களை ஆளுகிறவர் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). அவரே நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு (1 தீமோத்தேயு 1:12), மகிமையின்

கர்த்தர் (1 கொரிந்தியர் 2:8) மற்றும் அனைவருக்கும் கர்த்தர் (அப்போஸ்தலர் 10:36). அவர் உயர்ந்த பதவியில் இருப்பவர், எல்லாவற்றிலும் முதல்வராயிருப்பவர், அதனால் அவர் என்றென்றும் மிக உயர்ந்தவராக இருப்பார் (கொலோசெயர் 1:18). அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், எல்லா கனத்திற்கும், நித்திய வல்லமைக்கும் உரியவர், அவர் மீண்டும் ஆட்சி செய்ய மற்றும் என்றென்றும் ஆளுகைசெய்ய வருகிறார், ஆமென் (1 தீமோத்தேயு 6:15,16; வெளிப்படுத்தின விசேஷம் 19:15,16). அவருடைய நாமம் நமக்குத் தேவையான அனைத்தையும் வழங்குகிறது. அவருடைய நாமம் எல்லா பகுதிகளுக்கும் கட்டளையிடுகிறது, இயேசுவின் நாமத்தில், ஒவ்வொரு முழங்கால்களும் பரலோகத்திலும், பூமியிலும் மற்றும் நரகத்திலும் வணங்கும், மேலும் ஒவ்வொரு நாவும் அவர் மட்டுமே கர்த்தர் என்று அறிக்கையிடும்.

அவருடைய நாமம், விசுவாசத்தில் அழைக்கப்படும்போது, அவர் சரீரப்பிரகாரமாக இருந்தால் செய்யக்கூடிய அனைத்தையும் செய்யும். அவருடைய நாமம் சொல்லப்படும்போதெல்லாம் அவர் அருகில் இருக்கிறார். அவர் யார் என்பதும், அவர் நிறைவேற்றிய அனைத்தும் அந்த நாமத்திலேயே இருக்கின்றன, அவருடைய மகத்துவமான நாமத்திலேயே உள்ளடக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது. அவர், இயேசு, அவருடைய நாமத்தில் இருக்கிறார்.

அவர் யார் என்பதும், அவர் நிறைவேற்றிய அனைத்தும் அவருடைய மகத்துவமான நாமத்திலேயே உள்ளடக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

## சிந்தனைக்கு

1) இயேசு என்ற நபரைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள், அவர் யார், அவர் என்ன செய்தார், மற்றும் வரவிருக்கும் காலத்தில் அவர் என்ன செய்யப்போகிறார். இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்படாத இயேசுவின் மூன்று அம்சங்களையாவது நீங்கள் சிந்தித்து, இந்த அத்தியாயத்திலுள்ள அவர் யார் என்பதற்கான விளக்கத்துடன் நீங்கள் சேர்க்கலாம்.

# 3

# பழைய ஏற்பாட்டில் தேவனுடைய நாமங்களின் வெளிப்பாடு

இயேசுவின் நாமத்தை விசுவாசிகளாகிய நாம் பயன்படுத்துவதற்கான உரிமையை நமக்குக் கொடுப்பதன் மூலம், இயேசு நமக்குக் கிடைக்கச் செய்ததைக் கண்டறிய நாம் தயாராகும் போது, நாம் பார்க்க வேண்டிய இரண்டு முக்கியமான அம்சங்கள் உள்ளன.

முதலாவதாக, இயேசு 12 அப்போஸ்தலர்களிடமும், பின்னர் 70 சீஷர்களிடமும் மற்றும் மற்றவர்களிடமும் அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி பேசியபோது, இவர்கள் யூதர்களாக இருந்தார்கள். அவர்களின் ஆன்மீக பாரம்பரியத்தின் பகுதியாக, அன்றாட காரியங்களில் கர்த்தராகிய தேவனின் நாமத்தை பயன்படுத்துவது பற்றிய ஆழமான புரிதல் அவர்களுக்கு இருந்தது. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாக, பழைய ஏற்பாட்டை ஆராய்வதன் மூலம் இந்த புரிதலைப் பெற, இது நமக்கு உதவும். இந்த அத்தியாயத்தில், பழைய ஏற்பாடு எவ்வாறு கர்த்தராகிய தேவனின் நாமத்தை பயன்படுத்துகிறது மற்றும் விளக்குகிறது என்பதை சுருக்கமாக ஆராய்வோம்.

இரண்டாவதாக, அளிக்கப்பட்டுள்ள ஆன்மீக அதிகாரத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்பதற்கான குறைபாடற்ற முன்மாதிரியாகவும் உருவகமாகவும் கர்த்தராகிய இயேசு நமக்கு இருக்கிறார். கர்த்தராகிய இயேசு பிதாவின் நாமத்தில் வந்து, பிதாவின் நாமத்தினாலே அவருடைய கிரியைகளைச் செய்தார். பிதாவைப்

பிரதிநிதித்துவப்படுத்த அவர் பிதாவின் நாமத்தில் வந்ததைப் போலவே, அவரைப் பிரதிநிதித்துவப்படுத்த அவர் நம்மை அவருடைய நாமத்தில் அனுப்பினார். எனவே, அடுத்த அத்தியாயத்தில், பிதாவின் நாமத்தில் இயேசு வந்ததன் அர்த்தம் என்ன என்பதைக் குறித்து பார்ப்போம். இயேசுவின் நாமத்தினாலே உலகத்திற்குள் கடந்து செல்வதை நாம் தெரிந்துகொள்ளும் பட்சத்தில் இதனையே நாம் கண்டிப்பாக செய்ய வேண்டும்.

இந்த இரண்டு முக்கியமான அம்சங்களை நாம் பார்த்தவுடன், இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கான நமது சிறப்புரிமையயும் உரிமையையும் ஆராய்வோம், மேலும் அதைப் பற்றி புதிய ஏற்பாடு நமக்கு என்ன கற்பிக்கிறது என்பதைப் பற்றியும் பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டில் தேவனின் முக்கியமான நாமங்கள் மற்றும் தலைப்புகளில் சிலவற்றை முதலில் பார்ப்போம். அதன் பிறகு, இஸ்ரவேல் மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் தேவனின் நாமத்தை எவ்வாறு கனப்படுத்தினார்கள் என்பதைப் பற்றி ஆய்வு செய்வோம்.

## *ஏலோகிம் (தேவன்)*

**ஆதியாகமம் 1:1**

**ஆதியிலே தேவன் (*ஏலோகிம்*) வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**

எபிரேய வார்த்தையான *'ஏலோகிம்'* என்பது பழைய ஏற்பாட்டில் "தேவன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட மிகவும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வார்த்தையாகும் மற்றும் சர்வ வல்லமையுள்ள, சக்திவாய்ந்த, வலிமையான மற்றும் சர்வவல்லமையுள்ள தேவனைக் குறிக்கிறது. *'ஏலோகிம்'* என்பது பன்மையைக் குறிக்கும் ஒரு எபிரெயச் சொல், மேலும் "தேவர்கள்" அல்லது "வலிமையானவர்கள்" அல்லது "வல்லவர்கள்" (ஒன்றுக்கு மேற்பட்டவர்கள்) என்று

பொருள்படும். முக்கியமாக, தேவனுக்கு *'ஏலோகிம்'* என்ற வார்த்தை பயன்படுத்தப்படும்போது, அது எப்போதும் ஒருமை வினைச்சொற்களுடன் பயன்படுத்தப்படுவது சுவாராசியமாக உள்ளது. எனவே, *'ஏலோகிம்'* என்பது பன்மை நாமமாக இருந்தாலும், தேவனை குறிப்பிடும் போது, அது ஒருமையில் பயன்படுத்தப்படுகிறது, இதனால் எந்தப் பிரிவினையும் இல்லாமல் ஒற்றுமையையும் உடன்பாட்டையும் குறிக்கிறது—*"இஸ்ரவேலே கேள்: நம்முடைய தேவனாகிய* (ஏலோகிம்) *கர்த்தர்* (யேகோவா) *ஒருவரே கர்த்தர்!* (யேகோவா)!" (உபாகமம் 6:4) *'ஏலோகிம்'* என்பது கூட்டுப் பெயர்ச்சொல்லைப் போலவே, ஒரு-பன்மை பெயர்ச்சொல்லாக அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. இது ஒரே தேவன் மூன்று நபர்களில் என்ற திரியேக தேவனை சுட்டிக்காட்டுகிறது. *"பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்"* (1 யோவான் 5:7). மூன்று நபர்களில் உள்ள ஒரே தேவன் அனைத்தையும் சிருஷ்டித்தவராக வேதாகமத்தில், *'ஏலோகிம்'* என்ற தேவனாக அறியப்படுகிறார்.

## *ஏல் (தேவன்)*

"தேவன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *'ஏல்'* என்ற எபிரேய வார்த்தையானது, வலிமையான, சர்வவல்லமையுள்ள அல்லது வல்லமையுள்ளவராக இருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. இது தேவனை வல்லமை மிக்கவராகக் காட்டுகிறது. இதன் முதலாவது குறிப்பு ஆதியாகமம் 14:18 இல் உள்ளது. *ஏல்* என்பது தேவனுடைய பலவிதமான பண்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளது (இவை ஒரு சில வேதாகமப் பகுதிகளுடன் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது). கொடுக்கப்பட்டுள்ள வேதக் குறிப்புகளைப் பார்த்து, தியானித்து, தேவனின் இந்த நாமங்களையும் பண்புகளையும் சிந்தித்துப் பார்ப்பதில்

நேரத்தைச் செலவிடுவது பயனுள்ளது.

தேவனின் இந்தப் பண்புகளைப் பற்றிய உங்கள் தியானம் அவரை தொழுதுகொள்ள உங்களுக்கு உதவுவதாக!

- ***ஏல்-எலியோன்*:** மிக உயர்ந்த தேவன், உன்னதமான தேவன் (ஆதியாகமம் 14:18-22)
- ***ஏல்-ஷடாய்*:** சர்வவல்ல தேவன், அனைத்திற்கும் போதுமானவர், போதுமானதை விட அதிகமாக இருக்கும் தேவன், தாயைப் போன்றவர் (ஆதியாகமம் 17:1)
- ***ஏல்-ஒலாம்*:** நித்திய தேவன், நித்தியத்தின் தேவன், என்றென்றும் தேவன் (ஆதியாகமம் 21:33)
- ***ஏல்-கான்னா*:** எரிச்சலுள்ள தேவன் (யாத்திராகமம் 20:5)
- ***ஏல்-ராச்சும்*:** கருணையுள்ள தேவன், இரக்கமுள்ள தேவன் (உபாகமம் 4:31)
- ***ஏல்-அமன்*:** உண்மையுள்ள தேவன் (உபாகமம் 7:9)
- ***ஏல்-கடோல்*:** வல்லமையுள்ள தேவன், மகத்துவமுள்ள தேவன் (உபாகமம் 7:21; உபாகமம் 10:17)
- ***ஏல்-கிப்போர்*:** வல்லமையுள்ள தேவன், போர்வீரரான தேவன் (உபாகமம் 10:17)
- ***ஏல்-யாரே*:** பயங்கரமான தேவன், பயத்திற்குரிய தேவன் (உபாகமம் 10:17)
- நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்(*ஏல்*); நீதியும் செம்மையுமானவர் (உபாகமம் 32:4)
- ***ஏல்-காஹ்*:** ஜீவனுள்ள தேவன் (யோசுவா 3:10)

தேவனுடைய இயல்பான தன்மையையும் பண்புகளின் அம்சங்களையும் தேவனுடைய நாமங்கள் மற்றும் தேவனுக்குரிய சிறப்புப் பெயர்கள் வெளிப்படுத்துகின்றன.

## இருக்கிறவராக இருக்கிறேன்

**யாத்திராகமம் 3:13-15**

**13அப்பொழுது மோசே தேவனை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான்.**

**14அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்.**

**15மேலும், தேவன் மோசேயை நோக்கி: ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக; என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம்.**

இங்கே யாத்திராகமம் 3-ல் குறிப்பிட்டுள்ளபடி, மோசே தேவனிடத்தில் அவருடைய நாமத்தைக் குறித்துக் கேட்டபொழுது, *'ஏலோகிம்'* மோசேயிடம், "இருக்கிறவர்" (எப்போதும் இருப்பவர், சதாகாலங்களிலும் ஜீவிக்கிறவர்) "இருக்கிறேன்" (எப்போதும் இருப்பவர், சதாகாலங்களிலும் ஜீவிக்கிறவர்), அல்லது சுருக்கமாக "இருக்கிறேன்" என்பது எப்போதும் இருக்கும், சதாகாலங்களிலும் ஜீவிக்கிற தேவனை குறிக்கிறது. வேதாகமத்தின் தேவன் காலத்தின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவராக இருக்கிறார். அவர் இப்போது நித்தியத்தில் வாழ்கிறார். அவர் இருக்கிறார். அவர் காலத்துக்கு அப்பாற்பட்ட பகுதியில் உள்ளார். நமக்குத்

தெரிந்தபடி நேரம் தேவனுக்கு முக்கியமில்லை. அவர் நித்தியமான, சுயமாக இருக்கும் தேவன். மகத்தானவராக இருக்கிறேன் என்பவர் *"ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன் மற்றும் யாக்கோபின் தேவன்."* இந்த முற்பிதாக்கள் இந்த இருக்கிறேன் என்பவருக்கு சேவை செய்து வந்தனர்.

புதிய ஏற்பாட்டில், கர்த்தராகிய இயேசு இதே சிறப்புப் பெயரை தமக்காகப் பயன்படுத்தினார் என்பதை நாம் அறிந்துகொள்வது சுவாரஸ்யமாக இருக்கிறது. *"அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"* (யோவான் 8:58).

## யேகோவா (கர்த்தர்)

ஒருவேளை இஸ்ரவேல் மக்களுக்கு மிக முக்கியமான நாமம், மற்றும் பழைய ஏற்பாடு முழுவதுமாக பயன்படுத்தப்படும் ஒரு நாமம், எபிரேய உடன்படிக்கையின் நாமம் "யேகோவா" (அல்லது *யெஹோவா* அல்லது *யாஹ்வெஹ்*) என்பதாகும். ஆங்கில பைபிளின் பல்வேறு பதிப்புகளில் இந்த நாமம் கர்த்தர், யேகோவா, யாஹ்வெஹ், தேவன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கிங் ஜேம்ஸ் வெர்ஷன் மற்றும் நியூ கிங் ஜேம்ஸ் வெர்ஷன் ஆகியவை "யேகோவா" என்பதை கர்த்தர் என்று மொழிபெயர்க்கின்றன, எனவே, அதை எளிதில் அடையாளம் காண முடியும்.

**யாத்திராகமம் 6:2-4**

**2மேலும், தேவன் மோசேயை நோக்கி: "நான் யேகோவா,**

**3சர்வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை.**

**4அவர்கள் பரதேசிகளாய்த் தங்கின தேசமாகிய கானான் தேசத்தை அவர்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களோடே என் உடன்படிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறேன்.**

"யேகோவா" என்ற நாமம், உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கும் நித்தியமான, சுயமாக இருக்கும், ஒருபோதும் மாறாத தேவனைக் குறிக்கிறது. தேவன் மோசேயிடம் பேசி, அவனைத் தன் பணிக்கு அனுப்பியபோது, அவர் தம் உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கும் தேவன் என்பதைச் சுட்டிக்காட்ட, அவருடைய நாமம் "யேகோவா" என்று வலியுறுத்தினார். அவருடைய விசேஷித்த ஜனங்களுக்கான ஆண்டவருடைய உடன்படிக்கையின் நாமமே "யேகோவா" ஆகும். இந்த நாமத்தின் மூலம், அவர் தம் ஜனங்களுடன் உடன்படிக்கையில் இருந்தார், மேலும் அவர் அவரையே ஜனங்களுக்கு அணுகும்படி செய்தார். தம்முடைய ஜனங்கள் தம்முடைய நாமத்தைப் பயபக்தியுடன் வைத்து, அவருக்கு மட்டுமே துதியைச் செலுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். *"நான் கர்த்தர்* (யேகோவா), *இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்"* (ஏசாயா 42:8).

பழைய ஏற்பாட்டு வேதாகமத்தில் யேகோவா தேவன் யார், அவர் என்னவாக இருப்பார், அவர் தம் ஜனங்களுக்கு என்ன செய்வார் என்ற பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்தும் "யேகோவா" என்ற நாமத்திற்கான பல விதமான சிறப்புப் பெயர்களை நாம் காண்கிறோம்.

- ***யேகோவா ஏலோகிம்***: நித்திய சிருஷ்டிகர் (ஆதியாகமம் 2:4-25)
- ***யேகோவா அடோனாய்***: ஆளுகை செய்கிற கர்த்தர், எஜமானன் யேகோவா (ஆதியாகமம் 15:2,8)
- ***யேகோவா யீரே*** : கர்த்தர் பார்த்துக்கொள்வார் அல்லது தேவைகளை சந்திக்கும் கர்த்தர் (ஆதியாகமம் 22:8-14)
- ***யேகோவா ராஃபா***: குணமாக்கும் கர்த்தர் (யாத்திராகமம் 15:26)
- ***யேகோவா நிசி***: கர்த்தர் நம்முடைய ஜெயக்கொடி (யாத்திராகமம் 17:15)

- ***யேகோவா ஏலோஹேனு*:** உங்கள் தேவனாகிய கர்த்தர் (யாத்திராகமம் 20:2,5,7)
- ***யேகோவா மெக்காதீஸ்*:** பரிசுத்தமாக்கும் கர்த்தர் (யாத்திராகமம் 31:13; லேவியராகமம் 20:8; லேவியராகமம் 21:8; லேவியராகமம் 22:9,16,32; எசேக்கியேல் 20:12)
- ***யேகோவா ஷாலோம்*:** சமாதானத்தின் கர்த்தர் (நியாயாதிபதிகள் 6:24)
- ***யேகோவா சாப்போத்*:** சேனைகளின் கர்த்தர் (1 சாமுவேல் 1:3, முதலியன. 284 முறை)
- ***யேகோவா-ஏலியோன்*:** உன்னதமான கர்த்தர் (சங்கீதம் 7:17; சங்கீதம் 47:2; சங்கீதம் 97:9)
- ***யேகோவா-ரோஹி*:** கர்த்தர் என் மேய்ப்பர் (சங்கீதம் 23:1)
- ***யேகோவா-ஓசேனு*:** கர்த்தர் நம்முடைய சிருஷ்டிகர் (சங்கீதம் 95:6)
- ***யேகோவா-எலோஹீனு*:** நம்முடைய தேவனாகிய கர்த்தர் (சங்கீதம் 99:5,8,9)
- ***யேகோவா-சிட்கேனு*:** நம்முடைய நீதியாகிய கர்த்தர் (எரேமியா 23:6; எரேமியா 33:16)
- ***யேகோவா ஷம்மா*:** கர்த்தர் கூட இருக்கிறவர் (எசேக்கியேல் 48:35)
- ***யேகோவா ஏலோஹே*:** என் தேவனாகிய கர்த்தர் (சகரியா 14:5)

## அன்றாட வாழ்வில் கர்த்தருடைய நாமம்

இப்போது, பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய நாமம் தேவனுடைய ஜனங்களுக்கு எவ்வளவு முக்கியமானதாக இருந்தது என்பதை ஆராய்வோம். இந்த வெளிப்பாடு அல்லது ஆன்மீகப் புரிதல் வளர்ந்து கொண்டிருந்தது என்பதை நாம்

மனதில் கொள்ள வேண்டும். அதாவது, தேவனுடைய ஜனங்கள் காலப்போக்கில் மற்றும் தலைமுறைகளாக இவற்றைப் புரிந்துகொண்டனர்.

**ஜனங்கள் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி தேவனை தொழுதுகொண்டனர்.** ஆபிரகாம் பழைய ஏற்பாட்டிலிருந்த ஒரு சிறந்த உதாரணம், அவர் பயணம் செய்யும்போது, பல்வேறு இடங்களில் பலிபீடங்களைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டார் (ஆதியாகமம் 12:8; ஆதியாகமம் 13:4; ஆதியாகமம் 21:33; ஆதியாகமம் 22:14; ஆதியாகமம் 26:25). சிறப்பு சந்திப்புகளின் நேரங்கள் இருந்தன, இந்த நேரங்களில், தேவனின் புதிய நாமத்தை வெளிப்படுத்துவதன் மூலம் அவரது இயல்பின் சில அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்டன. **உதாரணம்**: *யேகோவா யீரே* என்றால் "கர்த்தர் பார்த்துக்கொள்வார்" அல்லது "தேவைகளை சந்திக்கும் கர்த்தர்" (ஆதியாகமம் 22:14).

**ஜனங்கள் பெரும்பாலும் தேவனை அவர் செய்த செயல்களின் அடிப்படையில் உயர்த்தினார்கள்.** செங்கடலைக் கடந்த பிறகு, அவர்கள் அறிவித்தார்கள், *"கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம்"* (யாத்திராகமம் 15:3). அமலேக்கின் மீதான வெற்றிக்குப் பிறகு, *"மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு கர்த்தர் என் ஜெயக்கொடி என்று பெயரிட்டார்"* (யாத்திராகமம் 17:15).

**ஜனங்கள் தேவனுடைய நாமத்தை வீணாக பயன்படுத்தக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டனர்.** பத்துக் கட்டளைகளில் மூன்றாவது கட்டளை இதுவே, *"உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்"*

(யாத்திராகமம் 20:7). *"என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக"* (லேவியராகமம் 19:12).

**அறிவிக்கப்பட்ட நாமம் மகிமை வெளிப்படுவதற்கு காரணமாக அமைந்தது.** இது பழைய ஏற்பாட்டில் நாம் காணும் ஒரு முக்கியமான வெளிப்பாடு. மோசே தேவனுடைய மகிமையைக் காணும்படி கேட்டபோது, தேவன் பதிலளித்தார், *"கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக்கூறுவேன்"* (யாத்திராகமம் 33:19). கர்த்தரின் நாமத்தை அறிவிப்பது தேவனின் மகிமையைக் கொண்டுவருகிறது. ராஜாவின் வருகையை அறிவிக்கும் ஊர்வலம் இது. *"அப்பொழுது அவன்: உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்றான். அதற்கு அவர்: என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக்கூறுவேன்; எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன் என்று சொல்லி"* (யாத்திராகமம் 33:18,19, யாத்திராகமம் 34:5-8ஐயும் பார்க்கவும்).

---

கர்த்தரின் நாமத்தை அறிவிப்பது தேவனின்

மகிமையைக் கொண்டுவருகிறது.

---

**அவருடைய நாமத்தில் ஆணையிடுகிறது (பொருத்தனை செய்கிறது).** சுவாரஸ்யமாக, கர்த்தரின் நாமத்தில் உறுதியான வாக்குறுதிகள், ஆணைகள் மற்றும் பொருத்தனைகள் செய்ய ஜனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு, தேவனை சாட்சியாக அழைப்பதன் மூலம்,

அது அவர்கள் நிறைவேற்ற வேண்டிய ஒரு உறுதியான வாக்குறுதியாக மாறியது. *“உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனைசெய்து, அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடுவாயாக”* (உபாகமம் 6:13). யோனத்தான் மற்றும் தாவீது இருவரும் கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு ஆணையிட்டார்கள் (1 சாமுவேல் 20:42). கர்த்தராகிய இயேசு நமக்குக் கற்பித்ததை நினைவில் வையுங்கள், *“சத்தியம்பண்ணவேண்டாம்,”* அதற்கு பதிலாக *“உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்”* (மத்தேயு 5:34,37).

**ஆசாரியர்கள் கர்த்தருடைய நாமத்தில் ஜனங்களை ஆசீர்வதித்தார்கள்.** கர்த்தர் தமக்கு ஊழியஞ்செய்யவும் கர்த்தருடைய நாமத்தினாலே ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காகவும் ஆசாரியர்களை நியமித்தார். *“அக்காலத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்கும், இந்நாள்வரைக்கும் நடந்துவருகிறதுபோல, கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கும், அவர் நாமத்தைக்கொண்டு ஆசீர்வதிப்பதற்கும், கர்த்தர் லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுத்தார்”* (உபாகமம் 10:8, உபாகமம் 21:5ஐயும் பார்க்கவும்). தாவீது ராஜா, கர்த்தருடைய பெட்டியை எருசலேம் நகரத்திற்குள் கொண்டு வந்த பிறகு, *“சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே ஜனங்களை ஆசிர்வதித்தார்”* (2 சாமுவேல் 6:18).

**ஆசாரியர்களும் லேவியர்களும் கர்த்தருடைய நாமத்தில் ஊழியஞ்செய்தார்கள்.** *“அவனும் அவன் குமாரரும் எந்நாளும் கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு ஆராதனை செய்யும்படி நிற்கும்பொருட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரத்தார் எல்லாருக்குள்ளும் அவனையே தெரிந்துகொண்டார்”* (உபாகமம் 18:5). ஆகவே, ஆசாரியர்கள் ஜனங்களுக்கு தேவனின் பிரதிநிதிகளாக

மாறி, ஜனங்களை தேவனுக்கு பிரதிநிதித்துவப்படுத்தினர்.

***தீர்க்கதரிசிகள்* அவருடைய நாமத்தில் பேசினார்கள்.** பழைய ஏற்பாடு முழுவதும், *தீர்க்கதரிசிகள்* கர்த்தருடைய நாமத்தினாலே பேசினவர்கள் (யாக்கோபு 5:10). ராஜாக்களும் ஜனங்களும் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசிகள் சொன்னதை நம்பிச் செயல்பட்டார்கள். உதாரணமாக, 1 நாளாகமம் 21:19, *“அப்படியே தாவீது கர்த்தரின் நாமத்திலே காத் சொன்ன வார்த்தையின்படியே போனான்.”*

**தேவனுடைய நாமம் எங்கே இருக்கிறதோ, அங்கே தேவன் வசிக்கிறார்.** ஜனங்கள் கடைப்பிடித்த மற்றொரு சுவாரஸ்யமான உண்மை என்னவென்றால், தேவனுடைய நாமம் எங்கே இருந்ததோ அங்கே தேவன் வசித்தார், மற்றும் அங்கே அவர்கள் தேவனை தொழுதுகொள்ளலாம் என்பதாகும். *“உங்கள் தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி, உங்கள் சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே நாடி, அங்கே போய்”* (உபாகமம் 12:5). புதிய ஏற்பாட்டில், ஆவியானவர் மூலம் தேவனின் வாசம்பண்ணும் இடமாக விசுவாசி இருக்கிறான். பழைய ஏற்பாட்டைப்போல இல்லாமல், புதிய ஏற்பாட்டில், கர்த்தருடைய நாமத்தில் விசுவாசிகள் ஒன்றாகக் கூடுவது அவருடைய பிரசன்னத்தின் இடமாகிறது.

**கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள்.** இஸ்ரவேலர்கள் தேவனாகிய *யேகோவாவின்* நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள். *“அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்”* (உபாகமம் 28:10). அவர்கள் தேவனுடைய நாமத்தை தரித்துக்கொண்டதினாலேயும், அவருடைய சொந்த

நாமத்தின் மகிமைக்காகவும், தேவன் தம் ஜனங்களைக் கைவிடமாட்டார். *"கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக்கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனத்தைக் கைவிடமாட்டார்"* (1 சாமுவேல் 12:22). இதனைக் கருத்தில் கொண்டவர்களாக, அவர்கள் மன்னிப்புக் கேட்டார்கள், புதுப்பிக்கப்படும்படி கேட்டார்கள், கர்த்தரின் நாமத்தில் தங்கள் தேசமெங்கும் தேவன் இடைபடும்படியாகக் கேட்டார்கள். *"கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும்"* (சங்கீதம் 25:11). அவர்கள் கர்த்தருடைய நாமத்தில் உயிர்ப்பிக்கும்படி ஜெபம் செய்தார்கள். *"கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும்"* (சங்கீதம் 143:11). *"ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும், என் தேவனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமல் செய்யும்; உம்முடைய நகரத்துக்கும் உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன்"* (தானியேல் 9:19).

**கர்த்தருடைய நாமத்தினாலே அவர்கள் எதிரிகளை எதிர்கொண்டார்கள்.** அவர்கள் *'யாஹ்வெஹ்'* என்ற கர்த்தருடைய நாமத்தில் யுத்தத்திற்குப் புறப்பட்டனர். *"அதற்குத் தாவீது: பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்"* (1 சாமுவேல் 17:45). *"நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம்; உமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக"* (சங்கீதம் 20:5). *"சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள்;*

*நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்”* (சங்கீதம் 20:7).

**கர்த்தருடைய நாமத்தைத் துதித்துப் பாடினார்கள்.** அவருடைய நாமத்தை துதித்துப் பாடுவது என்பது அவரைத் துதித்துப் பாடுவதாகும். *“இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்”* (சங்கீதம் 18:49). அவருடைய நாமம் சிறப்பானது, அற்புதமானது, கம்பீரமானது, மற்றும் துதிக்கு உரியது. *“எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்”* (சங்கீதம் 8:1). அவர்கள் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்கள் (சங்கீதம் 29:2; சங்கீதம் 115:1); அவருடைய நாமத்திற்கு நன்றி செலுத்தினார்கள் (சங்கீதம் 30:4); அவருடைய நாமத்தை உயர்த்தினார்கள் (சங்கீதம் 34:3); அவருடைய நாமத்தைத் துதித்தார்கள் (சங்கீதம் 54:6); அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்தார்கள் (சங்கீதம் 96:2); மற்றும் அவருடைய நாமத்திற்கு பயந்தார்கள் (சங்கீதம் 86:11). *“சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக”* (சங்கீதம் 113:3). தேவன் அவருடைய நாமத்தையும் அவருடைய வார்த்தையையும் எல்லாவற்றிற்கும் மேலாக வைத்திருந்தார்—*“உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்”* (சங்கீதம் 138:2).

**கர்த்தருடைய நாமத்தில் உதவியையும், பாதுகாவலையும் மற்றும் பாதுகாப்பையும் அவர்கள் பெற்றுக்கொண்டனர்.** *“... யாக்கோபின் தேவனுடைய*

*நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக"* (சங்கீதம் 20:1). *"கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்"* (நீதிமொழிகள் 18:10). *"நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது"* (சங்கீதம் 124:8).

**கர்த்தருடைய நாமத்தினாலே வந்தவர்களை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.** *"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கர்த்தருடைய ஆலயத்திலிருந்து உங்களை ஆசீர்வதிக்கிறோம்"* (சங்கீதம் 118:26). இந்த வாக்கியம் கர்த்தராகிய இயேசுவைப் பற்றியும் தீர்க்கதரிசனம் கூறுகிறது.

**கர்த்தருடைய நாமத்தில் நம்பிக்கை வைப்பதென்றால், அது கர்த்தரையே சார்ந்திருப்பதாகும்.** *"உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்"* (ஏசாயா 50:10). *"உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்"* (செப்பனியா 3:12).

**தேசங்கள் கர்த்தருடைய நாமத்திற்குத் திரும்பும்.** புறஜாதிகள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளும் ஒரு காலத்தைப் பற்றி தீர்க்கதரிசிகள் கூறி இருந்தார்கள், மற்றும் அக்காலத்தில் ஆராதனைக்குரிய தேவன் என்று ஒருவரே இருப்பார். *"அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்; சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள்; அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்"* (எரேமியா 3:17). *"அப்பொழுது கர்த்தருடைய*

*நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்; கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும், கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்"* (யோவேல் 2:32). *"அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்"* (சகரியா 14:9). *"சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசைவரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"* (மல்கியா 1:11).

**நாம் அவருடைய நாமத்தை தியானிக்கும்போது தேவன் கவனிக்கிறார்.** *"அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது"* (மல்கியா 3:16).

## இயேசு: தேவனுடைய அனைத்தும் ஒரே நாமத்தில்

பழைய ஏற்பாட்டின் இந்த விரைவான ஆய்விலிருந்து, யூத மக்களின் அன்றாட வாழ்வில் கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துவது ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது என்பது தெளிவாகிறது. அவருடைய நாமம் சொல்லப்படும்போதெல்லாம் அவர் தம்முடைய ஜனங்களின் அருகில் இருந்தார். அவர்கள் கர்த்தருடைய நாமத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டார்கள்.

இப்போது கர்த்தராகிய இயேசு அத்தகைய அமைப்பில் அடியெடுத்து வைப்பதை கற்பனை செய்து

பாருங்கள். அவதாரமான வார்த்தை, தேவனின் குமாரன், நாசரேத்திலிருந்து ஒரு எளிய மற்றும் தாழ்மையான தச்சனாக வருகிறார். அவர் தனது ஊழியத்தைத் தொடங்குகிறார், 12 யூதர்களைக் கூட்டிச் சேர்த்த பின்பு அவர்களை அவரது நாமத்தில் புறப்பட்டுச் செல்ல அனுப்புகிறார்! இயேசு தம்முடைய 12 அப்போஸ்தலர்களிடம், *“சென்று இயேசு கிறிஸ்து என்ற, என்னுடைய நாமத்தைப் பயன்படுத்துங்கள்”* என்று சொல்வதை கற்பனை செய்து பாருங்கள்.

அவருடைய சீஷர்கள், முதலில் 12 பேரும், பிறகு 70 பேரும் வெளியே சென்று இயேசுவின் நாமத்தில் பிணியாளிகளைக் குணப்படுத்தவும், பிசாசுகளை துரத்தவும், அதிகாரம் செலுத்தவும் முயற்சி எதற்காக செய்தார்கள்? “யேகோவா” என்ற நாமத்தைப் பற்றியும், அவர்களுடைய யூத விசுவாசத்தின் ஒரு பகுதியாக அவர்கள் அறிந்திருந்த தேவனுடைய எல்லா உடன்படிக்கை நாமங்கள் பற்றியும் என்ன?

நாம் ஆழமாக உள்ளே ஆராய்ந்து, இரண்டு முக்கியமான காரியங்களை இங்கே சுட்டிக்காட்டலாம்.

முதலாவதாக, 12 அப்போஸ்தலர்களுக்கு ஒரு வெளிப்பாடு இருந்தது—அவர்கள் இயேசுவை மேசியா, தேவனின் குமாரன் என்று அங்கீகரித்து நம்பினார்கள். அதனால்தான் அவர்கள் அவரைப் பின்பற்றினார்கள். யோவான் ஸ்நானகன் இயேசுவை மேசியா, அவருக்கு முன் இருந்தவர், பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பவர், தேவ ஆட்டுக்குட்டி, மற்றும் தேவகுமாரன் என்று அறிவித்தார் (யோவான் 1:29-34). அந்திரேயா யோவான் ஸ்நானகனைக் கேட்டதால் இயேசுவைப் பின்பற்றினான். அந்திரேயா சென்று தன் சகோதரன் சீமோன் பேதுருவினிடம், *“நாங்கள் மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்”* (மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்) (யோவான்

1:41). பிலிப் நாத்தான்வேலைக் கண்டுபிடித்தான், இயேசுவைச் சந்தித்தபோது, நாத்தான்வேல் சொன்னான்: *“ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா!”* (யோவான் 1:49) மத்தேயு 16:16-ல் உள்ள சீமோன் பேதுருவின் அறிவிப்பையும் நாம் அறிவோம், *“நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து.”* ஆகவே, இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களாக நியமித்த இந்த யூத மனிதர்கள், அவரைத் தேவகுமாரனாகிய மேசியா என்று நம்பினார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இரண்டாவதாக, 12 அப்போஸ்தலர்கள் தங்கள் கண்களுக்கு முன்பாக இயேசு ஆச்சரியமான காரியங்களைச் செய்வதைப் பார்த்தார்கள். அவர்கள் குணப்படுத்துதல்கள், விடுதலைகள் மற்றும் அற்புதங்களைக் கண்டார்கள். எனவே, இயேசு அவர்களுக்கு அதிகாரம் அளித்து, “நசரேயனாகிய இயேசு கிறிஸ்து” என்ற அவருடைய நாமத்தைப் பயன்படுத்த அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, அவர்களை அனுப்பியபோது, அவர்கள் முழு மனதுடன் அதைச் செய்தார்கள். நிச்சயமாகவே அவர்கள் விளைவுகளைக் கண்டார்கள். இது அவர்கள் செய்ய நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து செய்யும் நம்பிக்கையை அவர்களுக்கு அளித்தது. இயேசுவின் மூலமாகவும், 12 அப்போஸ்தலர்கள் மூலமாகவும் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்த மற்றவர்களும் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்த முன்வந்தனர், இயேசு அவர்களைத் தடுக்கவில்லை (மாற்கு 9:30-38; லூக்கா 9:49,50). இயேசுவின் நாமத்தில் பிரசங்கிக்கவும் வல்லமையான செயல்களைச் செய்யவும் இயேசு மேலும் 70 யூத சீஷர்களை நியமித்தார், அவர்கள் சென்று அவர் சொன்னபடியே செய்தார்கள் (லூக்கா 10:1,9,17).

இந்த யூத விசுவாசிகள் இயேசுவின் நாமத்தின் வல்லமையை நேரில் கண்டனர். *யேகோவா* என்ற சிறப்புப் பெயர்கள் மூலமாக தேவன் தம்மைப் பற்றி வெளிப்படுத்திய

அனைத்தும் இப்போது இந்த ஒரே நாமத்தில்—அதாவது இயேசு என்ற நாமத்தில் அடங்கியுள்ளன.

இன்று, நமக்கு இரண்டு முக்கியமான பாடங்கள் உள்ளன. முதலாவதாக, இயேசு யார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இயேசு என்ற நபரின் மகத்துவத்தைக் குறித்து தனிப்பட்ட வெளிப்பாடு நமக்கு இருக்க வேண்டும். இரண்டாவதாக, அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கு இயேசு நமக்கு அதிகாரம் அளித்துள்ளார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும், மேலும் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்த தைரியமாக நாம் புறப்பட வேண்டும்.

---

தேவன் யார் என்ற அனைத்தும் இந்த ஒரே நாமத்திலேயே அடங்கியுள்ளன, அந்த நாமம்தான் இயேசு!

---

## சிந்தனைக்கு

1) பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் கர்த்தருடைய நாமத்தை எப்படிப் பயன்படுத்தினார்கள் என்பதை ஆய்வு செய்யுங்கள். புதிய ஏற்பாட்டில் உள்ள விசுவாசிக்கு இணையாக இருக்கும் இவற்றில் குறைந்தது ஐந்தையாவது தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தை நாம் இதைப்போன்ற (ஒரே மாதிரியாக இல்லாவிட்டாலும்) வழிகளில் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப்பற்றி விவாதியுங்கள்.

2) நீங்கள் ஒருவேளை யூதராக இருந்து, யேகோவா நாமத்தைப் பற்றிய திடமான புரிந்துகொள்ளுதலுடன் வளர்க்கப்பட்டு, 12 அப்போஸ்தலர்களில் ஒருவராக

அல்லது 70 சீஷர்களில் ஒருவராக இருந்திருந்தால், . . .

a) நாசரேத்தைச் சேர்ந்த ஒரு இளம் தச்சர் அவருடைய பெயரைப் பயன்படுத்தி உங்களால் வல்லமையான காரியங்களைச் செய்ய முடியும் என்று உங்களிடம் சொன்னபோது நீங்கள் எப்படிப் பதிலளித்திருப்பீர்கள்?

b) நீங்கள் எந்த மாதிரியான கேள்விகளுக்குப் பதில் கூற திணறியிருப்பீர்கள்?

c) நீங்கள் சென்று, அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்காக உங்களை ஒப்புக்கொள்ள வைக்கக் கூடிய முக்கியமான காரணிகள் எதுவாக இருக்கும்?

# 4

# என் பிதாவின் நாமத்தினால்

**யோவான் 5:43**

**நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை, வேறொருவன் தன் சுயநாமத்தினாலே வந்தால் அவனை ஏற்றுக்கொள்ளுவீர்கள்.**

**யோவான் 10:25**

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறது.**

நாம் முன்பு குறிப்பிட்டது போல, நமக்கு அளிக்கப்பட்ட ஆன்மீக அதிகாரத்தின்படி நடப்பதன் அர்த்தம் என்ன என்பதற்கு கர்த்தராகிய இயேசுவே நமக்கு சரியான முன்மாதிரியாகவும், உருவகமாகவும் இருக்கிறார். கர்த்தராகிய இயேசு, பிதாவின் நாமத்தில் வந்தார் மற்றும் பிதாவின் நாமத்தினாலே அவருடைய கிரியைகளைச் செய்தார்.

*“நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருக்கிறேன்”* என்று இயேசு சொன்னபோது, பிதாவை முழுவதுமாக பிரதிநிதித்துவப்படுத்த பிதாவினால் அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்துடன் அவர் வந்தார் என்று பொருள்படும். பிதாவின் வார்த்தைகளைப் பேசுவதற்கும், பிதாவின் வேலைகளைச் செய்வதற்கும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கும், பிதாவால் அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையை முடிப்பதற்கும் அவர் கட்டளையைப் பெற்றிருந்தார் என்பதே இதன் பொருள் ஆகும்.

"நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருக்கிறேன்"
என்று இயேசு சொன்னபோது,
பிதாவை முழுவதுமாக பிரதிநிதித்துவப்படுத்த
பிதாவினால் அவருக்கு
அளிக்கப்பட்ட அதிகாரத்துடன் அவர் வந்தார் என்று
பொருள்படும்.

பிதாவின் நாமத்தில் கிரியைகளைச் செய்வது என்றால், பிதா எவைகளையெல்லாம் செய்கிறாரோ அவைகளை இயேசுவும் அப்படியே செய்து, பிதாவை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்துவது, மற்றும் பிதாவினால் அவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி அவர் சார்பாகவும் அவர் ஸ்தானத்திலும் செயல்படுவது, என்று பொருள்படும்.

இந்த அத்தியாயத்தில், இயேசு எவ்வாறு பிதாவுடன் நடந்து பிதாவின் நாமத்தில் செயல்பட்டார், அவருடைய விருப்பத்திற்கு ஏற்ப அவருடைய சார்பாகப் பேசுகிறார் மற்றும் செயல்படுகிறார் என்பதை நாம் கவனிக்கலாம். பிதாவின் நாமத்தில் வந்து அவரை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான கட்டளையை நிறைவேற்றுவதற்கு பிதாவுடன் இயேசு எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை நாம் கவனத்துடன் ஆராய்வது நமக்குப் பயனளிக்கும். கர்த்தராகிய இயேசு பிதாவைப் பிரதிநிதித்துவப்படுத்த பிதாவின் நாமத்தில் வந்ததுபோல, தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த அவருடைய நாமத்தில் நம்மை அனுப்பினார். நாம் இயேசுவால் அவருடைய நாமத்தில் அனுப்பப்பட்டிருப்பதால், இயேசு நமக்கு வைத்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

**பிதாவின் நாமத்தினாலே வாழ்ந்த ஒரு வாழ்க்கை** (பணியாளர்களை) ஒரு "அனுப்பும் நிறுவனத்திடம்" (பணியாளரை அனுப்ப) கோரிக்கை வைப்பதை விட, "என்னுடைய பிதாவின் நாமத்தினாலே" என்பது மேலானது. பூமியில் இயேசுவின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் அவர் பிதாவின் நாமத்தினாலே இங்கே இருக்கிறார் என்ற யதார்த்தத்தால் வடிவமைக்கப்பட்டது.

இயேசு தம்முடைய பிதாவின் நாமத்தில் வந்த ஒருவராக இப்படி வாழ்ந்தார்.

**இயேசு பிதாவின் மடியில் வாழ்ந்து, பிதாவுடன் நெருங்கிய ஐக்கியத்தில் நடந்துகொண்டார், மற்றும் பிதாவை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18)**. *"பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்"* (யோவான் 10:14).

**இயேசு பிதாவோடு பரிபூரண ஐக்கியத்தில் நடந்தார்,** அதனால், *"நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்"* (யோவான் 10:30) என்று அவரால் சொல்ல முடிந்தது. *"என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்..."* (யோவான் 14:7). *"...என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்"* (யோவான் 14:9).

**அவர் பிதாவின் அன்பைப் பற்றி மிகவும் அறிந்திருந்தார் மற்றும் அவர்மேலுள்ள தந்தையின் அன்பில் இளைப்பாறினார்.** *"பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து"* (யோவான் 3:35). *"பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்"* (யோவான் 5:20). யோவான் 10:17 ஐயும் பார்க்கவும்.

**பிதாவுடனான தமது உறவு அவரை மரணத்திற்கு வழிவகுக்கும் என்பதை அவர் அறிந்திருந்தும், அதனை அவர் அறிக்கை செய்வதற்கு பயப்படவில்லை (யோவான் 5:18).**

**ஜனங்கள் அவரை கனவீனம் பண்ணினால் அல்லது அவரை நிராகரித்தால், அவர்கள் அவரை அனுப்பிய பிதாவை நிராகரித்து கனவீனம் பண்ணுகிறார்கள் என்பதை அவர் உணர்ந்தார் (யோவான் 5:23)**. *"என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்"* (யோவான் 15:23).

**பிதாவின் சித்தம் மற்றும் பிதாவின் செயல்களைச் செய்வதன் மூலம் அவர் உந்தப்பட்டு, உற்சாகப்படுத்தப்பட்டு, நிலைநிறுத்தப்பட்டார்.** *"நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது"* (யோவான் 4:34). *"நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை...எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது"* (யோவான் 5:30). *"ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், ..."* (யோவான் 6:57). *"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்"* (யோவான் 17:4).

**அவர் பிதாவின் செயல்களைச் செய்தார்.** பிதா என்ன செய்கிறார் என்பதைப் பார்ப்பதற்கும் செய்வதற்கும் அவர் அர்ப்பணிக்கப்பட்டிருந்தார் (யோவான் 5:17,19).

**தாம் செய்த பிதாவின் கிரியைகள் தாம் பிதாவினால் அனுப்பப்பட்டவர் என்பதற்கு சாட்சியாகவும்,**

**சான்றாகவும், அத்தாட்சியாகவும் இருப்பதை இயேசு புரிந்துகொண்டார் (யோவான் 5:36). அவர் வாழ்க்கையின் மீது பிதாவாகிய தேவன் அங்கீகார முத்திரையை அளித்திருக்கிறார் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது (யோவான் 6:27).**

**அவர் செய்த செயல்கள் பிதாவுடனான அவரது ஐக்கியத்தின் வெளிப்பாடாகும்.** *"...பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள்"* (யோவான் 10:38). *"... என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்"* (யோவான் 14:10). *"நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்"* (யோவான் 14:11).

**பிதா போதித்ததையே அவர் பேசினார்.** *"... என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்"* (யோவான் 8:28). *"நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன்"* (யோவான் 8:38). *"நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்... ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்"* (யோவான் 12:49,50). *"நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை..."* (யோவான் 14:10). *"... நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது"* (யோவான் 14:24).

**தான் ஜெபிக்கும்போது பிதா தனக்குச் செவிசாய்த்தார் என்பதில் அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது.** லாசருடைய

கல்லறைக்கு முன்பாக நின்று இயேசு சொன்னார், *“பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்”* (யோவான் 11:41).

**அவர் *“...பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிறவர்...”* (யோவான் 10:36) என்பதை அறிந்திருந்தார்.**

***“பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்”* (யோவான் 6:37) என்ற உறுதியுடன் இயேசு நடந்தார்.** அவரிடம் வருவதற்கு நியமிக்கப்பட்ட ஜனங்கள் அவரிடம் வருவார்கள். அவர்கள் பிதாவின் கரங்களில் பாதுகாப்பாக இருப்பதையும் அவர் அறிந்திருந்தார். *“அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது”* (யோவான் 10:29).

**பிதா எப்பொழுதும் தம்முடன் இருப்பார் என்பதில் இயேசு உறுதியாகவும் நம்பிக்கையுடனும் இருந்தார்.** *“ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை, நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்”* (யோவான் 8:16). *“என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார். அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்...”* (யோவான் 8:29). *“இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்...ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்”* (யோவான் 16:32).

**இயேசு எப்பொழுதும் பிதாவைப் பிரியப்படுத்தும் வாழ்க்கையை வாழ்ந்தார்** *“...பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்”* (யோவான் 8:29). அவர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தார். *“...என் பிதா*

*என்னிலும் பெரியவராயிருக்கிறார்"* (யோவான் 14:28). *"... நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன்"*(யோவான் 14:31). *"நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல..."* (யோவான் 15:10).

**பிதாவை மகிமைப்படுத்த இயேசு வாழ்ந்தார்.** அவர் ஜெபித்தார், *"பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்"* (யோவான் 12:28). *"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்"* (யோவான் 17:4).

## உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தி தெரிவித்தேன்

யோவான் 17 இல் பிதாவிடம் செய்த ஜெபத்தில், பிதாவின் நாமத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி இயேசு குறிப்பிட்டார். இந்த அறிக்கைகளிலிருந்து சில உட்பார்வைகளை நாம் பெறுகிறோம்.

**யோவான் 17:6,26**

**6 "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.**
**26நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்."**

**யோவான் 17:6,26 (தி பாஷன் ட்ரான்ஸ்லேஷன்)**

**6"பிதாவே, நீர் உண்மையில் யார் என்பதை நான் வெளிப்படுத்தினேன், நீர் எனக்குக் கொடுத்த புருஷர்களுக்கும் ஸ்திரீக்களுக்கும் உம்மை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உமது வார்த்தையைத் தங்கள் இதயங்களில் உறுதியாகப் பற்றிக்கொண்டார்கள்.**
**26 நீங்கள் யார் என்பதை நான் அவர்களுக்கு வெளிப்படுத்தினேன், மேலும் நான் அவர்களுக்கு உங்களை இன்னும் உண்மையானவராக ஆக்குவேன், அதனால் நீர் என்மீது வைத்திருக்கும் அதே முடிவில்லா அன்பை அவர்கள் அனுபவிப்பார்கள், ஏனென்றால் நான் அவர்களில்**

**வாழ்வது போல் உங்கள் அன்பும் அவர்களிலும் வாழும்!"**

ஆங்கிலத்தில் உள்ள நியூ கிங் ஜேம்ஸ் வெர்ஷன், *"உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்,"* என்ற இயேசுவின் கூற்றின் நேரடி மொழிபெயர்ப்பை வழங்கும் அதே வேளையில், தி பாஷன் ட்ரான்ஸ்லேஷன் அந்த அறிக்கையின் அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது, *"நீங்கள் உண்மையில் யார் என்பதை நான் வெளிப்படுத்தியுள்ளேன் மற்றும் நான் உம்மை வெளிப்படுத்தினேன்."* பிதாவின் நாமத்தில் வருதல், பேசுதல் மற்றும் கிரியை செய்தல் ஆகியவற்றின் இயேசுவின் நோக்கம் உண்மையில் பிதா யார் என்பதை வெளிப்படுத்துவதும் தெரியப்படுத்துவதும் என்பதை இது தெளிவுபடுத்துகிறது. அப்படியே, நாம் இயேசுவின் நாமத்தில் செல்வதன் நோக்கம், இயேசு உண்மையில் யார் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்துவதும் தெரியப்படுத்துவதும் ஆகும்.

---

பிதாவின் நாமத்தினாலே வருவது, பேசுவது மற்றும் கிரியை செய்வது என்பவைகளின் மூலமாக, உண்மையில் பிதா யார் என்று வெளிப்படுத்துவதும், தெரியப்படுத்துவதுமே இயேசுவின் குறிக்கோளாக இருந்தது. அப்படியே, நாம் இயேசுவின் நாமத்தில் செல்வதன் நோக்கம், இயேசு உண்மையில் யார் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்துவதும் தெரியப்படுத்துவதும் ஆகும்.

---

## உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்

**யோவான் 17:11,12**

**11 நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்.**

**[12]நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக்கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.**

11 மற்றும் 12 ஆகிய இரண்டு வசனங்களிலும், "காப்பது, பாதுகாப்பது, ஒரு கண்ணை வைப்பது" என்று பொருள்படும் "காத்தல்" (கிரேக்கம் *'தேரேஓ'*) என்ற அதே வார்த்தையை இயேசு பயன்படுத்துகிறார். இயேசு சரீரப் பிரகாரமாக சீஷர்களுடன் இருந்தபோது, பிதாவின் நாமத்தில், அதாவது பிதாவின் அதிகாரத்தால், இயேசு தமக்குக் கொடுக்கப்பட்ட மனிதர்களுக்கு ஆன்மீகப் பாதுகாப்பை வழங்கினார். இப்போது, தாம் பிதாவினிடத்திற்கு போவதற்கான நேரம் சமீபமாகிவிட்டதை அவர் அறிந்திருந்ததால், தம்முடைய சீஷர்களைத் தொடர்ந்து பாதுகாக்கவும், காக்கவும், அதே ஆன்மீகப் பாதுகாப்பை பிதாவின் நாமத்தில் அவர் கேட்கிறார். இயேசுவின் நாமத்தால் நாம் அக்கறை கொண்டவர்கள் மீதும், நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் மீதும் ஆன்மீகப் பாதுகாப்பை நீட்டிக்க முடியும் என்பதை இது நமக்குக் கற்பிக்கிறது.

## பிதாவுடன் முழுமையான ஐக்கியத்தில் வாழ்ந்த ஒரு வாழ்க்கை

**யோவான் 20:21**

**"இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி."**

பிதாவின் நாமத்தில் இயேசு எவ்வாறு செயல்பட்டார் என்பதைக் கவனிப்பதில், சீஷர்களாகிய நாம் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதன் அர்த்தம் என்ன என்பதைப் பற்றி நிறைய உட்பார்வைகளைப் பெறுகிறோம். "இயேசுவின் நாமத்தில்" என்று சொல்வது வெறும் ஒரு சொற்றொடரைக் காட்டிலும் அதிகமானதைக் குறிக்கிறது.

இயேசுவுக்கு "என் பிதாவின் நாமத்தில்" என்று கூறுவதில் என்ன அர்த்தம் இருந்ததோ அதே அர்த்தம் நாம் "இயேசுவின் நாமத்தில்" என்று கூறும்போதும் இருக்கவேண்டும். அது அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவருடைய பூமிக்குரிய வாழ்க்கை அனைத்தும் அவர் பிதாவின் நாமத்தில் இங்கே இருந்தார் என்ற சத்தியத்திலிருந்து உருவானது. அது பிதாவுடன் முழுமையான ஐக்கியத்தில் வாழ்ந்த ஒரு வாழ்க்கை.

*"நான் என் பிதாவின் நாமத்தில் வந்துள்ளேன்"* என்று இயேசு கூறியதை, பிதாவுடனான அவரது தனிப்பட்ட உறவிலிருந்து நாம் பிரிக்க முடியாது. பிதாவின் நாமத்தில் வருவது என்றால் அவர் பிதாவுடன் பரிபூரண ஐக்கியத்தில்- ஒரு முழுமையான ஐக்கியத்தில் நடந்தார் என்பதையும் குறிக்கிறது. அப்படியே நாமும் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதிலிருந்து கர்த்தராகிய இயேசுவுடனான நமது தனிப்பட்ட உறவைப் பிரிக்கக்கூடாது. நாம் இயேசுவிலும் அவர் நம்மிலும் இருக்கிறார். இயேசுவுடனான இந்த ஐக்கியமும், ஒவ்வொரு நாளும் நாம் எப்படி வாழ்கிறோம் என்பதும் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கு முக்கியமானது.

இயேசு பிதாவுடன் இணைந்து பூமியில் வாழ்ந்த விதம், இயேசுவோடு இணைந்து நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. *"ஜீவனுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்"* (யோவான் 6:57). *"நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்"* (யோவான் 14:20). *"நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்"* (1 யோவான் 2:6).

ஒரு விசுவாசி இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவது என்பது கர்த்தராகிய இயேசுவால் நமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் வெளிப்பாடாக இருந்தாலும், அது இன்னும் அநேக காரியங்களையும் குறிக்கிறது. அது நாம் யார், எப்படி வாழ்கிறோம், என்ன சொல்கிறோம், என்ன செய்கிறோம் என்பதைப் பற்றியது. அது இயேசுவோடு முழுமையாக இணைந்து வாழும் ஒரு வாழ்க்கை. இது எல்லா வகையிலும், எல்லா விஷயங்களிலும், எல்லா நேரங்களிலும் இயேசுவை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துவதாகும்.

---

இயேசு பிதாவின் நாமத்தில் வந்தார். அவர் தமது நாமத்தில் நம்மை அனுப்பியுள்ளார். இயேசு பிதாவுடன் ஐக்கியமாக நடந்தபடியே, நாமும் இயேசுவுடன் ஐக்கியமாக நடக்க வேண்டும், அதனால் அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதன் மூலம், நாம் முழுமையாக இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்துவோம்.

---

## சிந்தனைக்கு

1) *"நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்தேன்"* என்ற இயேசுவின் வார்த்தைகளின் அர்த்தத்தை பின்வரும் குறிப்புகளின் அடிப்படையில் ஆராய்ந்து பாருங்கள்.

- அவருடைய அதிகாரத்தின் ஆதாரம் — பிதா எனக்கு அதிகாரம் அளித்துள்ளார்
- அவருடைய பணியின் நோக்கம் — பிதாவை வெளிப்படுத்தி மகிமைப்படுத்துவது,
- அவரது அன்றாட வாழ்க்கையின் அர்ப்பணிப்பு — பிதாவுடன் முழுமையான ஐக்கியத்தில் வாழுவது,

மற்றும்

- ஊழியத்திற்கான அணுகுமுறை — பிதா சொல்லுவதைப் பேசவும், பிதா செய்வதை செய்யவும்.

"இயேசுவின் நாமத்தினாலே" நாம் வெளியே செல்லும்போது இதை எவ்வாறு பின்பற்றுவது?

# 5

# இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை

ஏற்கெனவே நாம் முன்பு குறிப்பிட்டபடி, இயேசு தம்முடைய போதனைகளை பிரசங்கிக்கவும், அவருடைய நாமத்தில் குணப்படுத்தவும், விடுதலை அளிக்கவும் மற்றும் அற்புதங்களைச் செய்யவும் தம்முடைய 12 அப்போஸ்தலர்களையும் பின்னர் 70 சீஷர்களையும் அனுப்பினார். எனவே, இவர்கள் "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்" வல்லமையான செயல்களைச் செய்து வந்தனர்.

## ஆரம்பகால சீஷர்கள்

சுவிசேஷங்களில், இயேசு 12 அப்போஸ்தலர்களையும் தம்முடைய வேலையை செய்ய கட்டளையிட்டதை நாம் காண்கிறோம்.

**மத்தேயு 10:1,7,8 (மாற்கு 6:7,12,13ஐயும் பார்க்கவும்)**

**1அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.**

**7 போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.**

**8வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.**

**லூக்கா 9:1,2,6,10அ**

**1அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும்,**

**அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து,**
**[2]தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்.**
**[6]அவர்கள் புறப்பட்டுப்போய், கிராமங்கள்தோறும் திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்.**
**[10அ] அப்போஸ்தலர் திரும்பிவந்து, தாங்கள் செய்த யாவையும் அவருக்கு விவரித்துச் சொன்னார்கள்.**

இயேசு தம்முடைய 12 அப்போஸ்தலர்களுக்கு அவருடைய நாமத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை வெளிப்படையாகக் கற்பித்ததற்கான பதிவு நம்மிடம் இல்லை என்றாலும், அவர்கள் வெளியே சென்றபோது அவருடைய நாமத்தைப் பயன்படுத்தினார்கள் என்பது நமக்குத் தெரியும். லூக்கா 9ல், அப்போஸ்தலர்களை அனுப்பிய உடனேயே, பின்வரும் பதிவைக் காண்கிறோம்.

**லூக்கா 9:49,50**
**[49]அப்பொழுது யோவான் அவரை நோக்கி: ஐயரே, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால், அவனைத் தடுத்தோம் என்றான்.**
**[50]அதற்கு இயேசு: தடுக்கவேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார்.**

12 அப்போஸ்தர்கள் குழுவில் இல்லாதிருந்த ஒரு நபர் நடந்து கொண்டிருந்த காரியங்களைக் கண்டு, அதைப் போல தானும் செய்ய விரும்பியது இங்கு தெளிவாகத் தெரிகிறது. அந்த நபர் இயேசுவைப் பார்த்திருக்கலாம், அவர் பேசுவதைக் கேட்டிருக்கலாம், இயேசு தேவகுமாரனான மேசியா என்றும் விசுவாசித்திருக்கலாம் பின்னர் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்திப் பிசாசுகளை துரத்தியிருக்கலாம் மற்றும் அற்புதங்கள் செய்திருக்கலாம் (மாற்கு 9:38,39ஐயும் பார்க்கவும்). எனவே, 12 அப்போஸ்தலர்களும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை தைரியமாகப் பயன்படுத்தி அவருடைய செயல்களைச் செய்தார்கள்

என்பதையும், வேறு யாரோ அதையே செய்தார் என்பதையும் நாம் அறிந்துகொள்கிறோம்.

இயேசு மேலும் 70 சீஷர்களை நியமித்தார், மேலும் அவர் 12 அப்போஸ்தலர்களுக்கு அளித்த அதே கட்டளையை அவர்களுக்கும் வழங்கினார்.

**லூக்கா 10:1,9,17-19**

**1இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்.**

**9அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.**

**17பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்.**

**18அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்.**

**19இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகலவல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.**

இந்த அப்போஸ்தலர்களும் சீஷர்களும் இயேசுவின் நாமத்தில் பிரசங்கித்து வந்ததுடன், சுகப்படுத்துதல் மற்றும் விடுதலையின் வல்லமையான செயல்களையும் செய்துகொண்டிருந்தார்கள் என்பதை இது மிகத் தெளிவாக்குகிறது. இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தி அவர்கள் பார்க்கும் முடிவுகளைக் கண்டு அவர்கள் உற்சாகமடைந்தனர். *“ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள்”* (வச.17). பின்னர், இயேசு தம்முடைய நாமத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு இருக்கும் அதிகாரத்தின் அளவை அவர்களுக்கு

விளக்குகிறார். அவர்கள் செயல்படுத்தும் அதிகாரம் *"சத்துருவினுடைய சகலவல்லமையையும் மேற்கொள்ளும்"* அதிகாரமாகயிருந்தது. சத்துரு தங்களுக்கு எதிராக வெற்றிகரமாக பதிலடி கொடுப்பான் என்ற பயம் அவர்களுக்கு இருக்க வேண்டியதில்லை, ஏனென்றால் இயேசு சொன்னார், *"ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது."*

---

எல்லா பிசாசுகளையும் சத்துருவினுடைய சகலவல்லமையையும்
மேற்கொள்ளும் அதிகாரத்தையும் இயேசுவின் நாமம் நமக்கு அளிக்கறது.

---

**எல்லா விசுவாசிகளுக்கும் இயேசு தம் நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை அளித்திருக்கிறார்**

யோவான் எழுதின சுவிசேஷத்தில், இயேசு தனது செயல்களைச் செய்யும்போதும் ஜெபிக்கும்போதும் அவருடைய நாமத்தைப் பயன்படுத்துமாறு சீஷர்களுக்குக் கற்பித்ததைப் பற்றிய பதிவு உள்ளது. இந்த வசனங்களை நாம் இங்கே குறிப்பிடுகிறோம், பின்னர் அவற்றை விரிவாகப் பார்ப்போம்.

**யோவான் 14:12-14**

**12"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.**

**13நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.**

**14 என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்."**

**யோவான் 16:23,24**

**23"அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங்கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள்**

**என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.**
**24 இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்ளுவீர்கள்."**

பின்வருவனவற்றைக் கவனியுங்கள்.

யோவான் 14:12-14ன் சூழல் என்னவென்றால், அனைத்து விசுவாசிகளும் இயேசு செய்த கிரியைகளை, மேலும் பெரிய கிரியைகளை, அவருடைய பரமேறுதலுக்குப் பிறகு, அவர்களுக்கு அதிகாரம் அளிக்க, அவர் பரிசுத்த ஆவியை அனுப்பியபோது, அதைச் செய்வார்கள் என்பதாகும். யோவான் 16:23,24ன் சூழலும் *"அந்த நாளில்"* என்பது அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிந்தைய காலத்தைக் குறிக்கிறது, அதாவது, இப்பொழுது நாம் வாழும் காலம் ஆகும்.

எனவே, இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கும், இயேசு செய்த கிரியைகளைச் செய்வதற்கும், அதைவிட பெரிய கிரியைகளைச் செய்வதற்கும் ஒவ்வொரு விசுவாசிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. நம்முடைய கோரிக்கைகளை நேரடியாக பிதாவிடம் கொண்டு வர இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை ஒவ்வொரு விசுவாசிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

கர்த்தராகிய இயேசு தம்முடைய நாமத்தைப் பயன்படுத்துவது சம்மந்தமான பல்வேறு அம்சங்களையும் அவருடைய சீஷர்களுக்கு கற்பித்தார். இதைக்குறித்து அடுத்த அத்தியாயங்களில் பார்ப்போம்.

அவரது உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, பிரதான கட்டளையில், இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை அனைத்து விசுவாசிகளுக்கும் வழங்கப்படுவதை நாம்

மீண்டும் ஒருமுறை காண்கிறோம்.

**மாற்கு 16:17,18**

**17“விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;**

**18சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.”**

விசுவாசிக்கிற அனைவரும், அனைத்து விசுவாசிகளும், இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தி இயேசு குறிப்பிட்ட அனைத்தையும் செய்ய முடியும் என்பது இந்த கட்டளையில் மறைமுகமாக உள்ளது. எல்லா விசுவாசிகளும் பிசாசுகளை எதிர்கொள்ளவும், அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றை மேற்கொள்ளவும், துரத்தவும் முடியும். ஆபத்தான காரியங்களைச் செய்ய வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் (உதாரணமாக, சர்ப்பங்களை எடுப்பது, விஷம் குடிப்பது போன்றவை), அவர்கள் இயேசுவின் நாமத்தில் காயமடையாமல் இருப்பார்கள். அவர்கள் இயேசுவின் நாமத்தினாலே வியாதிஸ்தர்களைக் குணப்படுத்துவார்கள்.

## அனைத்து விசுவாசிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ‘செயல் உரிமை அதிகாரம்’

இன்றைய மொழியில், இயேசு நமக்கு “செயல் உரிமை அதிகாரத்தை”க் கொடுத்திருக்கிறார் என்று கூறலாம். இது அவருடைய குறிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற அவரது நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையாகும்.

மேலும் பல சட்டபூர்வமான விபரங்களுக்குள் செல்லாமல், இது அப்படியே புரிந்து கொள்ளப்பட்டால், செயல் உரிமை அதிகாரம் என்பது பின்வருவனவற்றைப் பொறுத்தது...

1) அந்தப் பெயருக்குப் பின்னால் இருப்பவர்—அவர் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அந்த நபரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள்

2) பயன்பாட்டின் அளவு—குறிப்பிட்ட பணிகளைச் செய்ய நீங்கள் அதைப் பயன்படுத்தலாம்-மற்றும் செயல் உரிமை அதிகாரம் செல்லுபடியாகும் காலம் வரை

தம்முடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான சிலாக்கியத்தையும் உரிமையையும் இயேசு நமக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய நாமத்திற்குப் பின்னணியில் உள்ள நபர் அவரே. அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான பாக்கியத்தை நமக்கு வழங்கிய நபரின் மகத்துவத்தை நாம் பார்த்தோம். ஒருவேளை இதனை நம் இதயங்களும் மனங்களும் ஒருபோதும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது, அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை இயேசு நமக்குக் கொடுத்ததில் நமக்குக் கொடுக்கப்பட்ட பெரிய பாக்கியத்தை விவரிக்க நம் வார்த்தைகளும் போதுமானதாக இருக்காது.

இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், அவரை வெளிப்படுத்தவும், அவருடைய ராஜ்யத்தை முன்னேற்றவும், அவருடைய தேவாலயத்தைக் கட்டவும், மக்களுக்குச் சேவை செய்யவும், பிதாவை மகிமைப்படுத்தவும், அவருடைய நாமத்தில் அவருடைய கிரியைகளைச் செய்வதற்காகவும் நாம் இங்கே இருக்கிறோம். அவரை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்த அவர் நமக்கு அதிகாரம் அளித்துள்ளார்.

வேதத்தில் இருந்து நாம் அறிந்த வரையில், திருச்சபை, பரிசுத்தவான்கள், இந்த தற்போதைய யுகத்திலும் (“சபையின் யுகம்” என்று அழைக்கப்படும்) மற்றும் ஆயிரம் ஆண்டு (இயேசுவின் 1000 ஆண்டு அரசாட்சி) காலத்திலும்

இயேசுவை பிரதிநிதித்துவப்படுத்துவார்கள். எனவே, நம்முடைய செயல் உரிமை அதிகாரம் காலவரையின்றி செயல்படும்!

இயேசு சிறு குழந்தை முதல் முதியோர்வரை ஒவ்வொரு விசுவாசிகளுக்கும், செயல் உரிமை அதிகாரம், சிறப்புரிமை மற்றும் தம்மை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்கியுள்ளார். நாம் ஒவ்வொருவரும் அவருடைய நாமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வல்லமையிலும் அதிகாரத்திலும் நடக்க முடியும். நாம் எப்பேர்ப்பட்ட அருமையான சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்! இதனை நம் இதயம் கிரகித்துக் கொள்வதாக! இயேசுவின் மகத்தான நாமத்தில் நமக்கிருக்கும் வல்லமையிலும் அதிகாரத்திலும் நாம் எழுந்து நடப்போமாக!

---

இயேசு சிறு குழந்தை முதல் முதியோர்வரை
ஒவ்வொரு விசுவாசிகளுக்கும், செயல் உரிமை
அதிகாரம், சிறப்புரிமை மற்றும் தம்மை முழுமையாகப்
பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அவருடைய நாமத்தைப்
பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்கியுள்ளார்.

---

## சிந்தனைக்கு

1) ஒவ்வொரு விசுவாசியும் இயேசுவின் நாமத்தை வல்லமையான கிரியைகளைச் செய்வதற்கும் ஜெபத்திற்கும் பயன்படுத்துவதற்கான சிலாக்கியத்தை தெளிவாக நிரூபிக்கிற இந்த அத்தியாயத்தில் உள்ள வேதவசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

2) விசுவாசியின் செயல் உரிமை அதிகாரம் இப்போதும் நடைமுறையில் இருக்கும் பட்சத்தில் ஆரம்பகால திருச்சபையின் இறுதி காலத்தின்போதே (அல்லது கடைசி அப்போஸ்தலன் மரித்த போதே) திருச்சபைக்கான அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன என்று சொல்வது சரிதானா? வேதம் எழுதப்பட்ட பிறகு செயல் உரிமை அதிகாரத்தின் வரம்பு மாறும் என்று இயேசு எங்காவது குறிப்பிட்டுள்ளாரா?

# 6

# பரிசுத்த ஆவியானவரான தேவன் இயேசுவின் நாமத்திலே இங்கே இருக்கிறார்

**யோவான் 14:16-18,26**

**[16]நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

**[17]உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.**

**[18]நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.**

**[26]என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.**

**யோவான் 14:26 (AMPC)**

**ஆனால் ஆறுதலாளர் (ஆலோசகர், தேற்றரவாளர், பரிந்துரை செய்பவர், வழக்காடுகிறவர், வலுவூட்டுபவர், ஆதரவாளர்), பரிசுத்த ஆவியானவர், என் நாமத்தில் பிதா அனுப்பும் [என் ஸ்தானத்தில், என்னைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், என் சார்பாக செயல்படவும்], அவர் உங்களுக்கு எல்லாவற்றையும் போதிப்பார். மேலும் நான் உங்களுக்குச் சொன்ன அனைத்தையும் அவர் உங்களுக்கு நினைவுபடுத்துவார் (உங்களுக்கு நினைவூட்டுவார், உங்கள் நினைவிற்கு கொண்டு வருவார்).**

பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுகையில், பரிசுத்த ஆவியானவர் *"வேறொரு தேற்றரவாளன்"* (யோவான் 14:16) அல்லது *'அலோஸ் பரக்லெடோஸ்'* என்று இயேசு கூறினார்.

*'அலோஸ்'* என்ற வார்த்தையின் அர்த்தம் "அதே வகையான மற்றொன்று" (**எடுத்துக்காட்டு**: இரண்டு ஆப்பிள்கள்) *'ஹெடெரோஸ்'* என்பதற்கு இது "வேறு வகையானது" (**எடுத்துக்காட்டு**: ஒரு ஆப்பிள் மற்றும் ஒரு ஆரஞ்சு) என்று அர்த்தமாகும். பரிசுத்த ஆவியானவர் தெய்வத்துவத்தில் உள்ள தேவன் மற்றும் நபராகயிருக்கிறார் (1 யோவான் 5:7). பரிசுத்த ஆவியானவர் பிதாவையும் குமாரனையும் முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் இயேசுவைப் போன்றவர் மற்றும் முழுமையாக இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார், எனவே இயேசு பரிசுத்த ஆவியை அனுப்பும் போது, *"நான் உங்களிடத்தில் வருவேன்"* என்று கூறினார். பரிசுத்த ஆவியானவர் இயேசுவை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துகிறார், ஆதலால் பரிசுத்த ஆவியானவர், *"கிறிஸ்துவின் ஆவி"* (ரோமர் 8:9; 1 பேதுரு 1:11) மற்றும் *"தமது குமாரனுடைய ஆவி"* (கலாத்தியர் 4:6) என்றும் அழைக்கப்படுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் நாமத்தில் அனுப்பப்பட்டார். ஆம்ப்ளிஃபைட் பைபிள் கிளாசிக் பதிப்பு, "என் நாமத்தில்" என்றால் என்ன என்பதை விளக்குகிறது. அதில், *"என்னுடைய இடத்தில், என்னை பிரதிநிதித்துவப்படுத்தவும், என் சார்பாக செயல்படவும்"* என்று கூறுகிறது. பரிசுத்த ஆவியானவர் இங்கே இயேசுவின் இடத்தில் இருக்கிறார், அவரை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துகிறார் மற்றும் அவருடைய சார்பாக செயல்படுகிறார். இதன் பொருள் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் இயேசுவை வெளிப்படுத்தி, அவரைத் தெரியப்படுத்துவார், மற்றும் இயேசு இங்கே இருந்தால் என்ன சொல்லுவாரோ, எவைகளை எல்லாம் செய்வாரோ அவற்றை பரிசுத்த ஆவியானவரும் செய்வார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் நாமத்தில் இங்கே இருக்கிறார். அவர் இயேசுவின் இடத்தில் இருக்கிறார், அவரை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துகிறார் மற்றும் அவர் சார்பாக செயல்படுகிறார்.

**யோவான் 15:26,27**

**26 "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார்.**
**27 நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

பரிசுத்த ஆவியானவர் இயேசுவைக்குறித்து சாட்சி கொடுக்கிறார், பேசுகிறார், சாட்சியாயிருக்கிறார் மற்றும் இயேசுவை வெளிப்படுத்துகிறார். இயேசுவைக்குறித்து, சாட்சி கொடுக்கவும், சாட்சிகளாயிருக்கவும், பேசவும், வெளிப்படுத்தவும் பரிசுத்த ஆவியைப் போன்ற அதே வேலை நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**யோவான் 16:14**

**அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.**

பரிசுத்த ஆவியானவர் இங்கே இயேசுவின் நாமத்தில் இருக்கிறார், எனவே இயேசுவை மகிமைப்படுத்தும் விதத்தில் பேசுகிறார் மற்றும் செயல்படுகிறார். மேலும் இதுவே நமது வேலை-இயேசுவை உலகில் மகிமைப்படுத்துவது.

மனதில் கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான உண்மை என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் மூலம் செயல்படுகிறார். இவ்வாறு, இயேசுவின் நாமத்தில்

வருவதன் மூலம், பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுடன் ஒன்றிணைந்து தனது வேலையை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளார்.

பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் நாமத்தில் வந்தது போன்றே நாமும் இயேசுவின் நாமத்தில் அனுப்பப்பட்டுள்ளோம். எனவே, நாம் “இயேசுவின் நாமத்தில்” என்று கூறும்போது, நாம் தனித்து விடப்படவில்லை. நாம் இயேசுவின் நாமத்தில் பேசும்போதும் வேலை செய்யும்போதும் தேவனுடைய ஆவியானவர் நம்மோடு இருக்கிறார். இயேசுவின் நாமத்தில் நாம் செய்யும் எல்லாவற்றிலும் அவர் நம்மோடு இருக்கிறார். இயேசுவின் நாமத்தினால் செயல்படுகிற விசுவாசி, தேவனுடைய ஆவியானவர் தன்னுடன் இருப்பதை உறுதிசெய்ய முடியும். இயேசுவை மகிமைப்படுத்தவும், நம் மூலம் இயேசுவை முழுமையாக வெளிப்படுத்தவும் தேவனுடைய ஆவியானவர் நமக்குள்ளும், நம் மூலமாகவும் செயல்படுவார். உண்மையில், அவர் நம்மை விட இதை செய்ய அதிக ஆவலுடன் இருக்கிறார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்! இயேசுவின் நாமத்தில் நாம் பரிசுத்த ஆவியானவருடன் இங்கே இருக்கிறோம்!

அப்போஸ்தலர்கள் கூறியது போல், *“இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்”* (அப்போஸ்தலர் 5:32).

## சிந்தனைக்கு

1) பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் நாமத்தில் இங்கே இருக்கிறார். மேலும், விசுவாசியும் இயேசுவின் நாமத்தில் அனுப்பப்பட்டுள்ளார். இவைகள் விசுவாசிக்கு என்ன அர்த்தம் அளிக்கிறது என்பதை இதன் மூலம் யோசித்துப் பாருங்கள். இதன் வெளிச்சத்தில், பரிசுத்த ஆவி என்ற நபருடனான நமது ஈடுபாடு, நமது தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை எவ்வாறு மாற்ற வேண்டும்?

# 7

# இயேசுவின் நாமத்தை நாம் பயன்படுத்தும்போது என்ன நடக்கிறது

இயேசுவின் நாமத்தில் எதையாவது நாம் சொல்கிறோம் அல்லது செய்கிறோம் என்பதை அறிவிக்கும்போது, நாம் சரியாக என்ன செய்கிறோம்? உதாரணமாக, நாம் ஒரு வியாதிஸ்தன் மீது கை வைத்தால், அல்லது வியாதியுள்ள ஒருவருக்கு இயேசுவின் நாமத்தில் வேறு வழியில் ஊழியம் செய்தால், நாம் சரியாக என்ன செய்கிறோம்? நாம் இயேசுவின் நாமத்தில் பிசாசுகளை வெளியேறும்படியாகக் கட்டளையிட்டு பேசும்போது, ஆவிக்குரிய உலகில் அது சரியாக எதைக் குறிக்கிறது? இயேசுவின் நாமத்தில் புயலிடமோ (இது ஒரு சூழ்நிலையாகவோ, நிலைமையாகவோ இருக்கலாம்) அல்லது ஒரு மலையிடமோ (இது ஒரு தடையாகவோ, சவாலாகவோ இருக்கலாம்) நாம் பேசும்போது எதை எதிர்பார்க்க வேண்டும்? இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் ஏதாவது செய்யுமாறு நாம் ஜெபிக்கும்போது, இந்த விண்ணப்பம் தம் முன் வைக்கப்படுவதை பிதா எப்படி பார்க்கிறார்? விசுவாசிகளாகிய நாம் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது எந்த விதமான சக்திகள் ஆவிக்குரிய உலகில் செயல்படுகின்றன?

விசுவாசிகளாகிய நாம் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது, இயேசு நமக்குக் கொடுத்த செயல் உரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துகிறோம். கர்த்தராகிய இயேசுவினால் செய்யத் தகுந்த அதிகாரம் பெற்றதை நாம் செய்கிறோம். போக்குவரத்துக் காவலர் பற்றி

யோசித்துப்பாருங்கள்.சாலையில் வாகன நெரிசல் ஏற்படும். ஆனால், போக்குவரத்து சீருடையில் இருக்கும் காவலர், "நிறுத்து" என்று கையை உயர்த்தும்போது, அனைத்து வாகனங்களும் நிற்கின்றன. உடல் ரீதியாக, அவரால் வாகனங்களை நிறுத்த இயலாது. ஆனால் அவர் உள்ளூர் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாலும், அவர் தனது சீருடையில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்துவதாலும் (அவர் செய்ய அனுமதிக்கப்பட்டதைச் செய்கிறார்), ஓட்டுநர்கள் அவரது அதிகாரத்தை அடையாளம் கண்டு தங்கள் வாகனங்களை நிறுத்துகிறார்கள். ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது, ஆவிக்குரிய ரீதியில், நமது சீருடையில், நமது பரலோக அங்கீகாரத்திற்குள் நுழைகிறோம், மேலும் ஆவிக்குரிய மண்டலம் புரிந்துகொண்டு பதிலளிக்கும் ஆணையை வெளியிடுகிறோம் என்று சொல்லலாம்.

"இயேசுவின் நாமத்தில்" என்று நாம் கூறும்போது, இயேசு நமக்குக் கொடுக்கும் முழு அதிகாரத்துடனும் வல்லமையுடனும் நாம் இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அவருடைய இடத்தில், அவருடைய சார்பாக, இயேசு இருந்தால் என்ன செய்யவாரோ அதையே செய்கிறோம் என்பதை தைரியமாக அறிவிக்கிறோம்.

---

"இயேசுவின் நாமத்தில்" என்று நாம் கூறும்போது, இயேசு நமக்குக் கொடுக்கும் முழு அதிகாரத்துடனும் வல்லமையுடனும் நாம் இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அவருடைய இடத்தில், அவருடைய சார்பாக, இயேசு இருந்தால் என்ன செய்வாரோ அதையே நாமும் செய்கிறோம் என்பதை தைரியமாக அறிவிக்கிறோம்.

---

அவருடைய நாமம் அந்த காரியத்தின் மீது

அவரைக் கொண்டு வருகிறது. இயேசுவே இப்போது அங்கே இருக்கிறார். அவர், இயேசு என்ற அவருடைய நாமத்தில் இருக்கின்றார். அவருடைய நாமத்திலே, அவர் காணப்படுகிறார் (மத்தேயு 18:20). நாம் ஒரு பிணியாளி மீது கை வைக்கும்போது, அவரே அந்த பிணியாளியின் மீது கை வைப்பது போல் இருக்கிறது. நாம் இயேசுவின் நாமத்தில் பேசும் கட்டளைகள் இயேசு பேசுவது போலவே இருக்கிறது. இயேசு நம் மூலம் செயல்படுகிறார். இவ்வாறாக சூழ்நிலைகள் அனைத்தையும் அவரே இப்போது பொறுப்பெடுப்பவராக இருக்கிறார்.

பரலோகத்தில் உள்ள அனைத்து அதிகாரங்களும் இந்த நிலைமைக்குள்ளாக கொண்டு வரப்படுவதற்கு அவருடைய நாமமே காரணமாக அமைகிறது. அவருடைய நாமத்திற்குப் பின்னால் இருக்கும் அதே அரசுரிமை, ராஜ்ய பலம், ஆட்சி மற்றும் அதிகாரம் ஆகியவை இப்போது சூழ்நிலைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இப்போது முடியாதது என்பது எதுவுமில்லை. சகல அதிகாரமும் அவர் நாமத்தில் உள்ளது. வியாதிக்கு எதிராக நாம் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது, வியாதிக்கு அதிகாரம் இல்லை. பிசாசின் சக்திகளுக்கு எதிராக நாம் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது, பிசாசுகளுக்கு அதிகாரம் இல்லை. அந்த நாமத்திற்கு எதிராக அவர்கள் சக்தியற்றவர்கள் ஆகிறார்கள். இயேசுவின் நாமத்தில், சூழ்நிலைகளுக்கும் மேலாக ராஜ்யத்தின் ஆட்சி கொண்டுவரப்படுகிறது.

அவருடைய நாமத்தில் அவருடைய வல்லமை அமைந்திருக்கின்றது (1 கொரிந்தியர் 5:4). நாம் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது, அவருடைய நாமத்தில் அனுப்பப்பட்ட கிறிஸ்துவின் ஆவியான பரிசுத்த ஆவியானவர், அங்கே இருக்கிறார். சர்வவல்லமையுள்ள தேவனின் வல்லமை வெளிப்படுகிறது. இயேசுவின் நாமத்தில் நாம் பிறப்பித்த கட்டளைகளின் வார்த்தைகளுடன்

ஆவியின் வல்லமை வெளிப்படுகிறது.

நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கும்போது, நாம் அவருடைய இடத்தில், அவர் சார்பாக நின்று, பிதாவிடம் விண்ணப்பம் செய்கிறோம். இயேசுவே அந்த விண்ணப்பங்களைச் செய்வது போல் உள்ளது. இதற்கு மாற்றுக்கருத்துஇல்லை.நம்முடையஜெபத்தோடுஇணைந்து இப்போது அவருடைய நாமமும் இருக்கிறது. அவருடைய நாமம் நம்முடைய ஜெபத்தில் ஒருங்கிணைந்ததாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை என்றால் "இயேசுவின் நாமத்தில்" ஜெபிப்பது பயனற்றதாக இருக்கும்! நம்முடைய ஜெபத்தில் "இயேசுவின் நாமத்தில்" என்று குறிப்பிடும்போது, இயேசு நமக்குக் கொடுக்கும் முழு அதிகாரத்துடனும் வல்லமையுடனும் நாம் இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அவருடைய இடத்தில், அவருடைய சார்பாக, இயேசு இருந்தால் என்ன கேட்டிருப்பாரோ அதனையே நாமும் கேட்கிறோம் என்பதை நம்முடைய ஜெபம் மூலம் வெளிப்படுத்துகிறோம்!

**அவரைத் துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்துவது**

அவருடைய நாமத்தில், அவர் சொல்வதைச் சொல்லவும் அவர் செய்வதைச் செய்யவும் நாம் அவரை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். ஆகவே, இயேசு சொல்வதை நாம் சொல்வதன் மூலமும், அவர் செய்வதை நாம் செய்வதன் மூலமும் அவரை துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்துவது அவசியமாகிறது.

எனவே, எந்தச் சூழ்நிலையிலும் இயேசு என்ன சொல்வார் அல்லது செய்வார் என்பதை அறிவது முக்கியம். சுவிசேஷங்களில் இயேசுவைக் காண்பது போல் நாம் நம் மனதை, அதாவது நமது சிந்தனையைப் புதுப்பிக்க வேண்டும். உதாரணமாக, சுவிசேஷங்களில் காணப்படுவதுபோலே இயேசு எவ்வாறு சிந்தித்தார், பேசினார், நடந்துகொண்டார்

என்பதை விவரிக்கும் சில விஷயங்கள் இங்கே உள்ளன.

அவர்களின் படகு ஒரு புயலில் சிக்கி ஏறக்குறைய மூழ்கிக் கொண்டிருந்த போது இயேசு நித்திரையில் இருந்தார். அவர் நித்திரையிலிருந்து எழுந்தவுடன், புயலை எதிர்கொண்டு, காற்று மற்றும் அலைகளை அமைதியாக இருக்கும்படி கட்டளையிட்டார்.

யவீருவின் மகளுடைய நிலைமை மிகவும் மோசமாகி அவள் மரித்து விட்டாள் என்ற நிலைமை வந்தபோதும் கூட இயேசு யவீருவின் வீட்டிற்கு நேராகக் கடந்து வந்து கொண்டிருந்தார். அப்போது இயேசு வெறுமனே, *“பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு”* என்று கூறினார், மேலும் அந்த மகள் உயிரோடு எழுப்பப்பட்டாள்.

5000க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஒரு தேவையை அவர் எதிர்கொண்டபோது, இயேசு தம் சீஷர்களிடம் அவர்கள் உண்பதற்கு ஏதாவது கொடுக்கச் சொன்னார். இது இயற்கையாகவே சாத்தியமற்றது என்ற போதிலும், அவர் ஒரு சிறுவனின் மதிய உணவில் இருந்து ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து ஜெபித்து, அதிகமாக்கி, விநியோகித்தார்.

தன்னுடைய குழந்தையைப் பிடித்திருந்த பிசாசை சீஷர்களால் துரத்த இயலாத அனுபவத்தை பெற்றிருந்த ஒரு மனிதனை இயேசு சந்தித்தபோது இவ்வாறு கூறினார் *“நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்”* (மாற்கு 9:23).

லாசரு இறந்து நான்கு நாட்கள் கல்லறையில் இருந்த நம்பிக்கையற்ற சூழ்நிலையை எதிர்கொண்டபோது, இயேசு கூறினார், *“நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்...”* (யோவான் 11:40).

இதுதான் கிறிஸ்துவின் சிந்தை. இதுவே இயேசுவின் கண்ணோட்டம். இயேசு இப்படித்தான் செயல்பட்டார் மற்றும் சூழ்நிலைகளை எதிர்கொண்டார். இதைத்தான் அவர் பிதாவிடமிருந்து பார்த்தார், மற்றும் கேட்டார்.

## பரிசுத்த ஆவியானவர் சொல்வதைக் கேளுங்கள்

**யோவான் 16:13-15**

**[13]சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.**

**[14] அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.**

**[15]பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.**

பரிசுத்த ஆவியானவர் இங்கே இயேசுவின் நாமத்தில் இருக்கிறார். அவர் நமக்குள் இருக்கிறார். சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துபவர் அவரே. அவர் இயேசு சொல்வதைக் கேட்டு அதை நமக்குத் தெரிவிக்கிறார். எனவே, நாம் இயேசுவை துல்லியமாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு, நாம் தேவனின் ஆவிக்கு செவிசாய்க்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் கிறிஸ்துவின் மனதை நமக்கு வெளிப்படுத்துகிறார் (1 கொரிந்தியர் 2:9-16) எனவே நாம் என்ன சொல்ல வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவோம், அதனால் நாம் இயேசுவை துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்த முடியும்.

## சிந்தனைக்கு

1) நாம் "இயேசுவின் நாமத்தில்" ஜெபிக்கும்போதும், பேசும்போதும், அல்லது செயல்படும்போதும் நடைமுறைக்குவரும்பல்வேறு ஆவிக்குரியமாற்றங்களைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். இந்த வெளிப்பாடு நீங்கள் ஜெபிக்கும் விதம், தனிப்பட்ட வாழ்க்கை சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் விதம் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு நீங்கள் ஊழியம் செய்யும் விதத்தை எப்படி மாற்றும்?

2) அவருடைய நாமத்தில் ஜெபிக்கும்போதும், பேசும்போதும், அல்லது செயல்படும்போதும், கிறிஸ்துவை துல்லியமாகப் பிரதிநிதித்துவப்படுத்த, நாம் கிறிஸ்துவின் மனதை அறிந்து கொள்ள வேண்டும்.

- சுவிசேஷங்களில் அவரை நெருக்கமாகக் கவனிப்பதன் மூலமும்
- பரிசுத்த ஆவியானவர் சொல்வதை கேட்பதன் மூலமும்.

இந்த இரண்டு பகுதிகளிலும் உங்களை ஆராய்ந்து பாருங்கள்.

- சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல்வேறு சூழ்நிலைகளில் இயேசு எவ்வாறு சிந்தித்தார் மற்றும் அவற்றை எவ்வாறு எதிர்கொண்டார் என்பதை நீங்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?
- அன்றாட வாழ்க்கைச் சூழ்நிலைகளில் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து கேட்பதிலும், அவர் சொல்வதை கவனிப்பதிலும், செவி சாய்த்து கேட்பதிலும் நீங்கள் வசதியாக (திறமையுள்ளவராக) இருக்கிறீர்களா?

(மேலும் ஆய்வுக்கு, APC புத்தகங்கள், **"ஆண்டவருடைய**

**வழிநடத்துதலை பெறுதல்,"** **"பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்"** மற்றும் **"அந்நிய பாஷைகளில் பேசுவதால் கிடைக்கும் அற்புதமான பலன்கள்"** ஆகியவற்றை **apcwo.org/books** இல் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.

# 8
# இயேசுவின் நாமத்தை விசுவாசியுங்கள்

இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவது என்பது வசீகரிக்கும் ஒரு அதிர்ஷ்டமோ, "திறந்திடு சீசே" என்ற மந்திரச் சொற்றொடரோ அல்லது நல்லவை நடக்கப் பயன்படும் ஒரு மந்திரம், சடங்கு அல்லது ஆவிக்குரிய பாரம்பரியமோ அல்ல. அர்த்தமற்ற முறையில் அந்த நாமத்தை வீணாக மறுபடியும் மறுபடியும் சொல்வது, கர்த்தர் வாக்களித்ததைப் பார்க்க நமக்கு அதிகாரம் அளிக்காது. அந்த நாமத்தை ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் பேசுவதற்கு, நாம் இயேசுவை விசுவாசிக்க வேண்டும் மற்றும் அவருடைய நாமத்தின் அதிகாரத்தையும் விசுவாசிக்க வேண்டும்.

## அவரை விசுவாசியுங்கள், அவருடைய நாமத்தில் விசுவாசியுங்கள்

வேதம் முழுவதும், இயேசுவின் நாமத்திலும், இயேசு கிறிஸ்து என்ற நபரிலும் விசுவாசம் வைக்க நாம் அழைக்கப்பட்ட பல நிகழ்வுகளைக் காண்கிறோம்.

சிலவற்றைக் கவனியுங்கள்.

**யோவான் 1:12**
**அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.**

**யோவான் 3:18 (யோவான் 20:31; 1 யோவான் 5:13 ஐயும் பார்க்கவும்)**
**"அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய**

**நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று."**

**யோவான் 6:28,29**

**28அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்யவேண்டும் என்றார்கள்."**

**29இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார்."**

முந்தைய அத்தியாயங்களில் நாம் பார்த்தது போல, அவருடைய நாமத்தை விசுவாசிப்பது என்பது அவரை, அந்த நபரை விசுவாசிப்பதாகும். இயேசுவின் நாமத்தில் விசுவாசம் வைப்பதற்கும் அந்த நாமம் குறிக்கும் இயேசு என்ற நபரை அறிந்துகொள்வதற்கும் அவர் மீது விசுவாசம் வைப்பதும் அவசியம் ஆகும்.

## நாமத்தின்மேலுள்ள விசுவாசத்துடன் நாமத்தை பயன்படுத்துங்கள்

இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது அது விசுவாசத்துடன் இணைந்ததாக இருக்க வேண்டும். இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது விசுவாசத்தின் முக்கியத்துவத்தை நமக்குக் கற்பிக்கும் இந்த வேதவசனங்களைக் கவனியுங்கள்.

**மத்தேயு 17:19-21**

**19அப்பொழுது, சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்துவந்து: "அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று" என்று கேட்டார்கள்.**

**20அதற்கு இயேசு: "உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம்போகும்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**21இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்."**

அத்தியாயம் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வியாதிஸ்தர்களை குணப்படுத்தவும், பிசாசுகளைத் துரத்தவும், அற்புதங்களைச் செய்யவும் அப்போஸ்தலர்கள் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தினர். அவர்கள் நல்ல பலன்களைக் கண்டார்கள். இருப்பினும், இங்கே மத்தேயு 17 இல், ஒரு இளைஞனிடமிருந்து பிசாசை துரத்தும் முயற்சியில் சீஷர்கள் தோல்வியடைந்த ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். முன்பு பலமுறை செய்ததைப் போலவே அவர்கள் நிச்சயமாக இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தினர், ஆனாலும் அந்த இளைஞன் விடுவிக்கப்படவில்லை. இயேசு வந்து அந்த இளைஞனை விடுவித்தார். சீஷர்கள் ஏன் பிசாசை விரட்ட கூடாமற்போயிற்று என்று கேட்டபோது, இயேசு **அவிசுவாசம்** என்ற ஒரு முக்கிய பிரச்சனையை சுட்டிக்காட்டினார். இதற்கு தீர்வாக, அவர் ஒரு கடுகுவிதையளவிலான விசுவாசத்தின் சக்தியை சுட்டிக்காட்டினார். விசுவாசத்துடன் இயேசுவின் நாமத்தில் நமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தவேண்டும். ஜெபமும் உபவாசமும் அவிசுவாசத்தை நீக்கி, விசுவாசத்தை நம் இதயங்களில் எழும்பவும் மற்றும் இந்த வகையான பிசாசுகளை எதிர்கொள்ளவும் உதவுகிறது.

---

விசுவாசத்துடன் இயேசுவின் நாமத்தில் நமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தவேண்டும்.

---

பேதுருவும் யோவானும் 40 வருடங்களாக சப்பாணியாகயிருந்த அந்த மனிதனை, தேவாலயத்தின் வாசலில் பரிபூரண சுகத்துடன் எழுப்பியபோது, மக்கள் அனைவரும் ஆச்சரியமடைந்தனர். இதுவே, பேதுரு தேவாலயத்தில் அவர்களுக்கு அளித்த செய்தி ஆகும்!

**அப்போஸ்தலர் 3:16**

**அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய**

**நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப்பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது.**

சப்பாணியாகப் பிறந்த மனிதன் குணமடைந்ததற்கு இயேசுவின் நாமமும், அவருடைய நாமத்தின் மீதுள்ள விசுவாசமும் காரணம் என்று பேதுரு கூறினார். இயேசு யார் என்றும், அந்தச் சூழ்நிலையில் அவரால் என்ன செய்ய முடியும் என்பதில் விசுவாசத்துடன் இயேசுவின் நாமம் பேசப்பட வேண்டும் என்பதை இது நமக்கு வலியுறுத்துகிறது.

யாக்கோபின் நிருபத்தில் இது மீண்டும் ஒருமுறை நமக்கு வலியுறுத்தப்பட்டதைக் காண்கிறோம்.

**யாக்கோபு 5:14,15**

**14 உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.**
**15 அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.**

இயேசுவின் நாமத்தில் வியாதிஸ்தர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் மற்றும் விசுவாச ஜெபத்தை ஜெபிக்க வேண்டும். விசுவாசத்தோடும் இயேசுவின் நாமத்தினாலேயும் செய்யப்படும் ஜெபமே வியாதியஸ்தரை குணமடையச் செய்யும் — வியாதியஸ்தர்களுக்கு ஊழியம் செய்யும் வேளையில் ஜெபத்தில் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது நாம் விசுவாசத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவாகக் கற்பிக்கிறது. ஒரு நினைவூட்டலாக, யாக்கோபு குறிப்பிடும் விசுவாசத்தைப்பற்றி அத்தியாயம் 1-ல் விவரிக்கப்பட்டுள்ளது, “சந்தேகமில்லாத, அசைக்கப்படாத, ஒரு-மனப்பட்ட, முற்றிலும் உறுதியான விசுவாசம்,” *“ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே*

*கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்"* (யாக்கோபு 1:6-8).

நாம் ஜெபத்தில் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது, அல்லது சூழ்நிலைகள், வியாதிகள், பிசாசுகள், இயற்கைக் கூறுகள் போன்றவற்றின் மீது அதிகாரம் செலுத்தும் போது, **"சந்தேகமின்றி, அலைக்கழிக்கப்படாமல், ஒரு-மனதுடன், இயேசுவின் மீது முற்றிலும் உறுதியான விசுவாசத்துடன் செய்ய வேண்டும்."**

---

நாம் ஜெபத்தில் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது, அல்லது சூழ்நிலைகள், வியாதிகள், பிசாசுகள், இயற்கைக் கூறுகள் போன்றவற்றின் மீது அதிகாரம் செலுத்தும் போது, "சந்தேகமின்றி, அலைக்கழிக்கப்படாமல், ஒரு-மனதுடன், இயேசுவின் மீது முற்றிலும் உறுதியான விசுவாசத்துடன் செய்ய வேண்டும்."

---

## சிந்தனைக்கு

- மத்தேயு 17:14-21ல் உள்ள அப்போஸ்தலர்களில் ஒருவராக நீங்கள் இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். நீங்கள், மற்ற அப்போஸ்தலர்களுடன் சேர்ந்து, நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி பலமுறை பிசாசுகளை துரத்தி இருக்கிறீர்கள், ஆனால் இந்த விஷயத்தில் நீங்கள் நல்ல முடிவுகளைக் காணவில்லை. இந்த குறிப்பிட்ட சூழ்நிலையில் விசுவாசத்திற்குப் பதிலாக அவிசுவாசத்தை ஏற்படுத்தக்கூடிய சில காரணங்கள் யாவை?
- இயேசுவின் மீதும் அவருடைய நாமத்தின் மீதும் நம் விசுவாசத்தை எவ்வாறு வளர்த்து, வலுப்படுத்துவது?

# 9
# இயேசுவின் நாமத்தில்

விசுவாசிகளாகிய நாம், கர்த்தர் தம்முடைய நாமத்தைப் பயன்படுத்த நமக்கு அதிகாரம் அளித்து, அவருடைய நாமத்தினாலே நம்மை அனுப்பியபோது, அவர் நமக்கு அளித்திருக்கிற கட்டளையைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். தம்முடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கு மகத்தான பாக்கியத்தையும் உரிமையையும் நமக்குத் தந்து அதிகாரம் அளித்தவர் கர்த்தர் என்பதால், அந்த நாமத்தைப் பயன்படுத்தவும், அவர் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதைச் செய்வதும் நம்முடைய பொறுப்பு ஆகும். அவருடைய நாமத்தில் நாம் நம்பிக்கையுடன் செயல்படுகிறோம், துல்லியமாக அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம், அவருடைய இடத்தில் செயல்படுகிறோம், அவர் இங்கே இருந்தால் அவர் என்ன செய்திருப்பார் என்பதை நாம் அவர் சார்பாக செய்கிறோம். “இயேசுவைப் போல இருக்க முயற்சிசெய்வதில்” நமக்கு வெட்கமில்லை, ஏனென்றால் நாம் அதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம்! *“அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்”*(1 யோவான் 4:17). நாம் இயேசுவின் மாதிரியில் வாழ்கிறோம்—இயேசு வாழ்ந்ததைப் போல வாழ்கிறோம்—இயேசுவைப் போல சிந்திக்கிறோம், பேசுகிறோம், செயல்படுகிறோம், பதிலளிக்கிறோம், மற்றும் நடந்துகொள்கிறோம் (1 யோவான் 2:6). மேலும் இவைகளை நாம் இயேசுவின் நாமத்தில் செய்கிறோம்!

ஆரம்பகால திருச்சபை அதைப் புரிந்துகொண்டது. இவர்கள் எளிய, சாதாரண மனிதர்கள், ஆனால் இயேசுவின் நாமத்தில் செயல்படுவதன் அர்த்தம் என்ன என்பதை

அவர்கள் அறிந்திருந்தனர். விசுவாசிகளாகிய நாம், இயேசு தம்முடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை நமக்குக் கொடுத்தபோது நாம் எதைப் பெற வேண்டுமென்று அவர் விரும்பினார் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## இயேசுவின் நாமத்தில் உங்களிடம் உள்ளதை அறிந்து செயல்படுங்கள்

**அப்போஸ்தலர் 3:6,7**

**[6]அப்பொழுது பேதுரு: "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று சொல்லி,**
**[7]வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது.**

பேதுரு, *"என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்"* என்றார். பேதுருவினிடத்தில் எதோ ஒன்று இருப்பதாக அவன் அறிந்திருந்தான். அவனிடத்தில் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் இருப்பதை அவன் அறிந்திருந்தான். அந்த நாமத்தில் உள்ளதைப் பயன்படுத்த தனக்கு அதிகாரம் இருப்பதை பேதுரு அறிந்திருந்தான். அந்த நாமத்தில் ஆரோக்கியம் உண்டு என்று அவன் அறிந்திருந்தான். பிறந்தது முதல் 40 வருடங்கள் சப்பாணியாய் இருந்த மனிதனை குணப்படுத்தும் வல்லமை அந்த நாமத்தில் இருப்பதை அவன் அறிந்திருந்தான். அன்றைய தினம், சப்பாணியாய் இருந்த மனிதனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்றும், இயேசுவின் நாமத்தில் கிடைக்கக்கூடியதை அவனுக்கு வழங்க வேண்டும் என்றும் கர்த்தர் விரும்புகிறார் என்பதை பேதுரு அறிந்துகொண்டான்.

ஆனாலும், பேதுரு ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டியிருந்தது. அவன் இயேசுவின் நாமத்தில் பேசவும் செயல்படவும் வேண்டியிருந்தது. இல்லையெனில், பேதுருவினிடத்தில் இருந்த நாமமும், அந்த நாமத்தில் இருந்த

அனைத்தும் இந்த சப்பாணியாய் இருந்த மனிதனுக்கு எந்த முக்கியத்துவத்தையும் அளித்திருக்காது. எனவே, பேதுரு தைரியமாக எழுந்து, இயேசுவின் நாமத்தில் பேசினான், ஒருபோதும் நடக்க முடியாமல் சப்பாணியாய் இருந்த மனிதனை எழுந்து நடக்கக் கட்டளையிட்டான். அவன் இயேசுவின் நாமத்தில் தைரியமாக செயல்பட்டு அந்த மனிதனை வலதுகையினால் பிடித்துத் தூக்கிவிட்டான். அந்த நாமம் தோல்வியடையவில்லை. அந்த நாமத்தில் உள்ள வல்லமை இந்த மனிதனை முழுமைப்படுத்தியது.

**அப்போஸ்தலர் 4:7**
**அவர்களை நடுவே நிறுத்தி: "நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள்" என்று கேட்டார்கள்**

**அப்போஸ்தலர் 4:10**
**உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது.**

சப்பாணியாக இருந்த மனிதன் பெற்ற அற்புதமான சுகத்தைக் குறித்து மதத் தலைவர்களால் பேதுரு மற்றும் யோவான்எவ்வாறுகேள்விக்குள்ளாக்கப்பட்டனர்என்பதைக் கவனிப்பது சுவாரஸ்யமானது. எந்த வல்லமையினாலே அல்லது *"எந்த நாமத்தினாலே"* இதைச் செய்தீர்கள்? என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. "வல்லமை" என்பதற்கான கிரேக்க வார்த்தை *'டுனாமிஸ்'* மற்றும் அமானுஷ்ய சக்தியைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இது பரிசுத்த ஆவியின் வல்லமையைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் அதே வார்த்தையாகும் (அப்போஸ்தலர் 1:8). *"எந்த நாமத்தினாலே"* என்பது, "யாருடைய அதிகாரத்தால்?" அல்லது "நீங்கள் இதைச் செய்யும்போது யாரைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறீர்கள்?" என்றும் பொருள் கொள்ளலாம். பேதுருவின் பதில் மிகவும் தெளிவாக உள்ளது. வல்லமையும் அதிகாரமும்

*"நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தால்"* வந்தது. இயேசுவின் நாமத்தில் நமக்குக் கிடைக்கும் வல்லமையையும் அதிகாரத்தையும் நாம் அறிந்திருக்க வேண்டும். இயேசு நம்மைக்கொண்டு எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதைச் செய்ய இயேசுவின் நாமத்தால் நாம் தைரியமாக அடியெடுத்து வைக்கும்போது தேவனின் வல்லமையும் அதிகாரமும் வெளியாகின்றன.

இயேசு நம்மைக்கொண்டு எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரோ அதைச் செய்ய இயேசுவின் நாமத்தால் நாம் தைரியமாக அடியெடுத்து வைக்கும்போது தேவனின் வல்லமையும் அதிகாரமும் வெளியாகின்றன.

## கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்

நமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான நம்பிக்கையை வளர்ப்பதில் மிக முக்கியமான பகுதியாக இருப்பது, கிறிஸ்துவில் நம்முடைய அடையாளத்தை நாம் அறிந்துகொள்வது ஆகும். பிசாசுகள், வியாதிகள், சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகள் ஆகியவற்றின் மீது அதிகாரத்தை கட்டளையிடும் நமது திறன் கிறிஸ்துவில் நமது ஆவிக்குரிய அடையாளத்தை நாம் எவ்வளவு நன்றாக புரிந்துகொள்கிறோம் என்பதைப் பொறுத்தது. கிறிஸ்துவில் நம்மிடம் உள்ள மற்ற எல்லா விஷயங்களுக்கிடையில், தேவனின் பிள்ளைகளாகிய நாம் *"தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரரும்"* (ரோமர் 8:17) ஆக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தேவன் நம்மை *"உன்னதங்களிலே கிறிஸ்து இயேசுவோடு உட்காரவும் செய்தார்"* (எபேசியர் 2:7). தேவனுடைய கிருபையின் பரிபூரணத்தையும், கிறிஸ்துவுக்குள் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெற்றவர்களாக, நாம்

இந்த வாழ்க்கையில் ஆட்சி செய்யவும், ஆளுகை செய்யவும், ஆதிக்கம் செலுத்தவும் நிலைநிறுத்தப்பட்டுள்ளோம் (ரோமர் 5:17). நாம் இயேசுவின் நாமத்தில் செயல்படும் போது, எல்லா மண்டலங்களிலும் உயர்ந்த சிங்காசனமாகிய பிதாவின் வலது பாரிசத்தில் இயேசுவோடு அமர்ந்திருக்கும் நிலையிலிருந்து, நாம் செயல்படுகிறோம்.

இந்த சத்தியங்களை நாம் உள்வாங்கிக்கொண்டு செயல்பட வேண்டும். நாம் இயேசுவின் நாமத்தில் முன்னேறும்போது தைரியமாகவும் அச்சமின்றியும் இருக்க வேண்டும்!

## இந்த புத்தகத்தின் மீதமுள்ளவை

இந்த புத்தகத்தில் இது வரை, இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நமக்கு என்ன கிடைக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்கான பாக்கியம் வழங்கப்படுவதன் அர்த்தம் என்ன என்பதை அறிய ஒரு திடமான ஆவிக்குரிய அடித்தளத்தை அமைப்பதில் நாம் நேரத்தை செலவிட்டோம்.

இந்தப் புத்தகத்தின் மற்ற பகுதிகள், இயேசுவின் நாமத்தை நாம் எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்பதைப் பற்றி புதிய ஏற்பாட்டில் என்ன கற்பிக்கப்பட்டுள்ளது என்பதை சுருக்கமான, படிக்க எளிதான அத்தியாயங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் நமக்குக் கொடுக்கப்பட்ட இயேசுவின் நாமத்தை நம் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பயன்படுத்துவோமாக!

## சிந்தனைக்கு

1) உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அல்லது மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்போதும் இயேசுவின் நாமத்தில் தைரியமாகப் புறப்படுவதைத் தடுக்கக் கூடிய காரணிகளில் சிலவற்றைக் கண்டறியவும். இவற்றை நீங்கள் எவ்வாறு சமாளிக்க முடியும்?

# 10

# இயேசுவின் நாமத்தில் மன்னிப்பு

**லூக்கா 24:47**

**அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.**

**அப்போஸ்தலர் 10:43**

**அவரைவிசுவாசிக்கிறவன்எவனோஅவன்அவருடையநாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.**

**1 யோவான் 2:12**

**பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்.**

இயேசுவின் நாமத்தில் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

முதலாவதாக, தனிப்பட்ட அளவில், அவருடைய நாமத்திற்காகஅல்லதுஅவருடையநாமத்தின்காரணமாகநாம் மன்னிக்கப்பட்டுள்ளோம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். "இயேசு" என்ற நாமம் நம்முடைய எல்லா பாவங்களுக்கும் உரிய கிரயத்தைச் செலுத்தியவரின் நாமம். அவர் மரித்தது, முழுமையான தியாக பலியாக பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார். நாம் அவரை விசுவாசித்து, அவருடைய நாமத்தில் பாவ மன்னிப்பைப் பெறும்போது, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக நாம் வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை. அவர் என்ன செய்தார், அவர் யார், அவருடைய நாமத்தில் உள்ள விசுவாசம் மட்டுமே தேவை.

இயேசுவின் நாமத்தில் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்பது எளிமையானது மற்றும் இன்னும் உற்சாகப்படுத்துவதாக

இருக்கிறது. விசுவாசிகளாகிய நாம் பாவம் செய்தால், நாம் அறிக்கையிட்டு, இயேசுவின் நாமத்தில் மன்னிப்பைப் பெறுவோம். "பிதாவே, தயவு செய்து என்னை இயேசுவின் நாமத்தில் மன்னியுங்கள்" என்று நாம் கூறும்போது, ஏற்கனவே நம்முடைய பாவங்களுக்காக கிரயத்தை செலுத்தியவரின் நாமத்தில் நமது வேண்டுகோளை முன்வைக்கிறோம். மனம்திரும்புதல் அவசியம் என்றாலும் கூட, நம் கண்ணீர், துக்கம், குற்ற உணர்வு அல்லது வருந்துதல் ஆகியவற்றால் அல்ல, ஆனால் யாருடைய நாமத்தில் நாம் மன்னிப்புக் கேட்டிருக்கிறோமோ அவர் நிமித்தமாக தேவன் நம்மை மன்னிக்கிறார். நம்முடைய எல்லா பாவங்களுக்கும் கிரயம் செலுத்தியவர், நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவான் 2:1,2). *"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"* (1 யோவான் 1:9) ஏனெனில் *"... அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்"* (1 யோவான் 1:7).

இரண்டாவதாக, இயேசுவின் நாமத்தில் மனந்திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்பைப் பற்றி நாம் பிரசங்கிக்க வேண்டும் (பகிர்ந்து கொள்ளுங்கள், மற்றவர்களுக்கு சொல்லுங்கள்). நாம் சுவிசேஷத்தைப் பிறருக்குப் பகிர்ந்துகொள்ளும்போதும், இயேசுவின் நாமத்தில் விசுவாசம் வைப்பதன் மூலமும், சிலுவையில் அவர் அவர்களுக்குச் செய்தவற்றின் மூலமும் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். நமது சபையில் சேர வேண்டும் அல்லது வேறு எதையும் செய்வது போன்ற வேறு எந்த நிபந்தனைகளையும் நாம் சொல்லக் கூடாது. ஏனெனில், ஏதாவது நிபந்தனைகளை நிறைவேற்றுவதின்

மூலமே மன்னிப்பைப் பெற முடியும் என்ற அர்த்தத்தை இது உருவாக்கலாம். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் அவருடைய நாமத்தின் மூலம் பாவ மன்னிப்பைப் பெறுகிறார்கள்.

(அத்தியாயம் 14க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 11

# இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பு

**மத்தேயு 1:21**

**"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்."**

"இயேசு" என்ற நாமத்தின் அர்த்தம் "இரட்சகர்" அல்லது "இரட்சிப்பின் தேவன்" என்று அத்தியாயம் 1-ல் நாம் அறிந்து கொண்டோம். புதிய ஏற்பாட்டில், "இரட்சிப்பு" என்பது நித்திய இரட்சிப்பு, பாவ மன்னிப்பு, பாவத்தின் மீதான வெற்றி, நோயிலிருந்து குணமடைதல், போராட்டத்தில் வெற்றி, எதிரியின் ஒவ்வொரு செயல்களில் இருந்து விடுதலை, தீங்கிலிருந்து மீட்பு, ஆபத்திலிருந்து பாதுகாப்பு, மற்றும் முழுமை போன்றவற்றை உள்ளடக்கிய *'சோஸோ'* என்ற விரிவான வார்த்தை என்றும் விளக்கினோம். இதன் பொருள் என்னவென்றால், "இரட்சிக்கப்படுதல், குணமாக்கப்படுதல், விடுவிக்கப்படுதல், வெற்றி பெறுதல், மீட்கப்படுதல், பாதுகாக்கப்படுதல் மற்றும் முழுமையாக்கப்படுதல்" என்பவைகள் ஆகும். இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பு உண்டு.

**அப்போஸ்தலர் 4:12**

**"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்."**

வேதாகமம் இதைப் பற்றி மிகவும் வலியுறுத்துகிறது— இயேசுவின் நாமத்தில் மட்டுமே இரட்சிப்பு உள்ளது. அதனால்தான் நாம் இயேசுவைக் குறித்துப் பகிர்ந்து

கொள்ள வேண்டும், இதனால் ஜனங்கள் அவரை அறிந்து, அவருடைய நாமத்தில் கூப்பிடுவார்கள்.

**ரோமர் 10:13**

**ஆதலால் "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்."**

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் என்பதே நற்செய்தி ஆகும்.

இரட்சிப்பு என்பது பாவ மன்னிப்பைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். விசுவாசிகளாகிய நாம், குணமடையவும், விடுதலைக்காகவும், பாதுகாப்பிற்காகவும்—அந்த நாமத்தில் உள்ள அனைத்திற்கும் மேலும் நாம் இரட்சிக்கப்படுவதற்காகவும் நாம் அவருடைய நாமத்தை அழைக்கலாம் என்று வேதம் கூறுகிறது. அந்த நாமத்தில்தான் இரட்சிப்பு இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இயேசுவின் மீதான விசுவாசத்துடன் நாம் அந்த நாமத்தை அழைப்பதின் மூலமும், குறிப்பிடுவதின் மூலமும், தைரியமாக அறிவிப்பதன் மூலமும், நாம் இரட்சிக்கப்படுவோம்.

(அத்தியாயம் 14க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 12

# இயேசுவின் நாமத்தில் நித்திய ஜீவன்

யோவான் 1:12

**அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.**

யோவான் 3:18

**"அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று."**

யோவான் 20:30,31

**30இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.**
**31இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.**

1 யோவான் 5:13

**உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.**

இயேசு கிறிஸ்து, தம்மை யாராகக் கூறிக்கொண்டார் என்பதை நாம் விசுவாசிப்பதின் மூலமும், அவருடைய நாமத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமும், நாம் தேவனுடைய குடும்பத்தில் அவருடைய மகன்களாகவும் மற்றும்

மகள்களாகவும் மீண்டும் பிறக்கிறோம். நாம் அவருடைய நாமத்தில் விசுவாசிக்கும்போது, இப்போது இங்கே நமக்கு நித்திய ஜீவன் இருக்கிறது. நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதில் உறுதியாகவும், நம்பிக்கையுடனும், நிச்சயமாகவும் இருக்கலாம். இதைத்தான் தேவன் இவ்வாறு நமக்குக் கட்டளையிடுகிறார்—அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசிக்க வேண்டும் (1 யோவான் 3:23).

"இயேசு" என்ற நாமம் நமக்கு நித்திய ஜீவனை அளிக்கிறது, இது தேவனுடைய வாழ்க்கை (கிரேக்க *'ஸோஈ'*), தெய்வீக வாழ்க்கை. இயேசு நமக்கு பரிபூரண நித்திய ஜீவனைக் கொடுக்க வந்தார். இந்த வாழ்க்கை நம்மை ஒளியால் நிரப்புகிறது மற்றும் நம் வாழ்விலிருந்து இருளை அகற்றுகிறது (யோவான் 1:4,5). "இயேசு" என்ற நாமத்தைக் குறிப்பிடுவது என்பது, வாழ்வாகிய இயேசுவை நம் வாழ்க்கையின் செயல்பாடுகளில் கொண்டு வருகிறது. அவருடைய ஜீவன் இருக்கும் இடத்தில், மரணத்துடன் தொடர்புடைய அனைத்தும் விலகிச் செல்கின்றன. அவருடைய ஜீவன் இருக்கும் இடத்தில் இருள் அகன்றுவிடும். அந்த நாமத்தைக் கூறுங்கள், அந்த நாமத்தை அறிவியுங்கள், அந்த நாமத்தைப் பாடுங்கள், அப்போது மரணமும் இருளும் விலகுவதைப் பாருங்கள், ஏனென்றால் அவருடைய நாமம் ஜீவன் மற்றும் ஒளி, தெய்வீகமான ஜீவன் மற்றும் தேவனின் ஒளியாக இருக்கிறது.

(அத்தியாயம் 14க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 13

# இயேசுவின் நாமத்தினால் கழுவப்பட்டோம், பரிசுத்தமாக்கப்பட்டோம், மற்றும் நீதிமான்களாக்கப்பட்டோம்

**1 கொரிந்தியர் 6:9-11**

**9 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,**
**10 திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.**
**11 உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.**

**அப்போஸ்தலர் 22:16**

**இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள்போகக் கழுவப்படு என்றான்.**

கொரிந்துவிலுள்ள விசுவாசிகளைப் போலவே, நாம் அனைவரும் கடந்த காலங்களில் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்திருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலும், நம்முடைய தேவனுடைய ஆவியினாலும் நாம் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்பதே இப்போதுள்ள அற்புதமான செய்தியாகும்.

“கழுவப்பட்டீர்கள்” (கிரேக்க *‘அப்போலோஊஓ’*)

என்ற வார்த்தை முழு நபரையும் "சுத்திகரித்தல்" என்று பொருள்படும். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை நாம் கூப்பிடும்போது, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு தேவனுடைய இரக்கத்தினால் நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெறுகிறோம். இயேசுவின் நாமத்தில் நாம் சுத்தமாக இருக்கிறோம். நமது பாவங்களின் கறை எதுவும் நம் மீது காணப்படுவதில்லை!

"பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்" (கிரேக்க *'ஹாகியாஸோ'*) என்ற வார்த்தையின் அர்த்தம் "பரிசுத்தப்படுத்துதல், பிரித்தெடுத்தல், புனிதப்படுத்துதல், மற்றும் பாவத்திலிருந்து தேவனுக்கென்று பிரித்தெடுத்தல்" என்பதாகும். இயேசுவின் நாமத்தின் மூலம், நாம் பரிசுத்தமாக்கப்பட்டு, உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, அவரிடத்தில் சேர்ந்து முழுவதுமாக தேவனுக்குச் சொந்தமானவர்கள் ஆகிறோம்.

"நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" (கிரேக்க *'டிகாயோஓ'*) என்ற வார்த்தையின் அர்த்தம், "குற்ற உணர்வு, அவமானம், தீர்ப்பு மற்றும் கண்டனம் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விடுபடுவது, நீதிமான் அல்லது நேர்மையானவர் என்று அறிவிக்கப்படுதல்" என்பதாகும். இயேசுவின் நாமத்தின் மீதுள்ள விசுவாசத்தின் மூலமாக, நாம் தேவனுடைய கிருபையால் இலவசமாக நீதிமான்களாக்கப்பட்டோம்.

இயேசுவின் நாமத்தினாலே நாம் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டோம் என்பதை நாம் தைரியமாக அறிவிக்க வேண்டும். சாத்தானின் உத்திகளில் ஒன்று, நம்மை அழுக்காகவும், பாவிகளாகவும், புனிதமற்றவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும், கண்டனம் செய்யப்பட்டவர்களாகவும், குற்றவாளிகளாகவும், வெட்கப்படுபவர்களாகவும் உணர வைப்பதாகும். இந்த அம்சங்களில் ஏதேனும் ஒன்றின் மீது எதிரி நம்மைக் கட்டுப்படுத்தும் வேளையில், நாம் திறனற்றவர்களாகவும்,

தேவனுக்குச் சேவை செய்யத் தகுதியற்றவர்களாகவும் உணர்கிறோம். ஆனால் இயேசுவின் நாமத்தில் நம்மிடத்தில் என்ன இருக்கிறதோ அதை நாம் தைரியமாக அறிவிக்க வேண்டும். நாம் சுத்திகரிக்கப்படவும், பரிசுத்தமாக்கப்படவும், நீதிமான்களாக்கப்படவும், கர்த்தராகிய இயேசு தம்மைத்தாமே நமக்காகக் கொடுத்திருக்கிறார்.

பாவத்தில் ஆழமாக வேரூன்றியவர்களை நாம் சந்திக்கும்போது, அவர்களை எப்போதும் நம்பிக்கையான கண்களுடன் பார்ப்பது முக்கியம். கர்த்தராகிய இயேசு நமக்காகச்செய்ததைப்போலவேஅவர்களைச்சுத்தப்படுத்தவும், பரிசுத்தப்படுத்தவும், நீதிமான்களாக்கப்படவும் முடியும்! இவைகள் அவர்களுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஜெபியுங்கள்! இயேசுவின் நாமத்தாலும், பரிசுத்த ஆவியின் வல்லமையாலும், ஜனங்கள் எல்லா வகையான பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்படுவார்கள் (பரிசுத்தமாக்கப்படுவார்கள்), மேலும் நீதிமான்களாக்கப்படுவார்கள். இயேசுவின் நாமத்தை மிகுந்த எதிர்பார்ப்புடன் அவர்களுக்கு அறிவியுங்கள்.

(அத்தியாயம் 14க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 14

# இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம்

**மத்தேயு 28:19**

**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**அப்போஸ்தலர் 2:38**

**பேதுரு அவர்களை நோக்கி: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்."**

சீஷர்களாக்கப்பட்டவர்களுக்கு *"பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே"* ஞானஸ்நானங் கொடுப்பதற்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய பிரதான கட்டளையிலே நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார். மற்றவற்றுடன் சேர்த்து, தண்ணீர் மூலமான ஞானஸ்நானம் என்பது நீங்கள் ஞானஸ்நானம் பெறும் ஒருவருடன் (அல்லது எதுவாக இருந்தாலும்) அடையாளம் காணப்படுவதையும், அவருக்குக் கீழ்ப்படிவதையும் வெளிப்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த வெளிப்பாடாகும். இந்த சந்தர்ப்பத்தில், நாம் வேதாகமத்தின் தேவனுக்கு நமது அடையாளத்தையும் கீழ்ப்படிதலையும் உறுதிப்படுத்துகிறோம், அவர் திரியேக தேவன்—பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர்.

கர்த்தர் பரலோகத்திற்கு ஏறின பிறகு, பெந்தெகொஸ்தே நாளிலிருந்து தொடங்கி (அப்போஸ்தலர் 2:28), சமாரியாவில் (அப்போஸ்தலர் 8:16), கொர்நேலியுவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் (அப்போஸ்தலர் 10:48), எபேசுவிலிருந்து

(அப்போஸ்தலர் 19:5) இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்ற புதிய விசுவாசிகள் பற்றிய பதிவேடு உள்ளது. பிதா, குமரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தைப் பயன்படுத்தி அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்ததாக எந்த பதிவும் இல்லை. இது நிச்சயமாக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயம் ஆகும். இருப்பினும், அப்போஸ்தலர்களும் அவர்களுக்குப் பின் தொடர்ந்தவர்களும் கண்டிப்பாக அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, கர்த்தராகிய இயேசுவால் அறிவுறுத்தப்பட்டபடி பிதா, குமரன் மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று நாம் உறுதிப்படுத்தலாம்.

புதிய விசுவாசிகளை இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறும்படி அப்போஸ்தலர்கள் அழைப்பதும், பின்னர் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும் இரண்டு முக்கியமான விஷயங்களைக் குறிப்பிடுகிறது.

1) புதிய விசுவாசிகள் இயேசு கிறிஸ்து தம்மை யார் என்று அறிவித்தார் என்பதற்காக அவரை விசுவாசித்து அவருடன் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும். அவர் உண்மையிலேயே தேவ அவதாரம், பிதாவிடமிருந்து வந்த தேவ குமாரன், நம் இரட்சிப்புக்கான முழு கிரயத்தையும் செலுத்தினவர், பரிசுத்த ஆவியினால் எழுப்பப்பட்டு, பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறவர் ஆக இருக்கிறார்.

2) இயேசுவின் நாமத்தில் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது, தண்ணீர் மூலமாக இயேசுவின் நாமத்தில் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் ஒருவர் இயேசுவை அவருடைய இடத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகிறார், அவருடைய சார்பாக செயல்படுகிறார், அவர் விரும்பியதைச் செய்கிறார். எனவே, இன்று நாம் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்கும்போது, “இயேசுவின் நாமத்தில், பிதா, குமாரன்

மற்றும் பரிசுத்த ஆவியின் நாமத்தில் நான் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்" என்று அறிவித்து, அந்த நபருக்கு திருமுழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறோம்.

நாம் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் எடுக்கும்போது, இயேசு கிறிஸ்துவுக்குள் நம்முடைய ஆன்மீக அடையாளத்தை (ஆவிக்குரிய பிரகாரமாக அமிழ்த்தப்பட்டவர்களாக, ஐக்கியத்துடன் கொண்டு வரப்பட்டவர்களாக) வெளிப்படையாக அறிவிக்கிறோம். கலாத்தியர் 3:27 கூறுவது போல், *"ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே."* கிறிஸ்துவுடனான புது வாழ்வைப் பெற்றிருக்கும் நாம், நமது வாழ்வின் மூலமாக இயேசுவை முழுமையாக வெளிப்படுத்த வேண்டும். இந்த வசனத்தை தி பாஷன் ட்ரான்ஸ்லேஷன் இவ்வாறு விளக்குகிறது, *"விசுவாசம் உங்களை கிறிஸ்துவுக்குள் அமிழ்த்தினது, இப்போது நீங்கள் மூடப்பட்டு அவருடைய ஜீவனை தரித்திருக்கிறீர்கள்."* தெளிவாகச் சொல்வதென்றால், கிறிஸ்து வாழ்கிறதைப் போல வாழ்ந்து, பேசுவதன் மூலமும், அவர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதைச் செய்வதன் மூலமும் இயேசு கிறிஸ்துவை இந்த உலகில் முழுமையாகவும் துல்லியமாகவும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான அழைப்புக்கு நாம் "ஆம்" என்று கூறியுள்ளோம். அவருடைய நாமத்தில் நாம் இங்கே இருக்கிறோம்.

---

இயேசுவின் நாமத்தில் மன்னிப்பு, இரட்சிப்பு மற்றும் நித்திய ஜீவன் உள்ளது. இயேசுவின் நாமத்தில் நாம் கழுவப்பட்டு, பரிசுத்தப்படுத்தப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். நாம் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம்.

---

## சிந்தனைக்கு

10-14 அத்தியாயங்களுக்கானது.

1) இயேசுவின் நாமத்தில் பாவ மன்னிப்பும், இரட்சிப்பும், நித்திய ஜீவனும் உண்டு என்ற உண்மையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். இது உங்களுடன் தனிப்பட்ட முறையில் எப்படிப் பேசுகிறது? நீங்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்போது இந்த உண்மையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர்கள்?

2) இயேசுவின் நாமத்தில் நீங்கள் கழுவப்பட்டு, பரிசுத்தப்படுத்தப்பட்டு மற்றும் நீதிமான்களாக்கப்பட்டீர்கள் என்ற உண்மையைப் பற்றி சிந்தியுங்கள். இது உங்களுடன் தனிப்பட்ட முறையில் எப்படிப் பேசுகிறது? நீங்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்போது இந்த உண்மையை எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர்கள்?

3) இயேசு நமக்குக் கொடுத்த பிரதான கட்டளையில் உபதேசிக்கப்பட்டபடி, *“பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே”* (மத்தேயு 28:19) என்று கூறும்போது இயேசுவின் நாமத்தினாலே தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவதன் அர்த்தம் (ஆவிக்குரிய முக்கியத்துவம்) என்ன?

# 15

# இயேசுவின் நாமத்தில் ஜெபியுங்கள்

**யோவான் 14:13,14**

**[13]நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.**
**[14]என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்.**

**யோவான் 15:7,16**

**[7]நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**
**[16]நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுகொள்ளுவது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.**

**யோவான் 16:23,24,26,27**

**[23]அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங்கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.**
**[24] இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்ளுவீர்கள்.**
**[26]அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்ளுவீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்ளுவேனென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை.**
**[27]நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்.**

ஜெபிக்கும்போது அவருடைய நாமத்தைப் பயன்படுத்த

வேண்டும் என்பது அவர் நமக்குக் கற்பித்தவைகளில் ஒரு பகுதி ஆகும். அவருடைய நாமத்தில் நேரடியாக பிதாவிடம் கேட்கும்படியாக நமக்கு அறிவுறுத்தினார். இதைச் செய்யும்போது, நாம் கேட்டதைப் பெற்றுக்கொள்வோம், அதனால் நம் சந்தோஷம் நிறைவாயிருக்கும் என்று அவர் நமக்கு உறுதியளித்தார்.

இப்போது இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்றால் என்ன என்று பார்ப்போம். இயேசுவின் நாமத்தில் நாம் ஜெபிக்கும்போது, இயேசுவே பூமியில் ஜெபிப்பது போல் இருக்க வேண்டும். நாம் அவருடைய இடத்தில் நிற்கிறோம், அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம், அவருடைய சார்பாகச் செயல்படுகிறோம், இயேசு இந்த பூமியில் இருந்திருந்தால் அவர் செய்திருக்கும் ஜெபத்தை நாம் செய்கிறோம். மேலும் பரலோகத்தில், இயேசுவே இந்த விண்ணப்பத்தை பிதாவின் முன் வைப்பது போல் உள்ளது, பிதா ஒருபோதும் அதை நிராகரிக்க மாட்டார். இது ஜெபத்தை முற்றிலும் மாறுபட்ட நிலைக்கு உயர்த்துகிறது, இயேசுவின் நாமத்தில் நாம் செய்யும் ஜெபங்களுக்கு ஆழ்ந்த அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் அளிக்கிறது. உருவகமாகச் சொன்னால், இயேசுவின் நாமத்தில் நாம் ஜெபிக்கும் ஒவ்வொரு ஜெபத்திலும் அவருடைய கையொப்பம் இருக்கிறது. இயேசுவின் நாமத்தினாலே நாம் எதைக் கேட்டாலும் அதைப் பிதா நமக்குத் தருவார் என்பது உறுதி. அப்படிப்பட்ட “ஜெபத்தின் வல்லமையின்” இரகசியம் என்னவென்றால், அவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருக்கிறது மற்றும் நாம் அவருடன் ஐக்கியமாக இருக்கிறோம் (யோவான் 15:7). இயேசுவின் நாமத்தில் நாம் செய்யும் ஜெபங்கள் அவருடனான நமது முழுமையான ஐக்கியத்திலிருந்து வெளிப்பட வேண்டும். அத்தகைய ஜெபங்களை பிதா ஒருபோதும் நிராகரிக்கமாட்டார்.

இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள

வேதவசனங்களில், பதிலளிக்கப்பட்ட ஜெபமானது, நம் வாழ்வில் பிதா மகிமைப்படுத்தப்படுவதற்கும், நிலையான பலனைத் தருவதற்கும், நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருப்பதற்கும் நெருங்கிய தொடர்புடையதாக இருப்பதைக் காண்கிறோம். இயேசுவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்கும்போது நம்முடைய எல்லா ஜெபங்களுக்கும் பதிலளிப்பதின் மூலமாக இந்த சலுகைகளை நாம் அனுபவிக்க வேண்டும் என்று பிதா விரும்புகிறார்.

(அத்தியாயம் 17க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 16
# இயேசுவின் நாமத்தில் ஸ்தோத்திரியுங்கள் மற்றும் தொழுதுகொள்ளுங்கள்

**1 கொரிந்தியர் 1:2**

**கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:**

**எபேசியர் 5:18-21**

**18 துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து;**
**19 சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி,**
**20 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,**
**21 தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்.**

**கொலோசெயர் 3:16,17**

**16 கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;**
**17 வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே *செய்து*, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை**

**ஸ்தோத்திரியுங்கள்.**

**எபிரெயர் 13:15**

**ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம், நம்முடைய ஸ்தோத்திரத்தையும், துதியையும், ஆராதனையும் ஏறெடுக்கும்படியாக அறிவுறுத்தப்படுகிறோம். நாம் ஆராதனையைத் தொடங்கும்போது, “பிதாவே, இயேசுவின் நாமத்தில் உம்மை ஆராதிக்கிறோம்” என்று கூறுகிறோம். இந்த நாமத்தின் மூலமாகவே நாம் பிதாவின் பிரசன்னத்திற்குள் நுழைய அனுமதி பெற்றுள்ளோம். இந்த நாமத்தினாலேயே நாம் பிதாவின் முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும், சுத்திகரிக்கப்பட்டவர்களாகவும், பரிசுத்தப்படுத்தப்பட்டவர்களாகவும், நீதிமான்களாக்கப்பட்டவர்களாகவும் ஆக்கப்பட்டு இருக்கிறோம். இந்த நாமம்தான் நாம் செய்யும் பலிகளை பிதாவுக்குப் பிரியமானதாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் ஆக்குகிறது ஏனென்றால், தம்முடைய சொந்த இரத்தத்தினால் நம்மைக் கழுவி, நம் தேவனுக்கு நம்மை ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் ஆக்கியவரையே இந்த நாமம் குறிக்கிறது. சிலுவையில் தம்மையே பலியாக செலுத்தினதின் மூலமாக புதிதும் ஜீவனுமானமார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினவரை இது குறிக்கிறது, மேலும் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது. இந்த நாமத்தின் மூலம் மட்டுமே நாம் நமது துதி, ஆராதனை மற்றும் ஸ்தோத்திரங்களைச் செலுத்துகிறோம்.

எனவே, நாம், நம் தேவனைத் துதித்து தொழுதுகொள்ளும்போது, இந்த சத்தியத்தில் இளைப்பாறுகிறோம். நமது பலிகள் ஏற்றுக்கொள்ளப்படுவது

நமது சொந்தத் தகுதியினாலும், நீதியினாலும் அல்லது நாம் செய்த எந்தப் பெரிய செயலாலும் அல்ல. நம்முடைய துதி, ஆராதனை, நன்றி செலுத்துதல் போன்ற பலிகள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே செலுத்தப்படுவதால் அவைகள் தேவனுக்கு முன்பாக ஒரு இனிமையான சுகந்த-வாசனையுள்ள நற்கந்தமாயிருக்கும்.

பழைய ஏற்பாட்டில், ஆசாரியர்கள், ஜனங்கள் கொண்டு வந்த காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, அவற்றை தேவனுக்குச் சமர்ப்பித்து ஆலயத்தில் பணிபுரிபவர்களாக இருந்தனர். இந்த ஆசாரியர்களும் மனிதர்கள்தான், மற்றவர்களைப் போலவே தவறு செய்யக் கூடியவர்கள்தான் அவர்களும் தேவனால் நிராகரிக்கப்படலாம். இருப்பினும், இயேசுவே நம்முடைய பிரதான ஆசாரியர், பரலோகத்தில் உள்ள மெய்யான கூடாரத்தில் ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர். *"பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ்செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு. ஒவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்; ஆதலால் செலுத்தும்படிக்கு ஏதோ ஒன்று இவருக்கும் அவசியம் வேண்டியதாயிருக்கிறது"* (எபிரெயர் 8:1,2). நாம் நம்முடைய துதி, ஆராதனை, ஸ்தோத்திரம், தசமபாகம் மற்றும் காணிக்கைகளை இயேசுவின் நாமத்தில் செலுத்தும்போது, அது நம்மிடமிருந்து மெய்யான பரிசுத்த ஸ்தலத்திலுள்ள ஊழியக்காரரான நம்முடைய மகா பிரதான ஆசாரியனுக்குச் சென்று, பிதாவுக்கு முன்பாகச் செலுத்தப்படுகிறது. இயேசுவின் நாமத்தில் நம்முடைய ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தும்போது இதுதான் நடக்கும்!

(அத்தியாயம் 17க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 17

# எல்லா காரியங்களையும் இயேசுவின் நாமத்தில் செய்யுங்கள்

**கொலோசெயர் 3:16,17**

**[16]கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;**

**[17] வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே *செய்து*, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.**

நாம் எதைச் செய்தாலும், ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு அம்சத்திலும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே எல்லாவற்றையும் செய்ய வேதாகமம் நமக்கு அறிவுறுத்துகிறது! இதனை நாம் செய்வோமாக. அத்தியாயம் 7-ல் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தினால் என்ன நடக்கும் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். “இயேசுவின் நாமத்தில்” என்று நாம் அறிவிக்கும்போது, அது இயேசுவை சூழ்நிலைக்குள் கொண்டுவருகிறது. அவரது பிரசன்னம், அவரது வல்லமை, அவரது அதிகாரம் மற்றும் அவரது ஆவி இந்த விஷயத்தில் இப்போது ஈடுபட்டுள்ளது. நாம் அவருடைய நாமத்தைக் கூப்பிட்டு, அவருடைய நாமத்தில் செயல்படுகிறோம் என்று அறிவித்ததால், சூழ்நிலைகள் அனைத்தையும் அவரே இப்போது பொறுப்பெடுப்பவராக இருக்கிறார்.

- நீங்கள் காலையில் எழுந்ததும், உங்கள் கால்களை தரையில் வைக்கும்போது, “இயேசுவின் நாமத்தில்

நான் இந்த நாளைக் கடந்து செல்வேன்” என்று அறிக்கை செய்யுங்கள். என் எல்லா வழிகளிலும் வெற்றி, ஆசீர்வாதம், அமைதி, மகிழ்ச்சி, ஞானம் மற்றும் செழிப்பு ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வேன் என்று இயேசுவின் நாமத்தில் நான் அறிவிக்கிறேன்” என்று சொல்லுங்கள்.

- நீங்கள் சமையலறையில் சமையல் செய்யும் போது, “இன்று நான் என் சமையலை இயேசுவின் நாமத்தில் செய்கிறேன்” என்று சொல்லுங்கள்.
- நீங்கள் உங்கள் வாகனத்தில் ஏறும்போது, “இன்று நான் இயேசுவின் நாமத்தில் வாகனத்தை ஓட்டுகிறேன்” என்று சொல்லுங்கள்.
- நீங்கள் வணிக சம்மந்தமான ஒரு கூட்டத்திற்குச் செல்லும்போது, “நான் இயேசுவின் நாமத்தில் இந்தக் கூட்டத்திற்குச் செல்கிறேன்” என்று சொல்லுங்கள்.
- நீங்கள் ஒருவருக்கு உதவும்போதும், ஒருவருக்கு சேவை செய்யும்போதும், ஒருவருக்காக ஜெபிக்கும்போதும், அவர்களின் தேவைகளுக்கு ஊழியம் செய்யும்போதும், அவர்களின் தேவைக்குக் கொடுக்கும்போதும், சுகப்படுத்துதல் அல்லது விடுதலையின் ஊழியம் செய்யும்போதும், அதை இயேசுவின் நாமத்தில் செய்யுங்கள்.

நீங்கள் எதைச் செய்தாலும், அதை இயேசுவின் நாமத்தில் செய்கிறீர்கள் என்று அறிவிக்கவும். பின்னர் இயேசுவை துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்துங்கள். இயேசுவைப் போலவே சிந்தியுங்கள், பேசுங்கள், செயல்படுங்கள். இதைச் செய்ய உங்களுக்கு உதவ பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். *“உங்கள் செயல்கள் மற்றும் வார்த்தைகள் அனைத்தும் அபிஷேகம் செய்யப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் அழகால் நிரப்பப்படட்டும்”* (கொலோசெயர் 3:17, தி பாஷன் ட்ரான்ஸ்லேஷன்).

நம்முடைய ஜெபங்கள் இயேசுவின் நாமத்தில் பதிலளிக்கப்படுகின்றன. நாம் செலுத்தும் துதி, ஆராதனை மற்றும் ஸ்தோத்திரம் இயேசுவின் நாமத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நாம் சொல்லும் அல்லது செய்கிற அனைத்தையும் இயேசுவின் நாமத்தில் செய்கிறோம்.

## சிந்தனைக்கு

15-17 அத்தியாயங்களுக்கானது.

1) இயேசுவின் நாமத்தில் பிதாவிடம் ஜெபிப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். எல்லா ஜெபங்களுக்கும் பதில் கிடைப்பதைக் காணவும், பலனளிக்கும் ஜெப வாழ்க்கைக்காக இயேசு கொடுத்த வாக்குறுதிகளின்படி வாழும்படியாகவும் நீங்கள் எவ்வாறு "ஜெபத்தின் வல்லமையை" வளர்த்துக் கொள்ள முடியும்?

2) இயேசுவின் நாமத்தில் உங்கள் ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தும்போது என்ன நடக்கிறது என்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் அவருக்கு செலுத்துவதில் தேவன் பிரியப்படுகிறாரா என்ற சந்தேகத்தை இது எவ்வாறு நீக்குகிறது?

3) வீட்டிலோ, வேலையிலோ அல்லது வேறு இடத்திலோ எதுவாக இருந்தாலும், இயேசுவின் நாமத்தில் நீங்கள் ஏதாவது செய்கிறீர்கள் என்று அறிவிக்கும்போது அதன் அர்த்தம் என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள். இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தும்போது என்ன நடக்கும் என்பதை விவரித்த அத்தியாயம் 7-ல் தரப்பட்டுள்ள தெளிவான விளக்கங்களைப் பாருங்கள்.

# 18

# நாம் இயேசுவின் நாமத்தில் கூடிவருகிறோம்

**மத்தேயு 18:18-20**

**18 "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**19அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**20ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்."**

**1 கொரிந்தியர் 5:4**

**நீங்களும், என்னுடைய ஆவியும், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே கூடிவந்திருக்கையில்,**

இரண்டுபேராவது மூன்றுபேராவது தம் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்று கர்த்தராகிய இயேசு கூறியுள்ளார். நாம் முன்பே கூறியது போல், அவருடைய நாமம் அவரை உள்ளே கொண்டுவருகிறது! இயேசு என்ற அவருடைய நாமத்தில் அவர் இருக்கிறார். விசுவாசிகளாகிய நாம் அவருடைய நாமத்தில் கூடிவரும்போது, பல காரியங்களை ஒன்றாகச் செய்ய முடியும். நாம் ஆராதிக்கலாம், ஜெபிக்கலாம், அவருடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளலாம். ஐக்கியம்

கொள்ளலாம், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தலாம், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யலாம். மேலே குறிப்பிட்டுள்ளமத்தேயுவின்வசனங்களின்படி,நம்மிடையே கர்த்தருடைய பிரசன்னம் பூமிக்குரிய விஷயங்களில் அவருடைய அதிகாரத்தையும் வல்லமையையும் செயல்படுத்த நமக்கு அதிகாரம் அளிக்கிறது என்பது தெளிவாகிறது. இது ஒன்றுசேர்ந்து ஜெபிப்பதின் மூலமாகவும், (விசுவாசிகள் இயேசுவின் நாமத்தில் ஒன்றாக ஜெபிப்பது), "கட்டுவதும் கட்டவிழ்ப்பதும்" மூலமாகவும் நிறைவேற்றப்படுகிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே விசுவாசிகள் கூடும்போதெல்லாம், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் வல்லமை அவர்களுக்குள்ளும் இருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது இதை உறுதிப்படுத்துகிறார்.

நாம் இருவராகவோ, மூவராகவோ, இன்னும் பலராகவோ இயேசுவின் நாமத்தில் விசுவாசிகளாக கூடிவரும்போது, இயேசுவும் அங்கே இருக்கிறார். நம்முடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவருடைய வல்லமை நமக்குக் கிடைக்கிறது. நாம் ஒன்றுபட்டவர்களாக, ஒரே இதயத்துடனும், ஒரே மனதுடனும், நம்முடைய ஒருங்கிணைந்த ஜெபத்தின் மூலமாகவும், நாம் ஜெபிக்கும் சூழ்நிலைகளில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமை செயல்படுவதற்குக் காரணமாக இருக்கும். பிதாவின் சித்தத்தின்படி பூமியில் உள்ள விஷயங்களை நாம் கட்டுகிறோம் மற்றும் கட்டவிழ்க்கிறோம் அல்லது அனுமதிக்கிறோம் மற்றும் தடை செய்கிறோம், மேலும் நமது செயல்களை பரலோகம் ஆதரிக்கிறது. இயேசுவின் நாமத்தில் நாம் ஒன்று கூடும்போது, நமக்கு மகத்தான வல்லமை, அதிகாரம்,

மற்றும் ஆளுகை கிடைக்கும். இயேசு நமக்கு எவைகளை ஆயத்தமாக்கி வைத்திருக்கிறாரோ அவைகளை நாம் பெற்றுக் கொள்வோமாக.

(அத்தியாயம் 19க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 19

# இயேசுவின் நாமத்தில் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள், கனம்பண்ணுங்கள், மற்றும் ஆசீர்வதியுங்கள்

**மத்தேயு 10:41,42**

**[41]"தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்.**
**[42] சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."**

**மாற்கு 9:37 (மேலும் மத்தேயு 18:5; லூக்கா 9:48 பாருங்கள்)**

**"இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார்."**

**எபிரெயர் 6:10**

**ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.**

**3 யோவான் 1:5-8**

**[5]பிரியமானவனே, நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறாய்.**

**[6]அவர்கள் உன்னுடைய அன்பைக்குறித்துச் சபைக்குமுன்பாகச் சாட்சி சொன்னார்கள்; தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும்.**
**[7]ஏனெனில் அவர்கள் புறஜாதியாரிடத்தில் ஒன்றும் வாங்காமல் அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப்போனார்கள்.**
**[8]ஆகையால் நாம் சத்தியத்திற்கு உடன்வேலையாட்களாயிருக்கும்படி அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்.**

இயேசுவின் நாமத்தினிமித்தம் யாராவது ஒருவரைக் நாம் கனம்பண்ணும்போது, இயேசுவையே கனம்பண்ணுகிறோம். ஒரு வேளை அது ஒரு சீஷனாகவோ சிறு குழந்தையாகவோ அல்லது சுவிசேஷ ஊழியராகவோ இருந்தாலும், இயேசுவின் நாமத்தினிமித்தம் நாம் அவர்களைக் கனப்படுத்தும்போது, கர்த்தராகிய இயேசுவையும் பிதாவையும் கனம்பண்ணுகிறோம். இயேசுவின் நாமத்தில் நாம் செய்யும் நன்மைகள், அதாவது, ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறது அல்லது வேறு எந்த கிரியை மற்றும் அன்பின் பிரயாசமாக இருந்தாலும், அது கர்த்தருக்காகவே செய்யப்படுகிறது. கர்த்தருடைய நாமத்தினாலே ஊழியம் செய்கிறவர்களை நாம் கனம்பண்ணும்போதும், ஆசீர்வதித்து, ஆதரிக்கும்போதும், தேவனுடைய ராஜ்யத்துக்காக அவர்கள் செய்யும் வேலையில் பங்கெடுக்கிறோம். கர்த்தர் இவற்றை நினைவில் வைத்து நமக்கு தக்க பலனை அளிப்பார்.

இயேசுவின் நாமத்தில் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுவதின் மற்றும் கனம்பண்ணுவதின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், உண்மை என்னவென்றால்,நாம் எல்லோருடனும் எல்லாவற்றிலும் உடன்படாமல் இருக்கலாம். ஆயினும்கூட, நாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஒருவரையொருவர் நேசிக்கவும், கனம்பண்ணவும், ஆசீர்வதிக்கவும் முடியும்.

*"திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களுக்கு"* (1 தீமோத்தேயு 5:17) *"இரட்டிப்பான கனத்தை"* கொடுக்க

வேதாகமம் நமக்குக் கற்பிக்கும் அதே வேளையில், எளியவர்களாக இருக்கும் தேவனுடைய பரிசுத்தவான்களை ஆசீர்வதிப்பது என்பதையும் குறைவான முக்கியத்துவம் வாய்ந்ததாக நாம் நினைக்கக்கூடாது. இயேசு சொன்னதை நினைவில் வையுங்கள், *“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்...”* (மத்தேயு 25:40). நாம் எதைச் செய்தாலும், அது சிறியதாக இருந்தாலும் சரி, பெரியதாக இருந்தாலும் சரி, அதை இயேசுவின் நாமத்தால் தேவனின் ஒரு எளிமையான பரிசுத்தவானுக்கோ அல்லது பிரபலமான ஊழியனுக்கோ செய்யும்போது, அதை நாம் இயேசுவுக்குச் செய்கிறோம். அதுதான் முக்கியம். இதைச் செய்யும்போது நாம் துல்லியமாக இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்.

[**பின் குறிப்பு**: நாமும் *“சர்ப்பங்களைப் போல வினாவுள்ளவர்களாக”* எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், மேலும் நமது இரக்க குணத்தை பிறர் தவறாகப் பயன்படுத்துவதையோ அல்லது தேவன் நமக்குக் கொடுத்த நேரத்தையும் ஆற்றலையும் பணத்தையும் “சீஷன் என்ற பெயரில்” வீணாக உபயோகிப்பதற்கு மற்றவர்களை அனுமதிக்கக்கூடாது.]

---

நாம் இயேசுவின் நாமத்தில் கூடிவரும்போது, இயேசு இருக்கிறார் மற்றும் அவருடைய வல்லமை நமக்கு கிடைக்கிறது! நாம் இயேசுவின் நாமத்தில் ஒருவரையொருவர் கனம்பண்ணி ஆசீர்வதிக்கும்போது, இயேசுவையும் பிதாவையும் கனம் பண்ணுகிறோம்!

---

## சிந்தனைக்கு

18 மற்றும் 19 அத்தியாயங்களுக்கானது.

- இயேசுவின் நாமத்தில் நாம் ஒன்று கூடும்போது, அங்கே இயேசு இருக்கிறார், அவருடைய வல்லமை கிடைக்கிறது என்ற உண்மையைப் பற்றி சிந்தியுங்கள். பூமிக்குரிய விஷயங்களில் தாக்கத்தை ஏற்படுத்த அவருடைய பிரசன்னத்தையும் வல்லமையையும் நாம் எவ்விதமாக அணுகலாம் என்பதை விளக்குகிற மத்தேயு 18:18-20 இல் இயேசு நமக்குக் கற்றுக் கொடுத்தது என்ன?
- இயேசுவின் நாமத்தில் மற்றவர்களைக் கனப்படுத்துவதையும் ஆசீர்வதிப்பதையும் உங்கள் வாழ்க்கை முறையின் இயல்பான மற்றும் நிலையான பகுதியாக எப்படி மாற்றலாம்? ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை கனம்பண்ணுவதில் இருந்து உங்களைத் தடுக்கும் மனதளவில் உள்ள பிரச்சினைகள் (உதாரணமாக, மன்னிக்காமல் இருப்பது, வெறுப்பு, பாரபட்சம், சண்டை, பொறாமை, போட்டி, நம்பிக்கையற்ற உணர்ச்சிகள் போன்றவை) இருந்தால், அவற்றை தேவனிடத்தில் அறிக்கையிட்டு அவைகளிடமிருந்து உங்களை விடுவிக்கும்படி அவரிடம் கேளுங்கள். இயேசுவின் நாமத்தில் எல்லா ஜனங்களையும் கனப்படுத்தவும் ஆசீர்வதிக்கவும் உங்கள் இதயத்தை தூய்மையாகவும் திறந்ததாகவும் வைத்திருங்கள்.

# 20

# இயேசுவின் நாமத்தில் பிரசங்கியுங்கள், போதகம் பண்ணுங்கள் மற்றும் ஊழியம் செய்யுங்கள்

அப்போஸ்தலர் **4:17,18**

**[17]ஆகிலும் இது அதிகமாய் ஜனத்துக்குள்ளே பரம்பாதபடிக்கு, இதுமுதல் ஒருவரோடும் இந்த நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று, அவர்களை உறுதியாய்ப் பயமுறுத்தவேண்டுமென்று சொல்லிக்கொண்டு,"**

**[18]அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.**

அப்போஸ்தலர் **5:28**

**"நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான்."**

ஆரம்பகால திருச்சபையினர் இயேசுவின் நாமத்தில் செய்த பிரசங்கங்கள், போதனைகள் மற்றும் ஊழியங்கள் ஆகியவை மதத்தலைவர்களை அச்சுறுத்திய காரியங்களில் ஒன்றாக இருந்தது. அந்த நாமத்திற்கு அஞ்சினார்கள்! இது நம் காலத்திலும் உண்மையாகவே காணப்படுகிறது. "இயேசு கிறிஸ்து" என்ற நாமத்தை நாம் குறிப்பிடாத வரை, மக்கள் நல்ல சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் மற்றும் ஊக்கமளிக்கும் பேச்சுகளைப் பொருட்படுத்த மாட்டார்கள். இருப்பினும், வெளிப்புற அழுத்தங்களும்

அச்சுறுத்தல்களும் அப்போஸ்தலர்களை இயேசுவின் நாமத்தில் போதகம் பண்ணுவதிலும், பிரசங்கிப்பதிலும், ஊழியம் செய்வதிலும் இருந்து அவர்களைத் தடுக்க முடியவில்லை. அவர்கள் அந்த நாமத்தில் தொடர்ந்து ஊழியம் செய்துகொண்டுதான் இருந்தார்கள், நாமும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் அடிப்படையானது, நாம் பிரசங்கிக்கும் மற்றும் போதிக்கும் அனைத்தும் அந்த நாமத்தில்தான் இருக்கிறது.

இயேசுவின் நாமத்தில் பிரசங்கிப்பது வாழ்க்கையில் ஆழமான மாற்றங்களையும், குணப்படுதல்களையும், அற்புதங்களையும் மற்றும் விடுதலையையும் கொண்டுவருகிறது. ஆரம்ப காலத்தில் எருசலேமில் இதுதான் நடந்தது.

**அப்போஸ்தலர் 8:5-8,12**

**5அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான்.**
**6பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.**
**7அநேகரிலிருந்த அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந்திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.**
**8 அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.**
**12தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம்பெற்றார்கள்.**

பிலிப்பு எருசலேமில் உள்ள உள்ளூர் சபையில் வளர்க்கப்பட்டு பயிற்சி பெற்றார். சமாரியாவில், அவன் கிறிஸ்துவை அறிவித்தான், தேவனுடைய ராஜ்யம் மற்றும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றி பிரசங்கித்தான். அப்போஸ்தலர்கள் செய்ததைப் பிலிப்பும் செய்தான் மற்றும் அதே பலன்களைப் பெற்றான். ஜனங்கள் இயேசுவிடம்

திரும்பினர், அற்புதங்கள் நடந்தன, பிசாசுகள் துரத்தப்பட்டன, ஜனங்கள் குணமடைந்தனர் மற்றும் மிகுந்த சந்தோஷத்தை அனுபவித்தனர்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிரசங்கிப்பதன் விளைவு இதுவே ஆகும்.

இன்று, நம்முடைய பிரசங்கம், போதனை மற்றும் ஊழியம் ஆகியவற்றைச் செய்யும்போது இயேசுவின் நாமத்தில் செய்யப்பட வேண்டும். இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அவர் உண்மையில் யார் என்பதை உண்மையாக வெளிப்படுத்தும் நோக்கத்துடன் நாம் அவ்வாறு செய்கிறோம் என்பதே இதன் பொருள். இயேசுவின் நாமம் அதன் வல்லமையை இழக்கவில்லை, அவருடைய நாமத்தில் நாம், நம்முடைய பிரசங்கம், போதனை மற்றும் ஊழியத்தை சரியாகச் செய்தால், ஆரம்பகால திருச்சபை கண்ட அதே விளைவுகளை நாமும் காணலாம்.

இயேசுவின் நாமத்தில் பிரசங்கிப்பதில் நாம் தைரியமாக இருக்க வேண்டும். சவுல், நன்கு படித்த பரிசேயர், இயேசு கிறிஸ்துவின் நாமத்தை கடுமையாக எதிர்த்தவன். தமஸ்குவுக்கு செல்லும் வழியில், இயேசுவை சந்தித்த உடனேயே, அவர் *“தமஸ்குவில் இயேசுவின் நாமத்தில் தைரியமாகப் பிரசங்கித்தான்”* (அப்போஸ்தலர் 9:27,29).

நமக்கு அருளப்பட்ட கிருபையும் அழைப்பும் அவருடைய நாமத்திற்காக தேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காகவே என்பதை நாம் ஒவ்வொருவரும் அங்கீகரிக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 1:7ல் எழுதியது போல், *“தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணும்பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச்செய்திருக்கிறார்.”*

திருச்சபையின் தலைவராகிய ஆண்டவர் இயேசு, நாம் அவருடைய நாமத்தில் பிரசங்கிக்கும்போதும்,

போதிக்கும்போதும், ஊழியம் செய்யும்போதும் நம்மைப்பார்த்துக் கொண்டு இருக்கிறார். அவர் நம்முடைய சகிப்புத் தன்மையையும், பொறுமையையும், அவருடைய நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அவர் அறிந்திருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 2:3).

ஆகையால், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலும், ஊழியம் செய்வதிலும் உண்மையுள்ளவர்களாக இருப்போம். அவரையும் அவருடையநாமத்தையும்உரத்தசத்தத்துடன்தைரியமாகவும், முழு பெலத்துடனும் நாம் அறிவிக்காவிட்டால், அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான பாக்கியத்தை நமக்குக் கொடுத்த அவரை ஏமாற்றுகிறவர்களாகக் காணப்படுவோம்.

(அத்தியாயம் 24க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 21
# இயேசுவின் நாமத்தில் குணப்படுத்துங்கள்

**மாற்கு 16:17,18**

**[17]விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;**
**[18]சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்."**

**அப்போஸ்தலர் 3:6,12,16**

**[6]அப்பொழுது பேதுரு: "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி,"**
**[12]பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி: "இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன?**
**[16]அவருடைய நாமத்தைப்பற்றும் (இயேசு) விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப்பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது.**

**அப்போஸ்தலர் 4:7,10**

**[7] அவர்களை நடுவே நிறுத்தி: "நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே, இதைச் செய்தீர்கள்" என்று கேட்டார்கள்.**
**[10]உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல்**

**ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது.**

**யாக்கோபு 5:14,15**
**[14]உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.**
**[15] அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.**

இயேசு சிறந்த மருத்துவர், வல்லமையுடன் குணப்படுத்துபவர் மற்றும் குணப்படுத்துதல் என்பது அவருடைய நாமத்தில் உள்ளது. வியாதிஸ்தர்களைக் குணமாக்க தம் நாமத்தைப் பயன்படுத்துமாறு அனைத்து விசுவாசிகளுக்கும் இயேசு கட்டளையிட்டுள்ளார். இயற்கைக்கு அப்பாற்பட்ட சிகிச்சையை மேற்கொள்ளுவதற்கென ஒரு தனி முறையோ அணுகுமுறையோ இல்லை. வியாதியஸ்தர்கள் மீது கைகளை வைக்கலாம், நீங்கள் தூரத்தில் இருந்து அவர்களுக்கு சேவை செய்யலாம், அவர்களுக்கு தொலைபேசி அழைப்பின் மூலம் அவர்கள் குணமடைய ஜெபிக்கலாம். பிரார்த்தனை செய்த துணியை அனுப்பலாம், (ஏற்கெனவே ஜெபிக்கப்பட்ட துணி) மற்றும் எண்ணெய் பூசலாம். நாம் இயேசுவின் நாமத்தில் ஊழியம் செய்கிறோம் என்பதே முக்கியமான காரியமாகும். “இயேசு” என்ற நாமத்தைக் குறிப்பிடுவது என்பது இயேசுவைக் கொண்டுவருகிறது. நாம் வியாதிகளையும் நோய்களையும் விலகும்படி சொல்லும்போதும், கட்டளையிடும்போதும், இயேசுவின் நாமத்தில் குணமடைய ஜெபிக்கும்போதும், நாம் அவருடைய இடத்தில் நிற்கிறோம், அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். மேலும் இயேசுவே நம் மூலம் அந்த நபருக்கு ஊழியம் செய்வது போல் இருக்கிறது. இயேசுவே உடல் ரீதியாக பிரசன்னமாகி, அந்த நபருக்கு நேரடியாகப் பணிபுரிந்தால், எதிர்பார்க்கப்படும் அதிசயமான முடிவுகளுடன் நம்முடைய எதிர்பார்ப்பு ஒத்துப்போக

வேண்டும். இயேசுவின் நாமத்தில் வியாதியஸ்தர்களைக் குணப்படுத்துவது என்பது இதுதான். நாம் நமது சொந்த திறமையினாலோ அல்லது பரிசுத்தத்தின் அடிப்படையிலோ ஊழியம் செய்யவில்லை. இயேசுவின் நாமத்தில் இருக்கும் அதிகாரத்திலும் வல்லமையிலும் நாம் ஊழியம் செய்கிறோம்.

(அத்தியாயம் 24க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 22
# இயேசுவின் நாமத்தில் அற்புதங்களைச் செய்யுங்கள்

மாற்கு 9:38,39

38அப்பொழுது யோவான் அவரை நோக்கி: “போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம்” என்றான்.

39அதற்கு இயேசு: “அவனைத் தடுக்கவேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்.”

மாற்கு 16:17,18

17விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;

18சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.

அப்போஸ்தலர் 4:29-31,33

29 இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து,

30 உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழுதைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும்” என்றார்கள்.

31அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.

33கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்;

**அவர்களெல்லார்மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது.**

இயேசுவின் நாமத்தில் அற்புதங்களும், அடையாளங்களும், அதிசயங்களும் உள்ளன. இயற்கைக்கு அப்பாற்பட்ட, அசாதாரணமான, எதிர்பாராத மற்றும் சாத்தியமில்லாத விஷயங்கள் இயேசுவின் நாமத்தில் நடக்கும். இயற்கை விதிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடியும். இயற்கை மண்டலத்தில் உள்ள விஷயங்கள்—உயிருள்ள மற்றும் உயிரற்றவை—இயேசுவின் நாமத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவை. எல்லா விசுவாசிகளும் இயேசுவின் நாமத்தில் அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் அதிசயங்களை அணுகலாம்.

இயற்கையில் உள்ள சூழ்நிலைகள், நிலைமைகள், பொருள் சம்பதமான காரியங்கள் போன்றவை இயேசுவின் நாமத்தால் நாம் பிறப்பிக்கும் கட்டளைக்கு பதிலளிக்கும். நிச்சயமாக, நாம் நோக்கமில்லாமல் அல்லது தன்னிச்சையாக இவற்றைக் கையாள்வதற்கோ அல்லது நம் சொந்த விருப்பங்களின்படி கட்டுப்படுத்தவோ பேசவில்லை. இதுபோன்ற செயல்களை நம்மால் செய்ய முடியாது. ஆனால், பிதாவின் விருப்பத்தை நம் வாழ்விலோ அல்லது பிறருக்கோ செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும்போது, நம் இதயங்களில் நம்பிக்கையுடன் எழுந்து, இயேசுவின் நாமத்தில் ஒரு கட்டளையைப் பேசலாம் அல்லது ஜெபிக்கலாம், அற்புதங்கள் நடப்பதைக் காணலாம். இயேசு அற்புதம் செய்பவர். அவர் அற்புதங்களையும், அடையாளங்களையும், அதிசயங்களையும் செய்கிறவர். அவருடைய நாமத்தைப் பயன்படுத்தி அவர் இங்கே இருந்தால் என்ன செய்வாரோ அதை செய்ய நமக்கு அதிகாரம் அளித்துள்ளார். ஆரம்பகால சபை இதற்காக ஜெபித்தது. இயேசுவின் நாமத்தில் அடையாளங்களும் அற்புதங்களும் செய்யப்படுவதைக் காணும்படி கேட்டார்கள். அவர்கள் அவைகளைப் பார்த்தார்கள். இப்போது இது நமக்குரிய சந்தர்ப்பமாகும்!

(அத்தியாயம் 24க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 23

# இயேசுவின் நாமத்தில் பிசாசுகளை துரத்துங்கள்

லூக்கா **10:17-19**

**17பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: "ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது" என்றார்கள்.**
**18 அவர்களை அவர் நோக்கி: "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்.**
**19இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகலவல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது."**

மாற்கு **16:17,18**

**17விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;**
**18சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்றார்.**

அப்போஸ்தலர் **16:16-18**

**16நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.**
**17அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: "இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சத்தமிட்டாள்.**
**18இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: "நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்"**

**என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று.**

இயேசுவின் நாமத்தில், ஒவ்வொரு விசுவாசிக்கும் பிசாசுகள் (“சர்ப்பங்கள் மற்றும் தேள்கள்”) மற்றும் சாத்தானின் அனைத்து வல்லமையின் மீதும் (கிரேக்க *டுனாமிஸ்* என்றால் “அமானுஷ்ய வல்லமை”) அதிகாரம் (கிரேக்க *எக்ஸூஸியா* என்றால் “அளிக்கப்பட்ட அதிகாரம்”) உள்ளது. எதிரியின் அனைத்து திறன்களின் மீதும் நமக்கு அதிகாரம் உள்ளது. இயேசு தம்முடைய நாமத்தினாலே நமக்கு அளித்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பிசாசுகளைத் துரத்தும்படி கட்டளையிட்டிருக்கிறார். அப்போஸ்தலர் 16-ல், இதை எப்படிச் செய்கிறோம் என்பதற்கான உதாரணத்தைக் காண்கிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தால் பொல்லாத ஆவி(களை) வெளியே வருமாறு அல்லது வெளியேறுமாறு அல்லது அவைகள் செய்கிறதை நிறுத்துமாறு கட்டளையிடுகிறோம். அவைகளும் கீழ்ப்படியும்.

சில சமயங்களில் பிசாசுகள் நம் வாழ்வில் குறுக்கிட்டு, வாழ்க்கையின் சில பகுதிகளில் நம்மை தொந்தரவு செய்ய, துன்புறுத்த, ஒடுக்க அல்லது வேதனை உருவாக்க முயற்சிக்கலாம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவைகளை நிறுத்தவும், புறப்படவும் கட்டளையிட்டு, அவைகளின் செயல்களை நாம் உறுதியாகவும் தைரியமாகவும் கண்டிக்க வேண்டும். நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து, பிசாசை எதிர்க்கும்போது, அவன் நம்மைவிட்டு பயந்து ஓடிப்போவான் என்று வேதாகமம் கூறுகிறது (யாக்கோபு 4:7). ஏதோ ஒரு விதத்தில் பொல்லாத ஆவிகளால் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்போது நாமும் அவ்வாறே செய்கிறோம்.

இயேசுவின் நாமத்தில் நீங்கள் பிசாசுகளை

எதிர்கொள்ளும்போது ஆன்மீக உலகில் என்ன நடக்கிறது என்பதை கற்பனை செய்து பார்க்க முயற்சி செய்யுங்கள். ஆன்மீக உலகில், நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள். நீங்கள் தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே. நீங்கள் சாத்தானையும் பிசாசுகளையும் உங்கள் பாதங்களுக்குக் கீழாக மிதித்துப் போடும்படியாக கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். நீங்கள் இயேசுவின் இரத்தத்தால் மூடப்பட்டிருக்கிறீர்கள் மற்றும் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் கையில் ஆவியின் பட்டயமும் உங்களைப் பாதுகாக்கும் தேவனுடைய சர்வாயுதவர்க்கமும் உள்ளது. உங்களுக்கு உதவ தேவதூதர்கள் பணியில் உள்ளனர். இப்போது நீங்கள் இயேசுவின் நாமத்தில் முன்னேறுங்கள். நீங்கள் இயேசுவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்கள், அவருடைய இடத்தில் அவர் இருந்தால் அவர் என்ன செய்வாரோ அதனை நீங்கள் அவர் சார்பாகச் செய்கிறீர்கள் என்று அறிவிக்கிறீர்கள். நீங்கள் இயேசுவின் நாமத்தில் அறிவிக்கும்போது, இயேசு அங்கே இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். பின்னர் நீங்கள் பிசாசுகளை வெளியேறும்படி கட்டளையிடுகிறீர்கள். பிசாசுகளுக்கு வாய்ப்பு உண்டா? அவைகள் பிடிவாதமாக இருக்கலாம் மற்றும் எதிர்க்க முயற்சி செய்யலாம், ஆனால் அவைகளுக்கு வாய்ப்பு இல்லை என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். முற்றிலும் இல்லை! இயேசுவின் நாமத்தில், எதுவும் உங்களைத் தடுக்க முடியாது. அவைகள் கண்டிப்பாக ஓடிப்போய்விடும்.

விசுவாசிகளைப் பொறுத்த வரையில், இயேசுவின் நாமத்தில் நம்முடைய ஆவிக்குரிய அதிகாரத்தை நாம் அறிந்து செயல்படும்போது பிசாசுகள் நம்மைக் கண்டு பயப்படுகின்றன. விசுவாசிகளாக, பிசாசுகளை துரத்துவதின் விளைவாக, நாம் தாக்கப்படுவோம் அல்லது அவைகள் நம்மை அடக்கி ஆளுகை செய்துவிடும் என்று

பயப்படவேண்டாம். பிசாசுகளைக் கையாள்வதில் இயேசு தெளிவாகக் கூறினார் *"ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது"* (லூக்கா 10:19). இதுதான் இந்த விஷயத்தில் இறுதி வார்த்தை. எந்த பிசாசும் நம்மைத் துன்புறுத்த முடியும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. *"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத்தொடான்"* (1 யோவான் 5:18).

*"பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்"* (1 யோவான் 3:8). இயேசு நம்மையும் அவ்வாறே செய்ய தம் நாமத்தால் அனுப்பினார். பிசாசுகள் மீது தைரியமாக அதிகாரம் செலுத்துங்கள் மற்றும் இயேசுவின் நாமத்தில் அவைகளின் செயல்களை அழித்து விடுங்கள்.

(அத்தியாயம் 24க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 24

# இயேசுவின் நாமத்தில் பெரிய கிரியைகளைச் செய்யுங்கள்

**யோவான் 14:11-14**

**11நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.**

**12மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.**

**13 நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.**

**14 என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்.**

கர்த்தராகிய இயேசு பிதாவின் நாமத்தினாலே தாம் செய்த அற்புதமான செயல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். அவர் உண்மையிலேயே பிதாவினால் அனுப்பப்பட்டவர் என்பதற்கு ஆதாரமாக அவர் தமது அற்புதச் செயல்களான குணப்படுத்துதல், விடுதலை, அடையாளங்கள் மற்றும் அதிசயங்களைச் சுட்டிக்காட்டினார். பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கித்தபடி, *"...நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்"* (அப்போஸ்தலர் 2:22).

கர்த்தராகிய இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்கள் அவர் செய்த அதே வகையான அற்புதங்களையும் இன்னும்

பெரிய அற்புதங்களையும் செய்வார்கள் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, விசுவாசிகள் அவருடைய நாமத்தில் கேட்பதைப் பற்றி அவர் பேசினார். அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான நமது பாக்கியத்தைப் பயன்படுத்துவதன் மூலம், அவர் செய்த அற்புதங்களையும் இன்னும் பெரிய அற்புதங்களையும் செய்வோம்.

இன்னும் பெரிய அற்புதங்கள் என்றால் வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டஅற்புதங்களின்வகைகளைவிடஅதிகமாக இருக்கும் என்று கூறுகிறது. எடுத்துக்காட்டாக, மனிதர்களின் உடலில் உள்ள உலோக உள்வைப்புகள் மறைந்துவிட்டன, அகற்றப்பட்ட உறுப்புகள் மீண்டும் தோன்றின, அல்லது இரசாயன ஏற்றத்தாழ்வுகள் சரி செய்யப்பட்டன போன்ற எந்தப் பதிவும் இல்லை. வேதாகமத்தில் முன்னோடியில்லாத அல்லது இணையாக இல்லாத அற்புதங்களை இன்று காண நாம் முன்வர வேண்டும் என்பதே இதன் முக்கிய கருத்தாகும். இயேசு, *"பெரிய கிரியைகள்"* (யோவான் 14:12) என்று கூறினார், இது இயேசுவின் நாமத்தில் தேவன் நம் மூலம் நிகழ்த்தும் அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் அதிசயங்களின் பரந்த அளவைக் குறிக்கிறது.

தைரியமாக இருப்போம்! இயேசுவின் நாமத்தில் பெரிய கிரியைகளை செய்ய எதிர்பார்ப்போம்! நம்மால் முடியும் என்று இயேசு சொன்னார்!

---

இயேசுவின் நாமம் அதன் எந்த வல்லமையையும் இழக்கவில்லை. இயேசுவின் நாமத்தில் குணப்படுத்துதல்கள், அற்புதங்கள் மற்றும் விடுதலைகள் உள்ளன. இயேசுவின் நாமத்தில் பெரிய அற்புதங்கள் நிகழலாம்.

---

## சிந்தனைக்கு

20-24 அத்தியாயங்களுக்கானது.

1) இன்று இயேசுவின் நாமத்தில் பிரசங்கிப்பதும் ஊழியம் செய்வதும் அப்போஸ்தல நடப்படிகளில் உள்ளதைப் போன்ற விளைவுகளைத் தர வேண்டும், ஏனெனில் இயேசுவின் நாமம் அதன் எந்த வல்லமையையும் இழக்கவில்லை. இயேசுவின் நாமத்தில் பிரசங்கிக்கும்போதும் போதிக்கும்போதும் அதிக அற்புதங்கள், சுகப்படுத்துதல்கள், விடுதலைகள், அடையாளங்கள் மற்றும் அதிசயங்களைக் காண நாம் எவ்விதமான மாற்றங்களைச் செய்ய வேண்டும்?

2) ஒரு விசுவாசியாக, உங்களைச் சுற்றியுள்ள ஜனங்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட குணப்படுத்துதல்கள், விடுதலைகள் மற்றும் அற்புதங்களைச் செய்ய இயேசுவின் நாமத்தில் உங்கள் சிலாக்கியத்தையும் அதிகாரத்தையும் பயன்படுத்துவதற்கான சில வழிகள் யாவை?

# 25
# இயேசுவின் நாமத்தை தவறாகப் பயன்படுத்துதல்

மத்தேயு 7:21-23

21"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படிசெய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: 'கர்த்தாவே! கர்த்தாவே!' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.

22அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: 'கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?' என்பார்கள்.

23அப்பொழுது, 'நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்' என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

மத்தேயு 24:5

ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: 'நானே கிறிஸ்து' என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.

அப்போஸ்தலர் 19:11-20

11பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.

12அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும், கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களைவிட்டுப் புறப்பட்டன.

13அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: "பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்" என்றார்கள்.

14பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஒரு யூதனுடைய

**குமாரர் ஏழுபேர் இப்படிச் செய்தார்கள்.**
**15பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்" என்று சொல்லி,**
**16பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள்.**
**17இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது.**
**18 விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள்.**
**19மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்.**
**20இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.**

கர்த்தராகிய இயேசு தம்முடைய நாமத்தை தவறாகப் பயன்படுத்துவதைப் பற்றி எச்சரித்தார். முதலாவதாக, ஆன்மீக சக்தியைக் கொண்ட நபர்கள் உள்ளனர், ஆனால் அது தவறான மூலத்திலிருந்து உருவானதாக இருக்கிறது. பிசாசுகள் அத்தகைய மக்களை ஏமாற்றும் அடையாளங்களையும் அற்புதங்களையும் உருவாக்க அதிகாரம் அளிக்கின்றன (1 தீமோத்தேயு 4:1; 2 தெசலோனிக்கேயர் 2:9; 2 கொரிந்தியர் 11:13-15). ஜனங்களை ஏமாற்ற இயேசுவின் நாமத்தால் அவர்கள் இதைச் செய்யலாம் (தவறான அல்லது போலியான ஒன்று, உண்மையான விஷயத்துடன் நெருக்கமாக ஒத்திருக்கும் என்பதை நினைவில்கொள்ளுங்கள்). இயேசு கிறிஸ்து உண்மையிலேயே மகிமைப்படுத்தப்படுகிறாரா என்பதே உண்மையான சோதனை ஆகும். மக்கள் தனிப்பட்ட முறையில் அவர் மீது நம்பிக்கை வைக்க வழிவகுக்கிறார்களா என்பதையும் இது சார்ந்துள்ளது. மேலும், இது அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் உண்மையான உறவை

வளர்த்துக் கொள்கிறார்களா என்பதைப் பொறுத்தது. மேலும், அவர்கள் அக்கிரமத்தைத் தழுவுவதற்குப் பதிலாக தெய்வீகக் கொள்கைகளின்படி வாழ்கிறார்களா என்பதை உள்ளடக்கியது. அவர்களுடைய கனிகளால் அவர்களை அறிவோம் (மத்தேயு 7:16). இரண்டாவதாக, ஸ்கேவாவின் ஏழு மகன்களைப் போலவே, சில நன்மைகளைப் பெறுவதற்காக இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்த விரும்புகிறவர்களும் உள்ளனர், ஆனால், இயேசுவுடனான ஐக்கியத்தில் இல்லாமல், அவர்களால் அவ்வாறு செய்ய முடியாது.

போலிகள் இருக்கும் என்ற நிதர்சனம் என்பது நம்மை பயமுறுத்திவிடக் கூடாது. ஏதாவது கணிசமான மதிப்பைக் கொண்டிருக்கும் போதுதான் போலிகள் வெளிப்படுகின்றன. போலிகளை அடையாளம்காண, நாம் உண்மையானவைகளை நன்றாக அறிந்திருக்க வேண்டும். போலியானவைகளுக்குப் பயந்து, நாம் உண்மையானதை நிராகரிப்பதில்லை. மாறாக, நாம் சத்தியத்தில் நிலைபெறுகிறோம். இயேசுவின் நாமத்தின் அதிகாரத்திலும் வல்லமையிலும் நாமே நடக்க ஆரம்பிக்கிறோம். நாம் இயேசுவோடு நெருக்கத்தில் வளர்கிறோம், இதனால் நாம் அவருடன் ஐக்கியமாக நடக்கவும் அவரைத் துல்லியமாக பிரதிநிதித்துவப்படுத்தவும் முடியும். நாம் நமது நோக்கங்களைக் காத்து, அவருடைய நாமத்தைப் பயன்படுத்தி இயேசுவை வெளிப்படுத்தவும் மகிமைப்படுத்தவும் முயற்சிக்கிறோம்.

(அத்தியாயம் 29க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 26

# இயேசுவின் நாமத்திற்காக துன்புறுத்தப்படுகிறோம்

**மத்தேயு 10:22**
**என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.**

**லூக்கா 21:12,17**
**12இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம்,
அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெப ஆலயங்களுக்கும்
சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும்
அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்.
17என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்.**

அவருடைய நாமத்தினிமித்தம் நாம் பகைக்கப்படுவோம், மற்றும் துன்புறுத்தப்படுவோம் என்று கர்த்தராகிய இயேசு நம்மை எச்சரித்தார். நம்மைத் துன்புறுத்துபவர்கள் தாங்கள் ஏதோ உன்னதமான மற்றும் நல்லது செய்வதாக நினைப்பார்கள்.

**அப்போஸ்தலர் 5:40-42**
**40அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு,
அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின்
நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை
விடுதலையாக்கினார்கள்.
41அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப்
பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை
சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்,
42தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல்
உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்.**

இயேசு பரலோகத்திற்கு ஏறின பிறகு, அப்போஸ்தலர்கள்

மதத் தலைவர்களிடமிருந்து அச்சுறுத்தல்களையும், எதிர்ப்புகளையும், துன்புறுத்தலையும் சந்திக்கத் தொடங்கினர். இருப்பினும், அவருடைய நாமத்திற்காக அவமானத்தை அனுபவிப்பதை ஒரு கௌரவமாக அப்போஸ்தலர்கள் நினைத்தார்கள். அந்த அளவிற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசுவையும் அவருடைய நாமத்தையும் நேசித்தார்கள். ஆரம்பகால திருச்சபை கடுமையான துன்புறுத்தலை எதிர்கொண்டது, ஆனாலும், அவர்கள் தங்கள் விசுவாசத்திலும் இயேசு கிறிஸ்துவுக்கு சேவை செய்வதிலும் தளராமல் தொடர்ந்து செயல்பட்டனர்.

உதாரணமாக, எருசலேமுக்குச் செல்லும்போது பவுலுக்கு என்ன நடக்குமோ என்று மிகவும் கவலையாக இருந்த செசரியாவில் உள்ள விசுவாசிகளிடம் பவுல் பேசியபோது, பவுலுக்கு கர்த்தராகிய இயேசுவின் மீதும் இயேசுவின் நாமத்தின் மீதும் எந்த அளவிற்கு அர்ப்பணிப்பு இருந்தது என்பதைக் கவனியுங்கள், *“அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்”* (அப்போஸ்தலர் 21:13).

கர்த்தராகிய இயேசுவின் மீதும் அவருடைய நாமத்தின் மீதும் உள்ள அசைக்க முடியாத அன்பு, பயமோ வெட்கமோ இன்றி, அவருடைய நாமத்திற்காக துன்புறுத்தலையும் ஏளனத்தையும் தைரியமாகச் சகித்துக்கொள்ள நமக்கு உதவட்டும். துன்புறுத்தப்பட்ட விசுவாசிகளுக்கு இதைப்பற்றி தெரியப்படுத்துவதற்காக அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு எழுதுகிறார்: *“நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடையய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்”*

(1 பேதுரு 4:14). நாம் அவருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், துன்புறுத்தப்படும்போது அவர் மீதும் அவருடைய நாமத்தின் மீதும் உள்ள விசுவாசத்தை மறுதலியாமலிருக்கிறதையும் கர்த்தராகிய இயேசு அறிந்திருக்கிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 2:13; வெளிப்படுத்தின விசேஷம் 3:8).

(அத்தியாயம் 29க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 27

# இயேசுவின் நாமத்திற்காக தியாகம் செய்வது

**மத்தேயு 19:29**

**என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்;**

**அப்போஸ்தலர் 9:16**

**அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்.**

**அப்போஸ்தலர் 15:25**

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும்.**

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காக தியாகம் செய்வதற்கான சில சந்தர்ப்பங்களை நாம் விருப்பத்துடன் தெரிந்துகொள்வது அவசியம் ஆகும். சிலர் உலகத்திற்குரிய ஆதாயத்தை விட்டுவிடலாம். சிலர் உலகத்திற்குரிய உறவுகளை விட்டுவிடலாம். கர்த்தர் சிலருக்குக்கொடுத்தஒருவேலையைஅவர்கள்செய்யும்போது ஏற்படும் கஷ்டங்களைச் சகித்துக்கொள்ளலாம். சிலர் தங்கள் உயிரைப் பணயம் வைத்து இயேசுவுக்கு சேவை செய்யலாம். ராஜ்யத்தின் வேலையை முன்னேற்றுவதற்காக சிலர் பெரிய பொறுப்பை ஏற்கலாம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பல்வேறு தியாகங்களைச் செய்ய நாம் தூண்டப்படலாம், வழிநடத்தப்படலாம் அல்லது

அழைக்கப்படலாம்.

இவை அனைத்திலும், இயேசுவின் மீது நாம் கொண்ட அன்பு, அவருடைய நாமத்தின் மீதான அன்பு, மற்றும் நாம் சேவை செய்ய அழைக்கப்பட்ட ஜனங்களுக்கான அன்பு ஆகியவற்றிலிருந்து நமது உந்துதல் வருகிறது. *“கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்”* (2 கொரிந்தியர் 5:14,15). நமது நோக்கங்கள் தூய்மையாக இருக்க வேண்டும். மனிதர்களுக்கு முன்பாக பக்திமான்களாக தோன்றுவதற்காகவோ, போலித்தனமான மனத்தாழ்மையின் காரணமாகவோ, அல்லது மக்கள் முன் மேலோட்டமான தோற்றத்திற்காகவோ நாம் தியாகம் செய்வதுபோல காண்பிக்கக் கூடாது. தேவன் நம் இதயத்தைக் காண்கிறார், நாம் வாழும் வாழ்க்கையை அவர் பார்க்கிறார்.

அவருடைய நாமத்தினிமித்தம் நாம் தியாகம் செய்யும்போது, இப்பொழுது இம்மையிலே நாம் நூறத்தனையாகப் (மாற்கு 10:29,30) பெற்று, மறுமையிலே ஆசீர்வதிக்கப்படுவோம் என்று கர்த்தர் கூறினார். தேவன் எந்த மனிதனுக்கும் கடனாளி அல்ல, பணத்தால் வாங்கக்கூடியதை விடவும் அதிகமாகவே இந்த வாழ்க்கையில் அவர் நமக்கு கொடுப்பார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத்தியாகம்செய்வதைமிகுந்தசந்தோஷமாகவும், ஒரு பெரிய பாக்கியமாகவும் எண்ணுவோமாக.

(அத்தியாயம் 29க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 28

# நாம் இயேசுவின் நாமத்தைத் தரித்துக்கொண்டுள்ளோம்

**அப்போஸ்தலர் 9:15**

**அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்.**

**அப்போஸ்தலர் 15:14**

**தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளினவிதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே.**

விசுவாசிகளாக, நாம் அவருடைய நாமத்தைப் பயன்படுத்துவதற்கான சிலாக்கியத்தையும் உரிமையையும் மட்டுமல்ல, அவருடைய நாமத்தைத் தரித்துக்கொண்டவர்களாக இருப்பதற்கும் அழைக்கப்பட்டிருக்கிறோம். பழைய உடன்படிக்கையைப்போலவே, புதிய ஏற்பாட்டுதிருச்சபையாகிய நம்மை *"தமது நாமத்திற்காக ஒரு ஜனமாயிருப்பதற்கு"* தேவன் தெரிந்துகொண்டார். நாம் ஒவ்வொருவரும் அவருடைய நாமத்தைத் தரித்துக்கொண்டுள்ளோம், யாக்கோபு சொல்வது போல், *"உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை"* (யாக்கோபு 2:7). இயேசுவின் அந்த அற்புதமான, அழகான, தகுதியான, கனத்திற்குரிய மற்றும் கம்பீரமான நாமத்தினால் விசுவாசிகளாகிய நாம் அறியப்பட்டுள்ளோம்.

**2 தெசலோனிக்கேயர் 1:11**

**ஆகையால், நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படும்பொருட்டாக;**

நாம் வாழும் முறை, நாம் நம்மை நடத்தும் விதம், நமது பேச்சு, பழக்கவழக்கங்கள், நடத்தை ஆகியவை நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படும்படியாக இருக்க வேண்டும். ஜனங்கள் நம் வாழ்வைக் கண்டு, இயேசுவின் நாமத்தைப் போற்ற வேண்டும். விசுவாசிகளாக, நாம் பாவத்தில் வாழவோ அல்லது தேவனுக்குப் பிடிக்காத காரியங்களைச் செய்யவோ முடியாது. *"கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவன்"* (2 தீமோத்தேயு 2:19) என்று வேதாகமத்தில் உள்ள போதனை தெளிவாக உள்ளது.

உதாரணமாக, நம்முடைய பணியிடங்களில், இயேசுவின் நாமம் மகிமைப்படும்படியாக நாம் நடந்துகொள்ள வேண்டும். பவுல் எழுதினார், *"தங்கள் முதலாளிகளை மதிக்கவும் கனம்பண்ணவும் ஒவ்வொரு பணியாளருக்கும் அறிவுறுத்துங்கள், ஏனெனில் இந்த அணுகுமுறை தேவனின் உண்மை மற்றும் புகழின் தெளிவான சாட்சியை அவர்களுக்கு அளிக்கிறது. அவர்களின் செயல்களால் தேவனின் நாமத்தை தூஷிப்பதற்கான காரணத்தை அவர்களுக்கு ஒருபோதும் வழங்க வேண்டாம் என்று அவர்களிடம் சொல்லுங்கள்"* (1 தீமோத்தேயு 6:1, தி பாஷன் ட்ரான்ஸ்லேஷன்).

நாம் அவருடைய நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்து, அவர்மீது உள்ள தீவிர அன்பினால், அவருடைய தகுதியான மற்றும் நிகரற்ற நாமத்திற்கு மகிமையையும், கனத்தையும், புகழையும் கொண்டுவரும் விதமாக வாழ்ந்து வருகிறோம்.

(அத்தியாயம் 29க்குப் பிறகு **சிந்தனைக்கு** கொடுக்கப்பட்டுள்ளது.)

# 29

# இயேசுவின் நாமத்தில் அறிவுரை கூறுங்கள்

**1 கொரிந்தியர் 1:10**

**சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.**

**2 தெசலோனிக்கேயர் 3:6**

**மேலும்,சகோதரரே,எங்களிடத்தில்ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்.**

புதிய ஏற்பாட்டு திருச்சபையில், பவுல் ஒரு ஆன்மீகத் தலைவராக, அவர் பொறுப்பில் இருந்த விசுவாசிகளை ஆண்டவர் இயேசுவின் நாமத்தால் கண்டித்தார், திருத்தினார் மற்றும்அறிவுறுத்தினார்.நிச்சயமாக,அவர்இதைஅன்பினால் செய்தார். அவர்களுடைய நன்மைக்காகவும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காகவே இவைகளைச் செய்தார். மிக முக்கியமாக, அவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அதாவது, திருச்சபையின் தலையான இயேசு கிறிஸ்துவின் சார்பாகச் செய்தார். ஆகவே, பவுல் எஜமானனுடைய இதயத்தை விசுவாசிகளுக்குத் தெரிவிக்கிறார். பவுலின் ஆன்மீகத் தலைமையின் கீழ் இருந்தவர்கள் இந்த திருத்தம் அல்லது அறிவுறுத்தலைப் பெற்றபோது, அவர்கள் அதை உரிய கனத்துடன் பெற்றார்கள், இதை அவர்கள் இலகுவாகக் கருதவில்லை என்பதையும் இது அர்த்தப்படுத்துகிறது. ஆன்மீகத் தலைவர்களாகிய நாம், இயேசுவின் நாமத்தில்

விசுவாசிகளுக்கு அன்புடன் உபதேசிப்பது நம்முடைய புனிதமான கடமையாகும்.

[பின் குறிப்பு: இங்கே ஆன்மீக அதிகாரத்தைப் பயன்படுத்துகிறோம் என்ற சாக்குப்போக்கில் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்தி எந்த ஆன்மீகத் தலைவரும் நம்மை கட்டுப்படுத்தவோ, கையாளவோ அல்லது துஷ்பிரயோகம் செய்யவோஅனுமதிக்கக்கூடாதுஎன்பதில்நாம்எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இத்தகைய துஷ்பிரயோகத்தால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் (1 பேதுரு 5:2-4).]

---

இயேசுவின் நாமம் அதன் எந்த வல்லமையையும் இழக்கவில்லை. இயேசுவின் நாமத்தில் குணப்படுத்துதல்கள், அற்புதங்கள் மற்றும் விடுதலைகள் உள்ளன. இயேசுவின் நாமத்தில் பெரிய அற்புதங்கள் நிகழலாம்.

---

## சிந்தனைக்கு

25-29 அத்தியாயங்களுக்கானது.

1) பிசாசினால் அதிகாரம் பெற்றிருந்தும், இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதற்காக போலியானவர்களை சாத்தான் ஏன் ஏற்படுத்துவான் என்று யோசித்துப் பாருங்கள்? விசுவாசிகளாகிய நாம் எப்படி இயேசுவின் நாமத்தின் இத்தகைய போலியான பயன்பாடுகளை பகுத்தறிந்து கண்டறிவது?

2) கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக நீங்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் அதன் வழியாக எப்படி பயணித்தீர்கள்? உங்கள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் துன்புறுத்தலின் போதும், நீங்கள் ஒருபோதும் விசுவாசத்தை மறுதலிக்க மாட்டீர்கள்,

அவருடைய நாமத்தை ஒருபோதும் மறுக்க மாட்டீர்கள் என்ற உங்கள் தீர்மானத்தில் நீங்கள் உறுதியாக இருக்கிறீர்களா?

3) அவருடைய நாமத்திற்காக, அவருடைய ராஜ்யத்தின் பணிக்காக அல்லது ஏதாவது ஒரு வழியில் அவருக்குச் சேவை செய்ய நீங்கள் தியாகம் செய்வதற்காக கர்த்தரால் அழைக்கப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் அதன் வழியாக எப்படி பயணித்தீர்கள்? இயேசுவின் நாமத்திற்காக அவர் உங்களிடம் கேட்கும் எந்தத் தியாகத்தையும் செய்ய நீங்கள் தயாராக இருப்பதற்காக இயேசுவின் மீது அவ்வளவு பெரிய அன்பை வைத்திருக்கிறீர்களா?

4) அவருடைய நாமத்தால் அறியப்பட்ட ஜனங்களாக இருக்கும்படிக்கு நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கர்த்தராகிய இயேசு கனம்பண்ணப்படுகிறார் மற்றும் மகிமைப்படுத்தப்படுகிறார் என்று நீங்கள் உறுதியாக நம்பும் சில பகுதிகள் உங்கள் வாழ்க்கையில் உள்ளதா? நீங்கள் கொண்டிருக்கிற இயேசுவின் நாமத்தை கனம்பண்ணாத அல்லது மகிமைப்படுத்தாத பகுதிகள் உங்கள் வாழ்க்கையில் உள்ளதா? நேர்மறையான விஷயங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்த சிறிது நேரம் ஒதுக்குங்கள், மேலும் உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் இயேசுவின் நாமம் மகிமைப்படும்படி எதிர்மறையானவைகளை மாற்றும்படி அவரிடம் கேளுங்கள்.

5) பழைய ஏற்பாட்டில் (அத்தியாயம் 3) விவரிக்கப்பட்டுள்ளபடி, அன்றாட வாழ்வில் கர்த்தரின் நாமத்தை அழைப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள், மேலும் புதிய ஏற்பாட்டிலிருந்து (அத்தியாயங்கள் 10-29) நீங்கள் கற்றுக்கொண்ட அனைத்தையும் குறித்து சிந்தித்து பாருங்கள். கர்த்தரின் நாமத்தைப் பயன்படுத்துவதில் என்ன ஒற்றுமைகள் உள்ளன?

# 30

# இயேசுவின் நாமம் சதாகாலங்களிலும் உள்ளது

வேதாகமத்தின் கடைசி புத்தகமான, வெளிப்படுத்தின விசேஷம், இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷம் என்று கூறி தொடங்குகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என்ற ஆசீர்வாதத்துடன் முடிவடைகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில், கர்த்தராகிய இயேசுவை குறிப்பிடும் பல நாமங்களையும் தலைப்புகளையும் நாம் பார்க்கிறோம்.

- *உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், அதிபதியும்* (வெளிப்படுத்தின விசேஷம் 1:5)
- *அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறவர்* (வெளிப்படுத்தின விசேஷம் 1:8)
- *முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறவர்* (வெளிப்படுத்தின விசேஷம் 1:11)
- *யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர்* (வெளிப்படுத்தின விசேஷம் 5:5)
- *ஆட்டுக்குட்டியானவர்* (வெளிப்படுத்தின விசேஷம் 5:12)
- *தேவனுடைய வார்த்தை* (வெளிப்படுத்தின விசேஷம் 19:13)
- *ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா* (வெளிப்படுத்தின விசேஷம் 19:16)

மற்றும் இன்னும் பல...

இயேசு தனக்கென ஒரு புதிய நாமத்தை வைத்திருப்பதைக் குறிப்பிடுவது சுவாராஸ்யமானது ஆகும்.

**வெளிப்படுத்தின விசேஷம் 3:12**
**ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.**

*"எனது புதிய நாமம்"* என்றால் என்ன? இது ஒரு இரகசியம். இந்த அவதாரத்திற்கு முன் அவருக்கு இல்லாத நாமமான இயேசு என்ற நாமம், அவர் பிறந்தபோது அவருக்கு வழங்கப்பட்டு, அவர் செய்தவற்றின் காரணமாக அவருக்கு வழங்கப்பட்ட நாமமா? இந்த நேரத்தில் வேதாகமம் வெளிப்படுத்தாத மற்றொரு தலைப்பு அவருக்கு வழங்கப்படுமா? நமக்கு தெரியாது. நாம் இதை இவ்வாறு விளக்கலாம்—வசனம் 12 (கிரேக்க *கைனோஸ்*) இல் உள்ள "புதிய" என்ற சொல், தன்மை, இயல்பு, தரம் மற்றும் புத்துணர்ச்சி ஆகியவற்றில் புதியதாக இருப்பதைக் குறிக்கிறது. இது "புதியது" (கிரேக்கம் *நியோஸ்*) என்ற சொல்லிலிருந்து வேறுபட்டது, இது காலப்போக்கில் அல்லது சமீபத்திய புதியதைக் குறிக்கிறது.

இந்த இறுதி அத்தியாயத்தில், "என்றென்றும் நிலைத்திருக்கிறதான நகரமான" புதிய எருசலேமில் தேவனுடைய ஜனங்கள் அனைவரின் நெற்றியிலும் அவருடைய நாமம் உள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நாம் என்றென்றும் சொந்தமானவர்கள் என்பதற்கு இது ஒரு அடையாளம் ஆகும்.

**வெளிப்படுத்தின விசேஷம் 22:1-5**
**[1]பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்.**

**[2]நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள்.**
**[3] இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.**
**[4] அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும்.**
**[5] அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்.**

அவருடைய நாமம் என்றென்றும் நம் மீது இருக்கும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வோமாக!

---

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

**பிலிப்பியர் 2:9-11**

---

ஆமென்!

# சிந்தனைக்கு

1) இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டீர்கள். நல்லது! இந்தப் புத்தகத்தில் இயேசுவின் நாமத்தைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்ட அனைத்தையும் மதிப்பாய்வு செய்து சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள். உங்கள் ஆன்மீக வாழ்க்கையில் நீங்கள் ஒருங்கிணைத்த முக்கிய பாடங்கள் யாவை? தேவனுடனான உங்கள் உறவின் நிரந்தரப் பகுதியாக நீங்கள் ஏற்றுக்கொண்ட சில உண்மைகள் யாவை?

2) நாம் ஒரு தலைப்பை அடிக்கடி மதிப்பாய்வு செய்யும்போது, விஷயங்களைக் கண்டுபிடிப்போம், சத்தியத்தின் புதிய அம்சங்களைக் கண்டுபிடிப்போம், மேலும் வெளிப்பாட்டைப் பெறுகிறோம், மேலும் நாம் ஏற்கனவே கற்றுக் கொண்டவைகளில் பலப்படுத்தப்படுகிறோம். **“இயேசுவின் வல்லமையான நாமம்”** மூலமாக இந்த உண்மையை அடிக்கடி மதிப்பாய்வு செய்யுங்கள். விரைவில் இந்த புத்தகத்தை மீண்டும் படிக்க திட்டமிடுங்கள். அதை உங்கள் நாட்காட்டியில் குறிக்கவும்.

3) சத்தியத்தைப் பற்றிய மிக ஆழமான புரிதல் அனுபவத்தின் மூலம் வருகிறது. இயேசுவின் வல்லமையான நாமத்தில் காணப்படும் வல்லமையின் அனுபவத்தை தொடர்ந்து ஆழப்படுத்துங்கள்.

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

**ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற

விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம் (கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார் - உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்"*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் ஒரு திருச்சபையும்,** ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், தேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்து ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள்

நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, **apcwo.org/locations** ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது **contact@apcwo.org** க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

# இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don’t Compromise Your Calling
Don’t Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God’s Purpose for Your Life
Giving Birth to the Purposes of God
Gifts of the Holy Spirit
God Is a Good God
God’s Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Interpreting Scripture
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses—Don’t Take Them
Open Heavens
Our Redemption
Receiving God’s Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father’s Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner’s Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Praying in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work—Its Original Design

புதியபுத்தகங்கள்தொடர்ந்துவெளியிடப்படுகின்றன.PDF,ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய **apcwo.org/books** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு **apcwo.org/sermons** என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் ஆலோசனை மையம்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் ஆலோசனை மையமானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில்ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

**இளம் பிராய நடத்தை**

**பிறரோடு இணைக்கக் குறைபாடு**

**உறவுமுறை சவால்கள்**

**கல்வியில் பின்தங்கிய நிலை**

**தொழில் தொடர்பான பிரச்சினைகள்**

**குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்குப் பின்**

**பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்**

**நடத்தையில் சீர்கேடு**

**ஆளுமை குறைபாடு**

**உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்**

**மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி**

**மது / போதைப்பொருளுக்கு அடிமை**

**ஆவிக்குரிய போராட்டங்கள்**

**வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை**

கிரிசாலிஸ் ஆலோசனை சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**வலைதளம்: chrysalislife.org**
**தொலைபேசி:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998
**மின்னஞ்சல்: counselor@chrysalislife.org**

கிறிசாலிஸ் ஆலோசனை என்பது ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள்ஸ் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள்ஸ் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC வங்கி, 7M/308 80 Ft Rd, HRBR லேஅவுட், கல்யாண் நகர், பெங்களூரு, கர்நாடகா 560043

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள்ஸ் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்ஸ் சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* ***apcwo.org/give*** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.


**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## DOWNLOAD THE FREE APP!

*Search for*
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# निःशुल्क ऐप डाउनलोड करें:

**ऐप स्टोर या प्ले स्टोर में खोजें**
**“ऑल पीपुल्स चर्च (APCWO)”/**
**All Peoples Church Hindi**

Available on the App Store

ANDROID APP ON Google Play




*विश्वास को मजबूत करने और सुसमाचार साझा करने के लिए विभिन्न विषयों पर आधारित वचनों के टूलकिट।*
*उपदेशों, टीवी कार्यक्रमों, पुस्तकों, संगीत और बहुत कुछ से भरे संसाधन।*
*अगर आपको यह पसंद आए, तो*
***दूसरों को भी इसके बारे में बताएं!***

# ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி

**apcbiblecollege.org**

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் வேதாகமக் கல்லூரியில் (APC-BC), ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்.

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம் - மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், திங்கள் முதல் வெள்ளி வரை, இந்திய நேரப்படி காலை 9:00 முதல் நண்பகல் 12 மணி வரை (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

ஒவ்வொரு விசுவாசியும் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தை அழைக்கவும், சொல்லவும், பயன்படுத்தவும் கூடிய அற்புதமான பாக்கியத்தைப் பெற்று ஆசிர்வதிக்கப்பட்டுள்ளார்கள். இயேசுவின் சீஷர்களும், ஆரம்பகால திருச்சபையின் விசுவாசிகளும் இயேசுவின் நாமத்தைப் பயன்படுத்துவதன் மூலம் தங்கள் வசம் இருந்த அதிகாரத்தைப் புரிந்துகொண்டு அதன்படி செயல்பட்டார்கள்.

இயேசுவின் நாமத்தின் வல்லமையை மீண்டும் கண்டறிய விசுவாசிகளுக்கு உதவ இந்த புத்தகம் முயற்சிக்கிறது மற்றும் அன்றாட வாழ்க்கையில் அந்த நாமத்தின் வல்லமையில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதையும் கற்பிக்கிறது. இயேசுவின் நாமத்தின் வல்லமையில் நடக்க நாம் கற்றுக் கொள்ளும்போது, நாம் அதிகாரத்திலும், ஆதிக்கத்திலும், பரிபூரண சமாதானத்திலும், தேவன் அருளும் அனைத்து ஏற்பாடுகளிலும் செயல்பட முடியும்.

**All Peoples Church & World Outreach**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org